# அத்தியாயம் 9

# வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா

## 9.1 பொதுவான நிகழ்வுகள்

2003 இல் வெளிநாட்டுத்துறை 2002 இல் காணப்பட்ட மீட்சியிலிருந்து உத்வேகமடைந்தது. பன்னாட்டு வர்த்தகம் விரிவடைந்தது. பணி மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான பெறுகைகள் வளர்ச்சியடைந்து நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைவடையச் செய்தன. நிதியியல் மற்றும் மூலதனக் கணக்கினூடாக அதிகரித்த உட்பாய்ச்சலானது நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை பெருமளவு எதிரீடு செய்து தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் சென்மதி நிலுவையில் கணிசமானதொரு மிகையை விளைவித்தது. இதனைத் தொடர்ந்து, நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் மேலும் வசதியான நிலைக்கு உயர்வடைந்தன. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினால் அளவிடப்படும் வெளிநாட்டுப் போட்டித்தன்மை மேம்பாடடைந்ததுடன் வர்த்தக மாற்று வீதமும் மேம்பாடடைந்தது. வெளிநாட்டுப் படுகடன் பணி விகிதம் வீழ்ச்சியடைந்தது. ஆண்டு முடிவில் நிலவிய நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சில தளம்பல்கள் காணப்பட்ட போதிலும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை ஆழமாக விரிவாக்கமடைந்துள்ளது. இவ் அபிவிருத்திகள் அனைத்தும் நாட்டின் வெளிநாட்டு அதிர்வுகளை தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கு உதவும்.

உலகப் பொருளாதாரம் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரம் ஆகியவற்றின் சாதகமான அபிவிருத்திகளுக்கு வெளிநாட்டுத்துறை சாதகமாக பதிலிறுத்துள்ளது. உலகப் பொருளாதாரம் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட 3.2 சதவீத வளர்ச்சியை விட கூடுதலாக 3.9 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்துள்ள அதேவேளை இலங்கையின் முக்கிய ஏற்றுமதிச் சந்தையான ஐக்கிய அமெரிக்கா 3.1 சதவீத வளர்ச்சி கொண்ட சிறப்பானதொரு செயலாற்றத்தினைக் காட்டியது. ஒப்பீட்டளவில் ஈராக் யுத்தமானது விரைவாக முடிவுற்றதால் இதன் தாக்கம் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் குறைவாக இருந்தது. எனினும் ஈராக் யுத்தத்தைத் தொடர்ந்து, எண்ணெய் விலை வீழ்ச்சியடையுமென்ற எதிர்பார்ப்புக்கு மாறாக 2003 இல் எண்ணெய் விலைகள் உயர்வடைந்தன. உயர்வான எண்ணெய் விலைகளின் மோசமான தாக்கமானது சாதகமான உள்நாட்டு வானிலை நிலைமைகளினால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டதுடன், இது வெப்ப மின்வலுவின் பாவனையைக் குறைத்தது.

உள்நாட்டைப் பொறுத்தவரையில், தொடரும் யுத்தநிறுத்தம், மேம்பாடடைந்த பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் என்பன எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியானதொரு அடித்தளமிடப் பங்களித்துள்ளன. இது வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யப்பான் மற்றும் ஏனைய கொடையாளர்களிடமிருந்தான அதிகரிக்கப்பட்ட உதவி என்பனவற்றின் ஒப்புதலுக்கு இட்டுச் சென்றுள்ளது. இவ் அபிவிருத்திகளும் வெளிநாட்டுத் துறை மீது சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. 2002 இல் பூர்த்தி செய்யப்பட்ட துணை நில் ஒழுங்குகளின் கீழான உதவிகளைக் காட்டிலும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் வழங்கப்படும் வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி கடன்கள் கூடிய சலுகை ரீதியான நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. இது அரசாங்கத்தின் நடுத்தர கால பொருளாதாரக் கொள்கைகள் மீதான ஒப்புதலாகவும் கருதப்பட்டது. இவ் ஒப்புதலானது ஏனைய கொடையாளிகளிடமிருந்தும் பெருமளவானதொரு தொகை உதவிகளைப் பெற்றுக்கொள்ள உதவியது. 2003 யூனில் டோக்கியோவில் நடைபெற்ற கொடையாளர் மகாநாட்டில் 2003 – 2006 காலப்பகுதிக்கு ஐ.அ.டொலர் 4.5 பில்லியனை உதவியாக வழங்க கொடையாளிகள் உறுதியளித்துள்ளனர்.

2003 இல் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை ஐ.அ.டொலர் 502 மில்லியன் மிகை ஒன்றினை பதிவு செய்ததுடன், இது 1993 இன் பின்னரான ஆகக்கூடிய மிகையாக இருந்தது. சுற்றுலாத்துறையின் விரைவான மீட்சி, துறைமுகச் செயற்பாடுகளிலான தொடர்ச்சியான அதிகரிப்பு, வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் உயர்ந்தளவிலான பணவனுப்பல்கள், மற்றும் அரசாங்கத்தின் வெளிநாட்டு உதவிகளின் அதிகரித்த பயன்பாடு என்பன இவ்வுயர்ந்தளவிலான மிகைக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாகும். வர்த்தகப் பக்கத்தில், உலக பொருளாதாரத்தின் சாதகமான அபிவிருத்திக்கு ஏற்றுமதிகள் சாதகமாகப் பதிலிறுத்ததுடன், ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் 9 சதவீதமான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தன. ஏற்றுமதிகளிலான மீட்சியானது வேளாண்மை ஏற்றுமதிகளின் 3 சதவீதமான வளர்ச்சியுடனும், கைத்தொழில் ஏற்றுமதிகளின் 10 சதவீத வளர்ச்சியுடனும் பரவலடைந்து

## அட்டவணை 9.1
## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

(வர்த்தக வங்கிகளின் வெ.நா.வ.தொ. பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது)(அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(ஆ) | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(ஆ) |
| வர்த்தக நிலுவை | -1,369 | -1,798 | -1,157 | -1,406 | -1,539 | -96,702 | -134,176 | -102,592 | -134,706 | -148,324 |
| ஏற்றுமதிகள் | 4,610 | 5,522 | 4,817 | 4,699 | 5,133 | 325,170 | 420,114 | 430,372 | 449,855 | 495,426 |
| இறக்குமதிகள் | 5,979 | 7,320 | 5,974 | 6,106 | 6,672 | 421,873 | 554,290 | 532,964 | 584,561 | 643,750 |
| பணிகள்: (தேறிய) (இ) | 147 | 38 | 204 | 295 | 396 | 10,342 | 2,907 | 14,692 | 28,224 | 38,152 |
| பெறுகைகள் | 968 | 953 | 1,355 | 1,268 | 1,408 | 68,132 | 72,187 | 120,937 | 121,340 | 135,831 |
| கொடுப்பனவுகள் | 820 | 915 | 1,151 | 974 | 1,012 | 57,791 | 69,280 | 106,246 | 93,115 | 97,680 |
| வருமானம் (தேறிய) | -254 | -305 | -267 | -253 | -192 | -17,831 | -23,009 | -23,842 | -24,174 | -18,540 |
| மீளப் பெறுகைகள் | 167 | 152 | 108 | 75 | 144 | 11,810 | 11,568 | 9,584 | 7,201 | 13,855 |
| கொடுப்பனவுகள் | 421 | 456 | 375 | 328 | 336 | 29,640 | 34,577 | 33,425 | 31,375 | 32,396 |
| பொருட்கள், பணிகள் வருமானம் (தேறிய) | -1,476 | -2,064 | -1,220 | -1,364 | -1,335 | -104,191 | -154,278 | -111,742 | -130,655 | -128,713 |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 887 | 974 | 984 | 1,097 | 1,205 | 62,472 | 73,620 | 87,837 | 104,980 | 116,321 |
| பெறுகைகள் (ஈ) | 1,056 | 1,160 | 1,155 | 1,287 | 1,414 | 74,356 | 87,697 | 103,180 | 123,183 | 136,446 |
| கொடுப்பனவுகள் | 169 | 186 | 172 | 190 | 209 | 11,884 | 14,078 | 15,343 | 18,202 | 20,125 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 26 | 24 | 22 | 31 | 29 | 1,816 | 1,801 | 1,925 | 2,982 | 2,785 |
| நடைமுறைக் கணக்கு | -563 | -1,066 | -215 | -237 | -101 | -39,903 | -78,857 | -21,980 | -22,693 | -9,608 |
| மூலதன நிதியியல் கணக்குகள் | 373 | 443 | 562 | 444 | 702 | 30,473 | 31,827 | 49,077 | 40,634 | 67,851 |
| மூலதனக் கணக்கு | 80 | 50 | 198 | 65 | 61 | 5,650 | 3,795 | 17,766 | 6,219 | 5,927 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) (உ) | 80 | 50 | 198 | 65 | 61 | 5,650 | 3,795 | 17,766 | 6,219 | 5,927 |
| பெறுகைகள் | 86 | 56 | 203 | 71 | 68 | 6,018 | 4,230 | 18,241 | 6,782 | 6,550 |
| கொடுப்பனவுகள் | 5 | 6 | 5 | 6 | 6 | 368 | 435 | 475 | 563 | 622 |
| நிதியியல் கணக்குகள் | 293 | 393 | 364 | 379 | 641 | 24,823 | 28,032 | 31,311 | 34,414 | 61,924 |
| நீண்டகாலம் | 435 | 304 | 163 | 326 | 717 | 30,985 | 22,594 | 14,337 | 28,905 | 69,155 |
| நேரடி முதலீடுகள் | 177 | 176 | 172 | 185 | 201 | 12,449 | 13,319 | 15,271 | 17,716 | 19,450 |
| வெளிநாட்டு நேரடிமுதலீடு(தேறிய) | 177 | 173 | 82 | 181 | 171 | 12,449 | 13,119 | 7,310 | 17,281 | 16,557 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | - | 3 | 90 | 5 | 30 | - | 200 | 7,961 | 435 | 2,893 |
| தனியார் நீண்டகால (தேறிய) | 196 | 82 | -257 | -21 | -33 | 14,086 | 5,622 | -22,918 | -2,044 | -3,215 |
| உட்பாய்ச்சல் (ஊ) | 361 | 298 | 44 | 115 | 102 | 25,727 | 22,134 | 4,016 | 11,007 | 9,855 |
| வெளிப்பாய்ச்சல் (உ) | 165 | 216 | 301 | 136 | 136 | 11,641 | 16,512 | 26,934 | 13,052 | 13,070 |
| அரச நீண்டகால (தேறிய) | 62 | 47 | 249 | 162 | 548 | 4,451 | 3,653 | 21,984 | 13,233 | 52,920 |
| உட்பாய்ச்சல் | 381 | 355 | 575 | 542 | 908 | 26,896 | 26,965 | 51,193 | 51,843 | 87,554 |
| வெளிப்பாய்ச்சல் | 319 | 308 | 326 | 380 | 359 | 22,445 | 23,312 | 29,209 | 38,610 | 34,634 |
| குறுங்கால | -142 | 88 | 201 | 53 | -76 | -6,162 | 5,438 | 16,974 | 5,509 | -7,231 |
| பட்டியலிடப்பட்டமுதலீடுகள்(தேறிய) | -13 | -45 | -11 | 25 | 2 | -886 | -3,355 | -1,025 | 2,443 | 209 |
| தனியார் குறுங்கால (தேறிய) | -10 | 100 | -42 | 68 | 18 | -667 | 7,569 | -3,798 | 6,548 | 1,790 |
| வர்த்தக வங்கிச் சொத்துக்கள் (தேறிய) | -19 | -141 | 183 | 104 | -94 | 1,766 | -18,736 | 2,867 | 6,893 | -9,090 |
| வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள்(தேறிய) | -101 | 174 | 71 | -145 | -2 | -6,375 | 19,960 | 18,929 | -10,375 | -141 |
| அரச குறுங்கால (தேறிய) | - | - | - | - | - | - | - | - | - | - |
| சிஎஉ ஒதுக்கீடுகள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெறுமதி சீராக்கம் | - | - | - | 93 | - | 2,103 | 5,189 | 22,245 | 8,900 | - |
| பிழைகளும் தவறுகளும் | -73 | 101 | -127 | 38 | -99 | -6,857 | 10,902 | -19,578 | 9,209 | -9,634 |
| மொத்த நிலுவை(எ) | -263 | -522 | 220 | 338 | 502 | -14,184 | -30,939 | 29,765 | 36,051 | 48,610 |
| நாணய அசைவுகள்(எ) | 263 | 522 | -220 | -338 | -502 | 14,184 | 30,939 | -29,765 | -36,051 | -48,610 |
| செலாவணி வீதங்கள் ரூபா/ஐ.அ.டொ. | 70.39 | 75.78 | 89.36 | 95.66 | 96.52 | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதம் சதவீதத்தில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | -8.7 | -10.8 | -7.4 | -8.5 | -8.4 | | | | | |
| நடைமுறைக் கணக்கு | -3.6 | -6.4 | -1.4 | -1.4 | -0.6 | | | | | |
| கொடைகளற்ற நடைமுறைக்கணக்கு | -3.6 | -6.6 | -1.5 | -1.6 | -0.7 | | | | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விபரம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993)சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994இலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) 2001இல் பணிப் பெறுகைகள், 2001 யூலையில் வானூர்தி நிலைய தாக்குதலிக்போது அழிக்கப்பட்ட வானூர்திகளுக்காகப் பெறப்பட்ட காப்புறுதிக் கட்டணமாக சிறிலங்கன் ஏயர்லைன்சினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 382.4 மில்லியனையும் உள்ளடக்குகின்ற வேளையில் 2001ஆம் ஆண்டின் பணிக்கொடுப்பனவுகள் வானூர்தி வாடகைக் காரருக்குச் செலுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 292.8 மில்லியனை உள்ளடக்குகிறது. இக் காப்புறுதிக் கோரல்களின் தேறிய பெறுகைகள் ஐ.அ.டொலர் 89.6 மில்லியனாக இருந்தன.

(ஈ) 1990இல் வளைகுடா யுத்தத்தின் காரணமாக குவைத்தில் வேலைவாய்ப்பை இழந்த இலங்கையருக்கு 1999,2000 ஆகிய ஆண்டுகளில் முறையே 37,343, 29,323 இலங்கையர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 85 மில்லியன், ஐ.அ.டொலர் 45 மில்லியன் இழப்பீட்டை உள்ளடக்குகின்றது. மேலும் 1999இல் 18,244 இலங்கையர்களால் இரண்டாம் சுற்றுக் கொடுப்பனவுகளாக ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 1,500 அடிப்படையில் ஐ.அ.டொலர் 27 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(உ) தனியார் மூலதன வெளிப்பாய்ச்சலின் கீழான தொழில்நுட்பக் கடன் தீர்ப்பனவு தொடர்பான ஐ.அ.டொலர் 147.6 மில்லியனையும் 2001 யூலையில் வானூர்நிலைய தாக்குதலின்போது அழிக்கப்பட்ட வானூர்தியின் எஞ்சிய மூலதனத்துக்கான 2001இன் மூலதனமாறல் பெறுகைகளின் கீரான தொடர்பான சீராக்கங்களையும் உள்ளடக்குகிறது.

(ஊ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வானூர்திகளுக்கான மூலதன உட்பாய்ச்சலுக்கு 1999இலும், 2000இலும் செய்யப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்குகின்றது.

(எ) நாணயத் துறையிலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதிச் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

காணப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளினுள், ஆடைகளின் ஏற்றுமதிகள் 6.3 சதவீத வளர்ச்சி ஒன்றினைப் பதிவு செய்த அதேவேளை மற்றைய ஏற்று மதிகள் 16.2 சதவீத வலுவானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்து, இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆடைகளல்லாத ஏற்றுமதிகளை நோக்கி பன்முகப்படுத்தப்படும் அனுகூலமானதொரு நிலையை பிரதிபலித்தது. இவ்வாண்டில் இறக்குமதிகளும் ஐ.அ.டொலர்களில் 9 சதவீதவளர்ச்சியைக் காட்டின. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 12 சதவீதத்தினாலும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 13 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. குறிப்பாக இரண்டாம் அரைப்பகுதியில் ஏற்பட்ட மூலதனப் பொருட்களின் இறக்குமதி மீட்சியானது, எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததொரு சூழ்நிலையை உருவாக்கி பொருளாதாரத்தில் முதலீட்டுச் செயற்பாடு விரிவடைந்து செல்வதனை எடுத்துக்காட்டியது.

சுற்றுலா வருவாய்களிலான செழிப்பு மற்றும் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்புக்கள் என்பன காரணமாக 2003 இல் பணிகள் கணக்கு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைப் பதிவு செய்தது. சுற்றுலாத் தொழிற்றுறை தொடரும் யுத்த நிறுத்தத்திலிருந்து நேரடியாக பயனடைந்தது. அத்துடன் அதிகரித்த நீர் மின்வலு பாவனை காரணமாக வாடகைக்கமர்த்தப்பட்ட மின்வலுவுக்கான வாடகைக் கொடுப்பனவுகள் தொடர்பான வெளிப்பாய்ச்சல்களில் ஏற்பட்டதொரு வீழ்ச்சியும் இம் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தது. அதேவேளை அலுவல்சார் ஒதுக்குகளிலிருந்து பெருமளவிலான வருமானம் உருவாக்கப்பட்டதன் காரணமாக வருமானக் கணக்குப் பற்றாக்குறை இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்துள்ளது. தொழிலாளர் பண அனுப்புதல்கள் அதிகரித்ததன் காரணமாக நடைமுறை மாற்றல்கள் தொடர்ச்சியாக 9 சதவீத உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்தன. பணிகள், வருமானம் மற்றும் மாற்றல் கணக்குகள் என்பவற்றிலான முன்னேற்றங்கள் ஓரளவு பாரிய வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தை எதிரீடு செய்ததன் விளைவாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2002 இன் ஐ.அ.டொலர்கள் 237 மில்லியன்களிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 1.4 சதவீதம்) ஐ.அ.டொலர்கள் 101 மில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியில் 0.6 சதவீதம்) குறைவடைந்துள்ளது.

அதேவேளை, கடன்கள், கொடைகள், மற்றும் தனியார் மயமாக்கல் பெறுகைகள் மற்றும் தொடர்ச்சியான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பவற்றினூடான அரசுக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் மூலதன மற்றும் நிதிக்கணக்குகளின் மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தன. இதன் விளைவாக உருவான திரண்ட மிகையானது 2002 இறுதியின் 3.3 மாதங்களுக்கான இறக்குமதிகளை நிதியிடுவதற்கான மட்டத்திலிருந்து 2003 இல் 4.2 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கு சமமான மட்டத்திற்கு அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்தது. நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள், அதாவது அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வர்த்தக வங்கிகளுக்குச் சொந்தமாகவுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் என்பன 2002 இறுதியின் 4.9 மாதங்களுக்கான இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 2003 இல் 5.8 மாதங்களுக்கான இறக்கு மதிகளுக்கு நிதியிடுவதற்குப் போதுமானதாக இருந்தது. ஒதுக்குகளிலான அதிகரிப்பானது நாட்டின் வெளிநாட்டுத் துறையின் பாதிப்படையக்கூடிய தன்மையைக் குறைத்துள்ளதுடன் செலாவணி வீதத்தை உறுதிப்படுத்தவும் உதவியது.

**அட்டவணை 9.2**
**வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம்**

| ஆண்டு | வளர்ச்சி வீதம்(அ) | | விலைச் சுட்டெண் (1997=100) | | வர்த்தக மாற்று விகிதம் (ஆ) | மொ. உ. உற்பத்தியின் சதவிகிதமாக | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்று மதிகள் | இறக்கு மதிகள் | ஏற்று மதிகள் | இறக்கு மதிகள் | | ஏற்று மதிகள் | இறக்கு மதிகள் |
| 2001 | -12.8 | -18.4 | 139.6 | 139.9 | 99.8 | 30.6 | 37.8 |
| 2002 (இ) | -2,4 | 2.2 | 141.2 | 137.7 | 102.5 | 28.4 | 36.9 |
| 2003 (ஈ) | 9.2 | 9.2 | 150.2 | 136.3 | 110.2 | 27.7 | 36.0 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) வளர்ச்சி வீதங்கள் ஐ.அ.டொலர் நியதிகளில் தரப்பட்டுள்ளது.
(ஆ) (ஏற்றுமதிச் விலைச்சுட்டெண்/இறக்குமதி விலைச் சுட்டெண்) X 100.
(இ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஈ) தற்காலிகமானவை.

**வரைபடம் 9.1**
**சென்மதி நிலுவை**




ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 0.01 சதவீதத்தினால் சிறிதளவால் தேய்வடைந்ததுடன், ஒப்பீட்டு ரீதியில் 2002 இல் இத்தேய்மானம் 3.7 சதவீதமாக இருந்தது. எனினும், ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக பன்னாட்டு வெளிநாட்டு

**வரைபடம் 9.2**
**வெளிநாட்டு வர்த்தகம்**

வரைபடம் 9.2.1
வர்த்தக நிலுவை




வரைபடம் 9.2.2
ஏற்றுமதி இறக்குமதி அளவுச் சுட்டெண்கள்
(1997 = 100)




வரைபடம் 9.2.3
அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் (1997 = 100)




வரைபடம் 9.2.4
பணிகளிலான வர்த்தகம்




செலாவணிச் சந்தையில் ஐக்கிய அமெரிக்க டொலர் முனைப்பாக தேய்வடைந்தமையினால், ரூபா யூரோ ஸ்டேர்லிங் பவுண், யென் மற்றும் சிஎஉ என்பவற்றுக்கெதிராக உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்தது. ஏனைய நாணயங்களுக்கெதிரான பாரிய பெறுமானத் தேய்வு மற்றும் உள்நாட்டுப் பணவீக்கத்தின் வீழ்ச்சி என்பன இரு உண்மைத் தாக்கமுள்ள செலாவணிவீதச் சுட்டெண்களான (உ.தா.செ.வீ.சு) 5 நாணயங்களைக் கொண்டதொரு உ.தா.செ.வீ.சு, 24 நாணயங்களைக் கொண்டதொரு உ.தா.செ.வீ.சு என்பவற்றினால் அளவிடப்படும் இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையை முறையே 2.8 சதவீதத்தினாலும் 3.4 சதவீதத்தினாலும் மேம்பாடடையச் செய்தன. அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்கள் காரணமாக வெளிநாட்டுப் படுகடனை தீர்ப்பனவு செய்யக்கூடிய நாட்டின் ஆற்றல் மேம்பட்டதைப் பிர திபலிக்கும் வகையில் படுகடன் பணிக்கொடுப்பனவு விகிதங்கள் வீழ்ச்சியடைந்தன.

## 9.2 ஏற்றுமதிகள்

இதற்கு முன்னர் ஒன்றரை ஆண்டுகளாக நிலவிய வீழ்ச்சிக்குப் பின்னர் 2002 இன் பிற்பகுதியில் ஆரம்பித்த வளர்ச்சி உந்து விசை தொடர்வதோடு, ஏற்றுமதித் துறை 2003 இல் மீட்சியடைந்தது. ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் 2002 இல் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த ஏற்றுமதிகள் 2003 இல் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதி வருவாய்கள் 2002 இன் ஐ.அ.டொலர் 4,699 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2003 இல் ஐ.அ.டொலர் 5,133 மில்லியன்களாகவிருந்தன. ஆடைகளின் ஏற்றுமதிகளினால் முதன்மை வகிக்கப்படும் கைத்தொழில் ஏற்றுமதிகள் இம்மேம்பாட்டிற்கு 80 சதவீத குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்தன. தேயிலை மற்றும் இறப்பர் என்பவற்றின் சாதகமான விலைகள் காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகளும் இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. உலகப் பொருளாதார மீட்சி, குறிப்பாக இலங்கை உற்பத்திகளான ஆடைகள், இயந்திர சாதனங்கள்,

பொறிகள் மற்றும் மின் கருவிகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், வைரங்கள், நண்டு மற்றும் இறால் வகைகள், மீன் உற்பத்திகள் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள் என்பவற்றின் சந்தையை வலுவடையச் செய்தது. மூன்று பிரதான ஏற்றுமதி வகைகளுள் வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதி ஐ.அ. டொலர்களில் 3 சதவீதத்தினாலும், கைத்தொழில் உற்பத்திகள் 10 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைகையில், கனிப்பொருள் ஏற்றுமதிகள் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

ஏற்றுமதிகளின் பெறுமதி அலகுச் சுட்டெண் 5.5 சதவீதத்தினால் உயர்வடைய, ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 3.5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. ஏற்றுமதி அளவு 2003 இன் முதலாம், இரண்டாம் காலாண்டுகளில் முறையே 6.8 சதவீதத்தினாலும், 10.2 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்ததெனினும் மூன்றாம் காலாண்டில் 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, நான்காம் காலாண்டில் 1.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இரண்டாம் அரை யாண்டிலான மெதுவான வளர்ச்சி செயலாற்றத்துக்கு குறிப்பாக இரத்தினக் கற்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் சில கைத்தொழில் உற்பத்திகள் என்பவற்றின் குறைவடைந்த வளர்ச்சியே காரணமாகும். 2002 இன் இரண்டாவது அரைப் பகுதியில் இவை கணிசமானளவு வளர்ச்சியடைந்திருந்தன. விலைகள் ஆண்டு முழுவதும் சாதகமானதாக இருந்தன. உயர் அலகுப் பெறுமதியானது பகுதியளவில் உற்பத்தி உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிப்பதுடன், இது ஒப்பீட்டளவில் அதிக பெறுமதி மற்றும் உயர் தரத்தைக் கொண்ட பொருட்களை நோக்கி நகர்ந்தது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பெருமளவான கைத்தொழில் உற்பத்திகளுக்கான பன்னாட்டு விலைகள் கடந்த ஆண்டினைப் பார்க்கிலும் உயர்வாக இருந்தன. கனிப்பொருளின் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியின் (-2 சதவீதம்) தாக்கத்தை எதிரீடு செய்து கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு முறையே 3.1 சதவீதத்தினாலும், 5.5 சதவீதத்தினாலும் அதிகரித்தது. இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட 1.8 சதவீத வீழ்ச்சியினால் வர்த்தக மாற்று வீதம் 2002 இன் 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2003 இல் 7.4 சதவீத மேம்பாட்டைக் காட்டியது.

**அட்டவணை 9.3**
**ஏற்றுமதிகளின் அமைப்பு**

| வகை | ஐ.அ. டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | **947** | **1,005** | **932** | **938** | **965** | **66,751** | **76,271** | **83,252** | **89,682** | **93,069** |
| தேயிலை | 621 | 700 | 690 | 660 | 683 | 43,728 | 53,133 | 61,602 | 63,105 | 65,937 |
| இறப்பர் | 33 | 29 | 24 | 27 | 39 | 2,305 | 2,179 | 2,129 | 2,552 | 3,718 |
| தெங்கு | 129 | 121 | 82 | 84 | 93 | 9,119 | 9,174 | 7,348 | 8,009 | 8,926 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 84 | 77 | 41 | 41 | 48 | 5,973 | 5,786 | 3,639 | 3,958 | 4,601 |
| ஏனையவை | 45 | 45 | 42 | 42 | 45 | 3,146 | 3,388 | 3,709 | 4,051 | 4,325 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 165 | 155 | 136 | 168 | 150 | 11,598 | 11,784 | 12,174 | 16,016 | 14,489 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (ஆ) | **3,551** | **4,283** | **3,710** | **3,631** | **3,977** | **250,516** | **325,931** | **331,687** | **347,657** | **383,833** |
| உணவு, குடிபானம், புகையிலை | 86 | 152 | 128 | 123 | 145 | 6,093 | 11,573 | 11,389 | 11,799 | 13,993 |
| புடவைகளும் ஆடைகளும் | 2,425 | 2,982 | 2,543 | 2,424 | 2,575 | 171,068 | 226,930 | 227,360 | 232,027 | 248,572 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 74 | 98 | 68 | 73 | 65 | 5,210 | 7,414 | 6,053 | 7,003 | 6,299 |
| இறப்பர் உற்பத்திகள் | 161 | 196 | 172 | 182 | 231 | 11,350 | 14,924 | 15,417 | 15,441 | 22,299 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 49 | 47 | 42 | 42 | 42 | 3,442 | 3,558 | 3,791 | 4,046 | 4,064 |
| தோலும் காலணியும் | 201 | 176 | 150 | 84 | 58 | 14,140 | 13,391 | 13,400 | 8,045 | 5,583 |
| பொறிகளும் கருவிகளும் | 201 | 244 | 245 | 266 | 290 | 14,155 | 18,594 | 21,895 | 25,509 | 27,951 |
| வைரங்களும் ஆபரணங்களும(இ) | 171 | 192 | 185 | 205 | 233 | 12,064 | 14,546 | 16,495 | 19,634 | 22,506 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 184 | 197 | 177 | 231 | 338 | 12,995 | 15,002 | 15,887 | 24,153 | 32,567 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | **64** | **97** | **86** | **90** | **84** | **4,540** | **7,352** | **7,666** | **8,628** | **8,069** |
| இரத்தினக் கற்கள் | 61 | 93 | 82 | 86 | 79 | 4,326 | 7,091 | 7,276 | 8,173 | 7,601 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 3 | 3 | 4 | 5 | 5 | 214 | 262 | 390 | 455 | 468 |
| 4. பாகுபடுத்தப்படாதவை (ஈ) | **48** | **137** | **88** | **41** | **108** | **3,363** | **10,560** | **7,767** | **3,883** | **10,455** |
| மொத்த ஏற்றுமதிகள் | **4,610** | **5,522** | **4,817** | **4,699** | **5,133** | 325,171 | **420,114** | 430,372 | **449,850** | **495,426** |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது
(இ) சுங்கத்தினால் 1999இலிருந்து பதிவு செய்யப்பட்ட வைரங்களின் ஏற்றுமதிகள், தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளால் சீராக்கஞ் செய்யப்பட்டது.
(ஈ) மீன் ஏற்றுமதிகள் உட்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி.
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

## ஏற்றுமதி அமைப்பு

1977 இன் தாராள மயமாக்கலின் பின்னர், கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு தொடர்ந்து விரிவடைந்து, ஏற்றுமதிகளுக்கான முக்கிய பங்காளராக விளங்கி 1986 இல் பெருந்தோட்ட வேளாண்மைப் பண்டங்களை முந்தியுள்ளது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 1977 இன் 14 சதவீதத்திலிருந்து, 2003 இல் 77 சதவீதத்திற்கு படிப்படியாக அதிகரித்துள்ளது. கடந்த 6 ஆண்டு காலப்பகுதியில் இவ் வீதம் 75 சதவீதத்திற்கு மேலாக காணப்பட்டது. கனிப்பொருள் ஏற்றுமதிகளையும் உள்ளடக்கிய ஏனைய ஏற்றுமதிகளின் பங்கு 1977 இன் 7 சதவீதத்திலிருந்து 2003 இல் 4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1986 இலிருந்து புடவைகள் மற்றும் ஆடைகள் கைத்தொழில், கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கு பெருமளவான பங்களிப்பைச் செய்ததோடு, 2003 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 65 சதவீத பங்களிப்புக்குக் காரணமாகவிருந்தது.

## கைத்தொழில் ஏற்றுமதிகள்

2002 இன் 2 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் மூலம் பெறப்பட்ட வருவாய்கள் 2003 இல் 10 சதவீதத்தால் அதிகரித்தன. 2003 இல் புடவைகள் மற்றும் ஆடைகள் மொத்த ஏற்றுமதி வருவாய் களில் 50 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. ஏனைய பிரதான ஏற்றுமதி வகைகளாக பொறிகள், இயந்திர சாதனங்கள் மற்றும் மின் கருவிகள் (6 சதவீதம்), வைரங்கள், ஆபரணங்கள் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் (ஒவ்வொன்றும் 4.5 சதவீதம்), உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (3 சதவீதம்), தோல் உற்பத்திகள், பாதணிகள், மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் (ஒவ்வொன்றும் 1 சதவீதம்) என்பன விளங்கியதுடன் நானாவித பொருட்கள் மொத்தமாக 7 சதவீதமாக இருந்தன.

கைத்தொழில் நாடுகளின் அதிகரித்த கேள்வி காரணமாக, கைத்தொழில் ஏற்றுமதிகளிலான அதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்பை புடவைகள் மற்றும் ஆடைகளின் உயர்ந்தளவான ஏற்றுமதிகள் வழங்கின. 2002 ஒத்தோபரிலிருந்து தொடர்ச்சியாக அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்த புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 2003 இல் ஐ.அ.டொலர்கள் 2,576 மில்லியன்களுக்கு 6.3 சதவீதத்தால் அதிகரித்தது. புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகு விலைகள் என்பன ஒவ்வொன்றும் 2003 இல் 3 சதவீதத்தினால் அதிகரித்தன.

ஐக்கிய அமெரிக்க நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான பிரதான ஏற்றுமதிச் சந்தைகளாகத் தொடர்ந்திருந்ததுடன், 2003 இல் அனைத்து ஆடைகள் ஏற்றுமதியில் 93 சதவீதத்திற்கு வகை கூறியன. ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பால் ஆடை ஏற்றுமதிகள் முறையே 4 சதவீதத்தாலும் 12 சதவீதத்தினாலும் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளை 2001 சனவரி 1 இலிருந்து அகற்றிய போதிலும், ஐரோப்பிய ஒன்றியத்தில் சந்தை வாய்ப்புக்கள் குறைவாக இருந்ததால் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை இலங்கையால் பெறமுடியவில்லை. இருப்பினும், உயர்ந்த தரத்தினையும் மற்றும் உயர் பெறுமதியினையும் கொண்ட ஆடைகளை ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு வழங்கல் செய்ததன் மூலம் இலங்கை 2003 இல் அனுமதிப் பங்குகளற்ற நுழைவு மூலம் நன்மை பெறக்கூடியதாக இருந்தது. 2004 பெப்புருவரி 1 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமை முறைமையின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சிறப்பு ஊக்குவிப்பு ஏற்பாடுகளின் கீழ் மேலதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்களிடையே ஆடைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் இம் மேல்நோக்கிய போக்கு 2004 இலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. அனுமதிப் பங்கு வரையறைகளின் கீழ், கனடாவுக்கான ஏற்றுமதிகளும் 2003 இல் 2 சதவீதத்தினால் அதிகரித்தன. அனுமதிப் பங்குகளற்ற ஏனைய நாடுகளுக்கான ஆடை ஏற்றுமதிகளின் ஒப்பீட்டுப் பங்கு 2002 இன் 4 சதவீதத்திலிருந்து 2003 இல் 5 சதவீதமாக அதிகரித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தை உள்ளடக்கியதான அனுமதிப் பங்குகளற்ற நாடுகளுக்கான ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் பங்கு 2002 இல் 35 சதவீதத்திலிருந்து 2003 இல் 37 சதவீதத்திற்கு அதிகரித்து, அனுமதிப் பங்கீட்டில் தொடர்ச்சியாக சார்ந்திருப்பது மெதுவானதொரு வீதத்திலேனும் குறைவடைவதைப் பிரதி பலிக்கின்றது.

புடவைகள் மற்றும் ஆடைகள் துறையிலுள்ள துணை வகைகளில், ஆடை ஏற்றுமதி 7 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளையில் புடவைகள் ஏற்றுமதி 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நூலிழை மற்றும் தயாரிக்கப்பட்ட ஏனைய பொருட்களின் ஏற்றுமதிகள் முறையே 10 சதவீதத்தினாலும், 8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. 2003 இல் 94 சதவீதத்திற்கும் அதிகமான புடவைகள் மற்றும் ஆடைகள் முதலீட்டுச் சபை தொழில் நிறுவனங்களினால் ஏற்றுமதி செய்யப்பட்டன. 2002 இன் 3 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின்

ஏற்றுமதி வருவாய் 8 சதவீதத்தினால் அதிகரித்தது. 2002 இன் 18 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் முதலீட்டுச் சபை சாராத தொழில் முயற்சிகளின், குறிப்பாக சிற்றளவான ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதிகள் 2003 இல் மேலும் 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து, விற்பனைகள், செலவு மற்றும் தரம் ஆகிய காரணிகளினால் நிர்ணயிக்கப்படும் சந்தையில் போட்டியிடுவதிலுள்ள இடர்ப்பாடுகளை வெளிக்காட்டின. 2003 இல் புடவைகள் மற்றும் ஆடைத்துறைகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய் 9 சதவீதத்தால் அதிகரித்தது. புடவைகளின் இறக்குமதி விலைகள் கடந்த ஆண்டினைப் போன்று மாறாமலிருந்தமையினால் இவ்வதிகரிப்பானது எதிர்பார்க்கப்பட்டதைப் போல் புடவைக் கைத்தொழிலில் காணப்பட்ட உயர்ந்தளவிலான பெறுமானம் கூட்டப்பட்ட உற்பத்திகளை நோக்கிய நகர்வை பிரதிபலிப்பதாகவுள்ளது.

2003 இல், புடவைகள் மற்றும் ஆடைகள் நீங்கலான கைத்தொழில் ஏற்றுமதிகள் 2002 இன் 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 16.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவைகளுக்கிடையில், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் மின் கருவிகள் 9 சதவீதத்தால் அதிகரித்தன. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 2002 இன் 6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 27 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வளர்ச்சியானது பிரதானமாக ரயர்கள் மற்றும் கையுறைகள் ஏற்றுமதி சார்ந்தனவாகும். ரயர்களில், அதாவது புதுப்பிக்கப்பட்ட ரயர்கள், புதிய காற்று நிரப்பக்கூடிய ரயர்கள், கடினமான மற்றும் மென்மையான ரயர்கள் என்பன ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த இறப்பர் உற்பத்திகளில் 52 சதவீதத்திற்கு வகை கூறியதுடன், 2003 இல் 42 சதவீதத்தினால் அதிகரித்தன. கைத்தொழில் மற்றும் அறுவைச் சிகிச்சைக் கையுறைகள் மொத்த இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் ஏற்றுமதியில் 31 சதவீதத்திற்கு வகை கூறி, 18 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. ஆடைகள் மற்றும் உடைத்துணைக்கருவிகள், நில விரிப்புக்கள் மற்றும் பாய்கள், மருந்தாக்கல் உற்பத்திகள், பாத்திரங்கள், விரிப்புக்கள் மற்றும் தோல் வார்கள் மற்றும் உள்ளக ரியூப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இறப்பரை அடிப்படையாகக் கொண்ட ஏனைய முக்கிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் இவ்வாண்டில் அதிகரித்தன.

வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி 2002 இன், 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2003 இல் 14 சதவீதத்தினால் அதிகரித்தது. பிரதான வியாபார மையங்களான பெல்ஜியம், இஸ்ரேல், வியட்நாம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் என்பவற்றிலிருந்தான உயர்ந்தளவான கேள்வியை பிரதிபலித்து 2003 இல், வைர ஏற்றுமதிகள் 13 சதவீதத்தால் அதிகரித்தன. 2002 இல் யப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் நிலவிய மந்தமான பொருளாதார சூழ்நிலைகளால் ஆபரணச் சந்தை பின்னடைவைக் கொண்டிருந்ததுடன் 2003 இல் உறுதியான முறையில் மீட்சியடைந்து, 26 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தங்கம், வெள்ளி, வைரங்கள், முத்துக்கள் மற்றும் இரத்தினக்கல் போன்ற மூலப்பொருள்

**வரைபடம் 9.3**
**முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் பங்கு**



இறக்குமதிகளுக்கு 2002 ஆகஸ்ட் மாதத்தின் பின் பெறுமதி கூட்டிய வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதால், இவ்வாண்டுக் காலத்தில் ஆபரண உற்பத்தியாளர்கள் நன்மை யடைந்தனர். சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சி காரணமாக உள்நாட்டுச் சந்தையிலும் வைரம் மற்றும் இரத்தினக் கற்களுக்கான கேள்வி தொடர்ந்தும் உயர்வாக இருந்தது. இலங்கையின் மிகப் பெரிய ஆபரணக் கொள்வனவாளராக ஜேர்மனி (20 சதவீதம்) இருந்ததுடன், அதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியம், யப்பான், சுவிற்சலாந்து, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பனவும் இருந்தன.

2003 இல் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2002 இன் 4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதத்தினால் அதிகரித்தன. நண்டு மற்றும் இறால் இனவகைகளுடன் மீன் மற்றும் உறைய வைக்கப்பட்ட மீன் வகையிலிருந்தான உயர்ந்தளவான வருவாய்கள் இதற்குக் காரணமாக இருந்ததுடன், இவை முறையே 20 சதவீதம் மற்றும் 18 சதவீதத்தினால் அதிகரித்தன. இருப்பினும், இவ் உற்பத்திகளுக்கான விலைகள் பன்னாட்டுச் சந்தையில் கடந்த ஆண்டை விடவும் குறைவாக இருந்தன. இறால் ஏற்றுமதிகளிலிருந்தான குறைந்தளவான வருவாய் இறால் பண்ணைத் தொழில் விரிவாக்கத்தை ஊக்கமிழக்கச் செய்தது. நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கானதொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீன்பிடி மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சு பண்ணைகளின் தரம் மற்றும் நியமங்களை மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறான வேண்டப்படும் தரம் மற்றும் நியமங்களுக்கெதிராக பண்ணைகளை நெருக்கமாகக் கண்காணித்து வருகின்றது. இவ்வொழுங்கு விதிகளை மீறும் பண்ணைகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்பொருட்களுக்கான கேள்வி ஐக்கிய அமெரிக்கா, யப்பான், பிரான்சு மற்றும் சிங்கப்பூர், கொங்கொங், தென்கொரியா, தாய்லாந்து உள்ளிட்ட சில ஆசிய நாடுகளில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளுக்கு மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்காக 2003 இல், ஐரோப்பிய மன்றம் எட்டு மீன் பதனிடும் தொழிற்சாலைகளை அங்கீகரித்தது. 2003 திசெம்பரில் முகத்துவாரத்திலுள்ள மீன்பிடித் துறைமுகத்தில் மீன்களைத் தகரத்தில் அடைத்தல் மற்றும் புகையிடுதல் தொழிற்சாலையின் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது. 2004 ஆகத்தில் உற்பத்தியை தொடங்குமென எதிர்பார்க்கப்படும் இத்திட்டம் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகளை இலக்குகளாகக் கொண்டுள்ளது. ஏனைய உணவு ஏற்றுமதிகளிடையே பழம் மற்றும் காய்கறி சாறுகள், தயாரிக்கப்பட்ட புகையிலை, தேங்காய்ப் பால் மா, தேங்காய்ப் பால் ஆடை, வடித்தெடுக்கப்பட்ட பால், இனிப்பு விசுக்கோத்து மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் என்பவற்றின் ஏற்றுமதிகள் 2003 இல் அதிகரித்தன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட நப்தா வலு உற்பத்திக்கான இணைந்த சுற்றோட்ட வலுப் பொறிமூலம் முழுமையாக உள்நாட்டிலேயே பயன்படுத்தப்பட்டதால், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளிலான வருவாய்கள் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், துறைமுகம் மற்றும் வானூர்திப் பணிகளிலான முன்னேற்றம் மற்றும் உயர் அலகு விலைகள் என்பன காரணமாக கப்பல் மற்றும் வானூர்தி எரிபொருட்களின் ஏற்றுமதிப் பெறுமானம் 9 சதவீதத்தால் அதிகரித்தது. பிளாத்திக்கு, மட்பாண்ட உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், காலணிகள் மற்றும் ஏனைய தோல் உற்பத்திப் பொருட்கள், மரப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பித்தளைப் பொருட்கள், பளிங்கு, தெங்குத்துணை உற்பத்திகள் போன்றவற்றின் ஏற்றுமதிகள் ஆண்டு காலத்தில் அதிகரித்தன.

## வேளாண்மை ஏற்றுமதிகள்

2003 இல் வேளாண்மை ஏற்றுமதிகளில் மூன்று பெருந்தோட்டப் பயிர்களின் பங்கு 84 சதவீதமாக விளங்கியதுடன், இதில் தேயிலை 71 சதவீதமாகவும், தெங்கு 9 சதவீதமாகவும் மற்றும் இறப்பர் 4 சதவீதமாகவும் இருந்தன. கறுவா, கராம்பு மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பவற்றினால் முதன்மை வகிக்கப்படும் ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகள், எஞ்சிய 16 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. பெருந்தோட்டப் பயிர்களின் அதிகரித்த ஏற்றுமதிகள் காரணமாக வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலான வருவாய்கள் 3 சதவீதத்தால் அதிகரித்தன.

## பெருந்தோட்டப் பயிர்கள்

2003 இல் தேயிலையிலிருந்தான வருவாய்கள், ஐ.அ.டொலர்கள் 683 மில்லியன்களுக்கு 4 சதவீதத்தால் அதிகரித்தன. ஈராக் யுத்தம் காரணமாக தேயிலை ஏற்றுமதிகள் பாதிப்படைந்தன. யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து பெருமளவான தேயிலை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதால் தேயிலை ஏற்றுமதி மே மற்றும் யூன் மாதங்களில் மீட்சியடைந்தது. இம் மீட்சி தொடர்ந்து இடம்பெற்று 2003 இன் பின்னரைப் பகுதியில் 11 சதவீதமானதொரு வளர்ச்சியை விளைவித்தது. இருப்பினும் வருடாந்த அதிகரிப்பு சிறிதளவாகவிருந்தது. 2003 மே மாதம் வரையில் தேயிலை ஏற்றுமதி விலைகள் 2002 இல் இருந்ததை விட குறைவானதாகவிருந்தது. அதனைத் தொடர்ந்து படிப்படியாக மீட்சியடைந்ததன் விளைவாக ஒரு கிலோ

கிறாமிற்கான சராசரி விலை 2002 இன் கிலோ கிறாம் ஒன்றிற்கான ஐ.அ.டொலர்கள் 2.26 இலிருந்து, மாறாக 2003 இல் கிலோ கிறாம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர்கள் 2.29 இற்கு அதிகரித்தது.

மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் 59 சதவீதம் தொகை வடிவத்திலும், 33 சதவீதம் பொதியிடப்பட்ட வடிவத்திலும் காணப்பட்டன. எஞ்சிய 8 சதவீதம் பைகளில் அடைக்கப்பட்ட தேயிலை மற்றும் வெளிநாட்டுத் தேயிலைகளுடன் கலக்கப்பட்ட உள்நாட்டுத் தேயிலை, உடன் மற்றும் பச்சைத் தேயிலை போன்ற உயர் பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை வடிவங்களில் காணப்பட்டன. 2003 இல், 19 சதவீதப் பங்குடன் ருசியா மிகப் பெரும் தனிக் கொள்வனவாளராகத் தொடர்ந்து விளங்கியது. 2003 மாச்சு 11 இலிருந்து ருசிய அரசாங்கம் பெறுமதி கூட்டிய கறுப்பு மற்றும் பச்சைத் தேயிலை மீதான ஆகக் குறைந்த இறக்குமதித் தீர்வையை கிலோகிறாம் ஒன்றிற்கு 0.40 யூரோவிலிருந்து 0.80 யூரோவிற்கு உயர்த்தியது. இதனுடன் அவர்கள் தேயிலையின் குறைந்தபட்ச பிரகடனப்படுத்தப்பட்ட பெறுமதியை 100 - 200 சதவீதத்தால் முனைப்பாக உயர்த்தினர். தீர்வைத் திருத்தத்திற்குட்படாத ருசியாவிற்கான தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதிகள் 2003 இல் 397 மெற்றிக்தொன்களால் 32,762 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன. ருசியாவிற்கான மொத்தத் தேசிய ஏற்று மதியில் 44 சதவீதத்திற்கு வகை கூறிய பெறுமதி கூட்டிய வடிவிலான தேயிலை ஏற்றுமதியும் 1,947 மெற்றிக் தொன்களால் 25,344 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்துள்ளது. இத்தீர்வைத் திருத்தத்துடன், ருசியாவின் உள்நாட்டுப் பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களுடன் போட்டியிடுவதில் இலங்கை பெரும் சிரமங்களை எதிர்நோக்கும். எனினும், ருசியாவின் பெறுமதி கூட்டப்பட்ட தேயிலையை பிரபல்யப்படுத்தும் முயற்சியானது தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதிகளுக்கான கேள்வியை உருவாக்கக் கூடியதாக இருக்கும்.

சிரியா 10 சதவீதப் பங்குடன் ஐக்கிய அரபு இராச்சியத்தை பின்தள்ளி இரண்டாவது பெரிய தேயிலை வாங்குனராக இடம் பிடித்துள்ளது. யுத்த காலத்தில் சிரியாவினூடாக ஈராக்கிற்கும் ஏனைய அரபு நாடுகளுக்கும் தேயிலை பகுதியளவில் விநியோகிக்கப் பட்டமையே காரணமாகும். 2003 இல் தேயிலை ஏற்றுமதிகளில் ஐக்கிய அரபு இராச்சியம் 9 சதவீதத்திற்கு வகை கூறியது. மற்றைய முக்கிய வாங்குநர்களாக, லிபியா (7 சதவீதம்), துருக்கி (6 சதவீதம்), ஈரான் (5 சதவீதம்), யோர்தான், சவுதி அரேபியா (ஒவ்வொன்றும் 3 சதவீதம்) என்பன காணப்பட்டன. 2003 இல் மத்திய கிழக்கு நாடுகள் ஒரு குழுமமாக மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் 43 சதவீதத்தை வாங்கிய அதேவேளை பொதுநலவாய சுதந்திர நாடுகள் 25 சதவீதத்தையும், ஐரோப்பிய ஒன்றியம் 10 சதவீதத்தையும் வாங்கியது.

2003 இல் தேங்காய் துருவல், உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காயெண்ணெய் ஆகிய மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளிலான வருவாய்கள் 2002 இன் 1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 16 சதவீதத்தினால் அதிகரித்தன. அதிகரித்த தெங்கு உற்பத்தி மற்றும் தேங்காய்எண்ணெய்த் தொழில் துறை யிலிருந்தான உள்நாட்டுக் கேள்வி குறைவடைந்தமை என்பன காரணமாக தேங்காய்த் துருவல் மற்றும் உலர்த்திய தேங்காய் என்பவற்றின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே இவ் அதிகரிப் பிற்கான காரணமாக அமைந்தது. 2002 செத்தெம்பரில் இறக்குமதித் தீர்வை மீதான சிறப்பு மிகைக் கட்டணம் அகற்றப்பட்டதன் பின் சமையல் எண்ணெய் இறக்குமதி அதிகரித்ததனால் இதன் கேள்வி குறைவடைந்தது. இவ் உற்பத்திகளின் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகள் முறையே 48 சதவீதம் மற்றும் 32 சதவீதம் என்பவற்றால் அதிகரித்த அதேவேளை அவற்றின் விலைகள் முறையே 22 சதவீதம் மற்றும் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், 2003 இல் தேங்காயெண்ணெய் ஏற்றுமதிகள் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அவ்வவ்போதைக்கு மாற்றம் செய்யப்படும் தீர்வைக் கொள்கையின் மோசமான தாக்கத்திற்கு இது ஒரு சான்றாக இருப்பதுடன், சந்தையில் திரிபுத் தன்மைகளையும் உருவாக்குகின்றது. காய்கறிகளின் அதிகரித்த அறுவடையுடன் மூன்று பிர தான உற்பத்திகள் தவிர்ந்த தெங்கு உற்பத்தி ஏற்றுமதிகளும் 2003 இல் 6 சதவீதத்தால் அதிகரித்தன. கயிற்றிழை மெத்தைகள் மற்றும் கயிறு நூல் என்பவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தன. தெங்கு உற்பத்தி ஏற்றுமதி கைத்தொழிலை மிகவும் உறுதியான அடிப்படையில் அபிவிருத்தி செய்வதில் நீண்டகாலத்திலானதொரு தெளிவான தீர்வைக் கொள்கை மிக அவசியமாகும்.

2003 இல் இறப்பரிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர்கள் 39 மில்லியனுக்கு 44 சதவீதத்தினால் அதிகரித்து, மொத்த ஏற்றுமதி வருவாயில் 1 சதவீதத்திற்கு வகைகூறியது. பன்னாட்டு சந்தைப் போக்கினைத் தொடர்ந்து 2002 யூலை மாதத்திலிருந்து இறப்பர் விலைகள் தொடர்ந்து அதிகரித்தன. 2002 இலும் பார்க்க 2003 இல் இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை 50 சதவீதத்தினால் அதிகரித்தது. 2003 இல் ஏற்றுமதிகளின் அளவு 1.4 மில்லியன் கிலோ கிறாம்களால் 35.3 மில்லியன் கிலோகிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தன. கைத்தொழிலிலான உயர்ந்தளவான உள்நாட்டு நுகர்வே குறைந்தளவான ஏற்றுமதி அளவுக்குக்

காரணமாக அமைந்தது. இறப்பர் உற்பத்தியானது 2002 இன் 90.5 மில்லியன் கிலோகிறாம்களிலிருந்து 2003 இல் 92 மில்லியன் கிலோகிறாம்களாக அதிகரித்ததுடன், 2003 இல் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத் துணைத்துறை விரிவாக்க மடைந்தமையால் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 54 மில்லியன் கிலோ கிறாம்களிலிருந்து 56 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு அதிகரித்தது. உள்நாட்டுக் கைத்தொழில் துறைக்கு தேவையான உள்ளீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 2002 இன் 4.9 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடும்போது 2003 இல் 9.2 மெற்றிக் தொன் இயற்கை இறப்பர் இறக்குமதி செய்யப்பட்டது.

## ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகள்

சிறு வேளாண்மை ஏற்றுமதிகள் என வழமையாக அறியப்படும் ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2002 இன் ஐ.அ.டொலர் 168 மில்லியன்களிலிருந்து 2003 இல் ஐ.அ.டொலர் 150 மில்லியன்களுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2003 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட மூன்று முக்கிய பயிர் வகைகளான கராம்பு, தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் மிளகு என்பன மொத்த ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகளில் 63 சதவீதத்திற்கு வகைகூறின. கறுவா ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிறியளவில் அதிகரித்தன. விலை அதிகரிப்புக்கு மத்தியிலும் உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான கேள்வி அதிகரித்ததால் தயாரிக்கப்படாத புகையிலை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. உலக உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக மிளகின் விலை 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகின் அளவு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2003 மாச்சு மாதத்திலிருந்து இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கை 100 சதவீத தீர்வைச் சலுகைகளை கொண்டிருந்தமையினால் இந்திய மிளகு உற்பத்தியாளர்கள் இலங்கை மிளகு இறக்குமதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். கோரிக்கைகளின் அழுத்தத்தின் விளைவைப் பொறுத்து, இவ்வெதிர்ப்பியக்கம் எமது ஏற்றுமதிகளில் எதிர்மாறான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். 2002 இல் ஏனைய வேளாண்மை உற்பத்திகளுக்கிடையில் குறிப்பிடத்தக்கதொரு பண்டமாக விளங்கிய கராம்பிலிருந்து பெறப்பட்ட வருவாய் 2003 இல் 79 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 23 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது. எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு குறைவான தரத்தைக் கொண்டிருந்ததால் இலங்கையிலிருந்தான இந்தியாவுக்கான கராம்பு இறக்குமதி விலைகளும் அளவுகளும் வீழ்ச்சியடைந்தன. சாதிக்காய் மற்றும் சாதிப் பருப்புக்களின் விலைகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து உறுதியாக இருந்தன. ஏலக்காய் விலைகள் வீழ்ச்சியடைந்தபோதிலும் இந்தியாவுக்கான ஏற்றுமதிக் கேள்வியைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் ஏற்றுமதி அளவுகள் கணிசமானளவு அதிகரித்தன. 2003 இன் மாச்சு மாதத்திற்குப் பின்னர் அனைத்து வாசனைத் திரவியங்களும் இந்தியச் சந்தையில் தீர்வையற்ற நுழைவினைப் பெற்றன. அளவுகள் குறைந்து காணப்பட்ட போதும் காய்கறி ஏற்றுமதிகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டதால் அதி கூடிய ஏற்றுமதிப் பெறுமானம் பெறப்பட்டது. 2003 இல் உலரவைக்கப்பட்ட மற்றும் உடன் பழவகைகள், வெற்றிலை மற்றும் கோப்பி என்பவற்றின் ஏற்றுமதி வருவாய் வகைகள் அதிகரித்திருந்த வேளையில் அத்தியாவசிய எண்ணெய்கள், பாக்குகள், மரமுந்திரிகைப் பருப்புக்கள், கொக்கோ உற்பத்திகள் என்பவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

## கனிப்பொருள் உற்பத்திகள்

2003 ஆம் ஆண்டில் கனிப்பொருள் ஏற்றுமதிகளில் 94 சதவீதத்திற்கு வகைகூறிய இரத்தினக்கல் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதி வருவாய்கள் 7 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்தன. இரத்தினக்கல் வர்த்தகத்தில் காணப்படும் தீர்க்கப்படாத பிரச்சினை, குறிப்பாக தாய்லாந்தின் செயற்கை முறையிலான நீலக்கற்களின் தரத்தை அதிகரிப்பது தொடர்பான சர்ச்சை போன்ற சிக்கல்கள் காரணமாக ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டன. வெப்பமாக்கல் செயற்பாட்டில் இலங்கையும் இரசாயனங்களைப் பயன்படுத்துவதாக வாங்குநர்கள் கேள்வி எழுப்பியிருப்பதுடன், இது ஆண்டின் தொடக்கப் பகுதியில் இரத்தினக்கல் வர்த்தகத்தின் மீதான பாதகமான தாக்கத்திற்கும் காரணமாக இருந்தது. எனினும், இப்பிரச்சினை இலங்கைக்குச் சார்பாகத் தீர்த்து வைக்கப்பட்டது. 2003 இன் இறுதிப் பகுதியில் இலங்கையின் வெப்பமாக்கலுக்குட்படுத்தப்பட்ட இரத்தினக் கற்களுக்கான சந்தை மீட்சி பெற்றது. இரத்தினக்கற்களுக்கான வெப்பமாக்கல் செய்முறையில் இலங்கையினால் பேணப்படும் உயர்ந்த தரமானது தாய்லாந்தை விடவும் இலங்கையின் போட்டித்தன்மையை மேம்படுத்தும்.

இலங்கை மிகச் சிறந்த தரமான இயற்கை வர்ணம் கொண்ட நீல மாணிக்கக் கல்லை உலகச் சந்தைக்குத் தொடர்ந்தும் வழங்கியதுடன், இவ்வுற்பத்திகளுக்கான விலைகளும் இவ்வாண்டு காலத்தில் உறுதியாக இருந்தன. ஐரோப்பிய மற்றும் ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளில் தரப் படுத்தப்பட்ட நீல, இளஞ்சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தைக் கொண்ட மாணிக்கக் கற்களுக்கான கேள்வி ஆண்டு முழுவதும் உறுதியாகக் காணப்பட்டது. 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையின் மிகப் பெரிய வாங்குனராக இருந்தது.

சுவிற்சலாந்து, இத்தாலி, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் என்பன ஐரோப்பிய சந்தையில் முக்கிய வாங்குனர்களாகக் காணப்பட்டன. கொங்கொங் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மிகச் சிறந்த இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்களுக்கான மத்திய நிலையமாக அதன் இடத்தைத் தொடர்ந்து பேணியது. யப்பானும் தாய்லாந்தும் இலங்கையின் இரத்தினக் கற்களுக்கான முக்கிய சந்தைகளாக இப்பிராந்தியத்தில் தொடர்ந்தும் இருந்தன. 2002 இன் பிற்பகுதியிலிருந்து சுற்றுலாக் கைத்தொழில் மீட்சி பெற்றதைத் தொடர்ந்து உள்நாட்டுச் சந்தையில் இரத்தினக்கல் விற்பனைகள் உயர்வாக இருந்தன. வழங்கல் பகுதியை நோக்குகையில், 2003 மே மற்றும் யூன் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவுகள் என்பன இரத்தினக்கல் அகழ்வைப் பெரிதும் பாதித்ததுடன் அதன் பின்னர் வழங்கல் படிப்படியாக மீட்சியடைந்தது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை விஞ்ஞான ரீதியான அளவீடுகளை மேற்கொண்டு பலாங்கொடை, வெள்ளவாய மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் அகழ்வுக்காக புதிய நிலங்களை ஏலமிட்டமையினால் 2003 இன் இறுதிப் பகுயில் செப்பனிடப்படாத இரத்தினக்கற்களின் வழங்கல் அதிகரித்தன. ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2 சதவீதத்தினால் அதிகரித்து, இல்மனைற் மூலமான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களைப் பிரதிபலித்தன.

## 9.3 இறக்குமதிகள்

2002 ஆம் ஆண்டின் 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2003 இல் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 6,672 மில்லியனுக்கு 9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, பொருளாதார மீட்சி மற்றும் 40 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக இறக்குமதி மேலதிக கட்டணம் குறைக்கப் பட்டமை என்பவற்றை பிரதிபலிக்கின்றது. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மீட்சி மற்றும் உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில் செயற்பாடு என்பன காரணமாக இடைநிலைப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்த அதேவேளை, முதலீட்டுப் பொருட்கள் மற்றும் உணவு அல்லாத நுகர்வுப் பொருட்கள் என்பன வற்றிற்கான கேள்வி அதிகரித்து முதலீட்டாளர் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை மேம்பட்டதைப் பிரதிபலிக்கின்றது. உணவு இறக்குமதிகள் சிறிதளவால் மட்டுமே

**அட்டவணை 9.4**
**இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) |
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **1,242** | **1,388** | **1,235** | **1,319** | **1,481** | **87,505** | **105,403** | **110,059** | **126,181** | **142,911** |
| உணவும் குடிபானமும் | 661 | 693 | 654 | 696 | 701 | 46,562 | 52,584 | 58,466 | 66,540 | 67,713 |
| அரிசி | 46 | 4 | 11 | 18 | 8 | 3,290 | 288 | 969 | 1,732 | 819 |
| சீனி | 106 | 141 | 115 | 132 | 116 | 7,448 | 10,777 | 10,289 | 12,634 | 11,196 |
| கோதுமை | 111 | 127 | 110 | 130 | 137 | 7,792 | 9,625 | 9,783 | 12,427 | 13,255 |
| ஏனையவை | 398 | 421 | 419 | 415 | 440 | 28,032 | 31,894 | 37,425 | 39,746 | 42,444 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 581 | 696 | 581 | 623 | 779 | 40,943 | 52,819 | 51,593 | 59,641 | 75,198 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **3,057** | **3,789** | **3,321** | **3,492** | **3,811** | **215,658** | **287,196** | **296,522** | **334,357** | **367,676** |
| பெற்றோலியம் | 500 | 901 | 731 | 789 | 838 | 35,344 | 68,381 | 65,190 | 75,627 | 80,807 |
| வளமாக்கி | 66 | 80 | 67 | 76 | 88 | 4,690 | 6,059 | 6,047 | 7,259 | 8,457 |
| இரசாயனங்கள் | 136 | 147 | 142 | 155 | 170 | 9,590 | 11,152 | 12,647 | 14,792 | 16,363 |
| புடவைகள் | 1,320 | 1,471 | 1,320 | 1,321 | 1,372 | 93,105 | 111,386 | 117,993 | 126,438 | 132,415 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள்(ஆ) | 1,035 | 1,190 | 1,061 | 1,151 | 1,344 | 72,929 | 90,218 | 94,644 | 110,241 | 129,633 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **1,565** | **1,737** | **1,081** | **1,170** | **1,320** | **110,599** | **130,889** | **96,185** | **112,046** | **127,363** |
| பொறியும் கருவியும் | 678 | 787 | 610 | 640 | 698 | 47,736 | 59,538 | 54,287 | 61,296 | 67,330 |
| போக்குவரத்துக் கருவி (இ) | 523 | 529 | 129 | 151 | 206 | 37,191 | 39,489 | 11,469 | 14,449 | 19,869 |
| கட்டடப் பொருட்கள் | 260 | 305 | 249 | 272 | 328 | 18,296 | 23,087 | 22,145 | 26,013 | 31,677 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 105 | 116 | 93 | 108 | 88 | 7,376 | 8,776 | 8,285 | 10,288 | 8,487 |
| **4. பகுக்கப்படாத இறக்கமதிகள்** | **115** | **406** | **337** | **125** | **60** | **8,126** | **30,802** | **30,198** | **11,907** | **5,799** |
| **மொத்த இறக்குமதிகள் (ஈ)** | **5,980** | **7,320** | **5,974** | **6,105** | **6,672** | **421,888** | **554,290** | **532,964** | **584,491** | **643,749** |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சுங்கத்தினால் 1999இலும் 2000இலும் பதிவு செய்யப்பட்ட வைர இறக்குமதிகள் முக்கிய இறக்குமதியாளர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டது.
(இ) 199இல் சிறிலங்கன் எயார் லைன்சினால் இறக்குமதி செய்யப்பட்ட 3 வானூர்திகளின் பெறுமதியையும் உள்ளடக்கும்.
(ஈ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
முக்கிய வைரக்கல் இறக்குமதியாளர்கள்.
இலங்கை மத்திய வங்கி.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

அதிகரித்தமைக்கு அரிசி, கோதுமை மற்றும் சீனி என்ப வற்றின் குறைந்தளவிலான இறக்குமதிகள் பால் உணவு மற்றும் ஏனைய உணவுப் பொருட்களுக்கான இறக்கு மதிகளிலான அதிகரிப்பை ஈடுசெய்யக் கூடிய தாகவிருந்தது. 2003 இல் பெற்றோலிய விலைகள் உயர்வாக இருந்தபோதும், இறக்குமதி அளவுச் சுட்டெண் 11 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை அலகு விலைச் சுட்டெண் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## இறக்குமதி அமைப்பு

1977 இல் பொருளாதாரம் தாராளமய மாக்கப்பட்டதைத் தொடர்ந்து நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளிலிருந்து இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளுக்குப் படிப்படியான நகர்வு காணப்பட்டது. கைத்தொழில் துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் இடைநிலைப் பொருட்களின் அதிகூடிய இறக்குமதிகளுக்கு தேவையை ஏற்படுத்தியவேளையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகள், போக்குவரத்துத் துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தின் அதிகரித்த பயன்பாடு என்பன முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளை அதிகரித்தன. மேலும் அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் உள்நாட்டு வழங்கலில் ஏற்பட்டதொரு அதிகரிப்பு உணவுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான தேவையைக் குறைத்தது. 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவம் 76 சதவீதத்திலிருந்து 77 சதவீதமாக சிறிதளவால் அதிகரித்த அதேவேளை, நுகர்வுப் பொருட்கள் 22 சதவீதத்தில் காணப்பட்டன. 2003 இல், ஏனைய இறக்குமதிகளின் பங்கு (பாதுகாப்பு தொடர்பான இறக்குமதிகளும் உள்ளடங்கலாக) 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

## நுகர்வுப் பொருட்கள்

2002 இலும் பார்க்க உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிகள் 1 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் நுகர்வுப் பொருட்களுக்கான இறக்குமதி 2003 இல் 12 சதவீதத்தினால் அதிகரித்தது. 2004 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட தீர்வைகள் மற்றும் பெறுமதி கூட்டிய வரி என்ப வற்றிலான மேல்நோக்கிய திருத்தத்தின் தாக்கத்தினை பகுதியளவில் பிரதிபலித்து 2003 திசெம்பரில் அதிகரித்த இறக்குமதிகளே (2002 திசெம்பரிலும் பார்க்க 40 சதவீத அதிகரிப்பு) இவ்வுயர் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன. அரிசி, கோதுமை மற்றும் சீனி இறக்குமதிகளின் வீழ்ச்சி உணவு இறக்குமதிகளின் மெதுவான வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த அதேவேளை, இது பால் உற்பத்திகள் மற்றும் ஏனைய உணவு வகைகள் என்பவற்றின் அதிகரித்த இறக்குமதிகளின் தாக்கத்தை எதிரீடு செய்தது.

மிகப் பெரிய உணவு விடயமான கோதுமைத் தானிய இறக்குமதிகள் 2002 இன் 993, 200 மெற்றிக் தொன்களிலிருந்து 2003 இல் 918,700 மெற்றிக் தொன்களாக வீழ்ச்சியடைந்தன. 2001 ஆம் ஆண்டுக்கான கோதுமை கப்பலேற்றுகையிலான தாமதம் மற்றும் உள்நாட்டு இருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கான கோதுமை இறக்குமதி என்பன காரணமாக 2002 இல் கோதுமை இறக்குமதிகள் வழமைக்கு மாறாக உயர்வாக இருந்தன. 2003 இல் இலங்கை தனது கோதுமைத் தேவைப்பாட்டில் 80 சதவீதத்துக்கும் அதிகமான அளவை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தது. 2002 இல் இப்பங்கு 57 சதவீதமாக இருந்தது. 2003 இல், இலங்கைக்கு கிடைக்கச் செய்யப்பட்ட கோதுமை இறக்குமதிகளுக்கான ஐ.அ.டொலர் 31 மில்லியன் கொண்ட இந்திய ஏற்றுமதித் தொடர்கடனே இம் மாற்றத்திற்கான முக்கிய காரணமாக இருந்தது. 2003 இல் இலங்கை ஏற்கனவே ஐ.அ.டொலர் 7.4 மில்லியனை பயன்படுத்தியுள்ளது. 2002 இல் 11,325 மெற்றிக் தொன்களாகவிருந்த கோதுமை இறக்குமதிகள் 2003 இல் 9,705 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன.

2003 இன் சாதனை மட்ட உள்நாட்டு நெல் உற்பத்தி காரணமாக அரிசி இறக்குமதிகள் 2002 இன் 95,100 மெற்றிக் தொன்களிலிருந்து 2003 இல் 34,580 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. 2003 இல் குறைந்தளவிலான இறக்குமதி விலைகளுக்கு மத்தியிலும் சீனி இறக்குமதியானது 44,600 மெற்றிக் தொன்களால் 509,300 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உயர்ந்தளவான விலைகளுக்கு மத்தியிலும், பால் உற்பத்திகளின் இறக்குமதி அளவு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2002 செத்தெம்பரில் வழங்கப்பட்ட தீர்வையற்ற வசதிகளின் பயன்பாடு காரணமாக மீன் இறக்குமதிகள் சிறிதளவில் அதிகரித்தன. உயர்ந்தளவிலான கேள்வியைத் திருப்தி செய்தல் மற்றும் 2002 இனை விடவும் குறைவாகவிருந்த உள்நாட்டு உற்பத்தியை ஈடு செய்தல் போன்ற காரணங்களால் அதிகரித்த இறக்குமதித் தீர்வையின் மத்தியிலும் பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய், வெள்ளைப் பூடு மற்றும் பழம் என்பவற்றின் இறக்குமதிகள் அதிகரித்தன.

அதிகரித்த நுகர்வோர் நம்பிக்கை மற்றும் வருமானம் என்பவற்றின் தாக்கத்தினை பிரதிபலித்து அனைத்து நீண்டகால நுகர்வுப் பொருட்கள் வகைகளின் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. 2003 இல் உந்துஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகளின் இறக்குமதிகள் 67 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை இறப்பர் ரயர்கள் மற்றும் ரியூப்புக்களின் இறக்குமதி 10 சதவீதத்தினால் உயர்வடைந்தது. வானொலிப் பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் என்பவற்றின் இறக்குமதிகள் 18

சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் இறக்குமதிகள் சிறிதளவால் அதிகரித்தன. 2003 இல் ஏனைய நீண்டகால நுகர்வுப் பொருட்களான மட்பாண்டம் மற்றும் கண்ணாடியிலான மேசைப் பொருட்கள், மின்சார சமையலறைப் பொருட்கள், உடைகள், பாதணிகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் தோல் பாதுகாப்புப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகள் அதிகரித்தன.

## இடைநிலைப் பொருட்கள்

2003 இல் இடைநிலைப் பொருட்களின் இறக்கு மதிகள் பெறுமான நியதிகளில் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. மிகப்பெரும் வகையான புடவை இறக்குமதிகள் 2003 இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் 36 சத வீதத்திற்கு வகை கூறின. ஆடை ஏற்றுமதிகளால் தோற்றுவிக்கப்பட்ட பெருமளவு கேள்வி காரணமாக புடவைகளின் இறக்குமதிகள் 4 சதவீதத்தினால் அதிகரித்தன. உயர்வடைந்த இறக்குமதி அளவு காரணமாக புடவை இறக்குமதிகளுக்கான செலவுகள் 4 சதவீதத்தினால் அதிகரித்தன.

இரண்டாவது பாரிய விடயமான மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மொத்த இடைநிலைப் பொருட்களில் 22 சதவீதத்திற்கு வகை கூறி 2003 இல் 6 சதவீதத்தினால் உயர்வடைந்தன. மசகு எண்ணெய் இறக்குமதிகளின் அளவு 2002 இன் 16.8 மில்லியன் பீப்பாய்களிலிருந்து 2003 இல் 14.7 மில்லியன் பீப்பாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மசகு எண்ணெயின் சராசரி விலை 2002 இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர்கள் 25.13 இலிருந்து 2003 இல் பீப்பாயொன்றுக்கு ஐ.அ.டொலர் 29.46 இற்கு 17 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி இறக்குமதிகளின் பெறுமதி, 2002 இலும் விட இறக்குமதி செய்யப்பட்ட அளவு குறைவாக இருந்த போதிலும் விலை அதிகரிப்பு (18 சதவீதம்) காரணமாக 11 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதிகரித்த நீர் மின்வலு உருவாக்கம் காரணமாக வெப்பமின்வலு உருவாக்கத்திற்கான கேள்வி குறைவடைந்தமையே பெற்றோலிய இறக்குமதிகளின் அளவு குறைவடைவதற்கு காரணமாகவிருந்தது.

மூன்றாவது பாரிய இடைநிலை இறக்குமதிப் பொருளான வைர இறக்குமதிகளின் பெறுமதி 22 சதவீதத்தினால் அதிகரித்து, ஏற்று மதிகளிலேற்பட்ட முன்னேற்றத்தைப் பிரதிபலித்தது. இறக்குமதிகளின் அளவு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தபோதிலும் உயர்ந்த விலை காரணமாக வளமாக்கி இறக்குமதிகளுக்கான செலவுகள் 16 சதவீதத்தினால் அதிகரித்தன. வளமாக்கி உதவித்தொகைத் திட்டம் தொடர்ந்திருந்த போதிலும், உள்நாட்டு விலைகளிலான அதிகரிப்பு 2003 இல், வளமாக்கிகளுக்கான கேள்வியை குறைவடையச்

**அட்டவணை 9.5**
**முக்கிய இறக்குமதிகளின் அளவுகள் (அ)**

'000 மெற்றிக் தொன்

| விடயம் | 1999 | 2000 | 2001 | 2002 (அ) | 2003 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அரிசி | **214** | **15** | **52** | **95** | **35** |
| 1ஆம் காலாண்டு | 24 | 7 | 3 | 51 | 22 |
| 2ஆம் காலாண்டு | 12 | 7 | 7 | 9 | 9 |
| 3ஆம் காலாண்டு | 31 | ... | 2 | 10 | 2 |
| 4ஆம் காலாண்டு | 146 | 1 | 40 | 25 | 2 |
| கோதுமை | **859** | **922** | **760** | **993** | **919** |
| 1ஆம் காலாண்டு | 207 | 266 | 231 | 309 | 262 |
| 2ஆம் காலாண்டு | 263 | 210 | 229 | 215 | 232 |
| 3ஆம் காலாண்டு | 189 | 247 | 177 | 221 | 216 |
| 4ஆம் காலாண்டு | 200 | 199 | 123 | 248 | 208 |
| சீனி | **479** | **562** | **420** | **554** | **509** |
| 1ஆம் காலாண்டு | 152 | 128 | 100 | 146 | 151 |
| 2ஆம் காலாண்டு | 64 | 185 | 127 | 141 | 135 |
| 3ஆம் காலாண்டு | 138 | 85 | 109 | 110 | 104 |
| 4ஆம் காலாண்டு | 125 | 164 | 84 | 157 | 120 |
| பெற்றோலியம் (மசகெண்ணெய்) | **1832** | **2347** | **1954** | **2300** | **1995** |
| 1ஆம் காலாண்டு | 244 | 608 | 237 | 539 | 382 |
| 2ஆம் காலாண்டு | 503 | 583 | 539 | 513 | 466 |
| 3ஆம் காலாண்டு | 548 | 613 | 624 | 593 | 500 |
| 4ஆம் காலாண்டு | 537 | 543 | 554 | 655 | 647 |
| வளமாக்கி | **539** | **559** | **460** | **537** | **514** |
| 1ஆம் காலாண்டு | 97 | 149 | 66 | 103 | 124 |
| 2ஆம் காலாண்டு | 158 | 102 | 183 | 163 | 166 |
| 3ஆம் காலாண்டு | 129 | 174 | 83 | 138 | 49 |
| 4ஆம் காலாண்டு | 155 | 134 | 128 | 133 | 175 |

(அ) சீராக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

செய்திருக்கலாம். தாள், இரசாயனப் பொருட்கள், ஆடைகள், ஆபரணம், வெதுப்பகம் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக் கைத்தொழில்கள் என்பவற்றிற்கான மூலப்பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகள் காரணமாக ஏனைய இடைநிலை பொருட்களின் இறக்குமதிகள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன.

## முதலீட்டுப் பொருட்கள்

2003 இல், முதலீட்டுப் பொருட்களின் இறக்கு மதிகள் 13 சதவீதத்தினால் அதிகரித்தன. பாரஊர்திகள், புகையிரதம், கனரக ஊர்திகள் மற்றும் பேருந்து ஊர்திகள் என்பவற்றிற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் அதிகரித்த இறக்குமதியுடன் போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதி 37 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. தையல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் மற்றும் தூக்கிச் செல்லக் கூடிய டிஜிடல் தன்னியக்கத் தரவு செய்முறைப்படுத்தல் இயந்திரங்கள், சீமெந்துக் கற்களை தயாரிக்கும் இயந்திரங்களுக்கான

உதிரிப்பாகங்கள், மின்னுருவாக்கிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் என்பவற்றின் உயர்ந்தளவான இறக்குமதிகளுடன், இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. கட்டடவாக்கத் துறையின் மீட்சி காரணமாக கட்டடப் பொருட்களுக்கான இறக்குமதி 21 சதவீதத்தினால் அதிகரித்தது.

## வர்த்தகத்தின் போக்கு

1977 ஆம் ஆண்டு பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை ஏற்றுமதிகளின் முக்கிய சேரிடங்களாக கைத்தொழில் நாடுகளே தொடர்ந்தும் காணப்பட்டன. எனினும், இந்நாடுகளின் பங்கு 1995 இன் 76 சதவீதத்திலிருந்து 2003 இல் 70 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று இலங்கை இறக்குமதிகளின் மூலங்களான கைத்தொழில் நாடுகளின் பங்கு இதே காலப்பகுதியில் 37 சதவீதத்திலிருந்து 31 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆசிய நாடுகளுடனான வர்த்தகம் விரிவடைந்தது. ஏற்றுமதிச் சேரிடமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பங்கு 1995 இன் 22 சதவீதத்திலிருந்து 2003 இல் 25 சதவீதமாக அதிகரித்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பங்கு 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக அதிகரித்தது. இலங்கையின் இறக்குமதிகளின் மூலமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பங்கு 1995 இன் 64 சதவீதத்திலிருந்து 2003 இல் 68 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான மிகப் பெரும் தனியொரு வாங்குனராக 1979 இலிருந்து விளங்கி வருகின்றது. எனினும் இதன் சந்தைப் பங்கு 2001 இன் அதிஉச்ச மட்டமான 41 சதவீதத்திலிருந்து, 2002 இல் 38 சதவீதத்திற்கும், 2003 இல் 35 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்த ஏற்றுமதிகளில் புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி 83 சதவீதத்திற்கு வகை கூறியது. இரண்டாவது பெரும் வாங்குனரான ஐக்கிய இராச்சியத்தின் சந்தைப் பங்கு 13 சதவீதமாக தொடர்ந்தும் மாறாதிருந்தது. ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகளில் ஆடைகள் மற்றும் தேயிலை ஆகியவற்றின் பங்குகள் முறையே 77 சதவீதம் மற்றும் 2 சதவீதத்திற்கு வகை கூறின. இந்திய இலங்கை சுதந்திர உடன்படிக்கை இந்தியாவுடனான வர்த்தகத்தினை அதிகரிப்பதற்கு உதவியது. இவ்வொப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின், 2003 இல் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 5 சதவீதத்தை இந்தியா கொள்வனவு செய்தது. ஏற்றுமதிகளில் சேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேர்க் ஆகியன தலா 5 சதவீதத்திற்கும் மற்றும் யப்பான் 3 சதவீதத்திற்கும் வகைகூறின. சேர்மனிக்கான பிரதான ஏற்றுமதிகளாக ஆடைகள் மற்றும் தேயிலை என்பன இருந்த அதேவேளை, வைரங்கள் மற்றும் ஆடைகள் என்பன பெல்ஜியம் மற்றும் லக்சம்பேர்க் ஆகிய நாடுகளுக்கான பிரதான ஏற்றுமதிகளாக இருந்தன. மேற்குலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய முக்கிய பொருட்களாக விலையுயர்ந்த கற்கள், கராம்பு, ரயர்கள், தெங்கு துணை உற்பத்திகள், இறால் மற்றும் மீன் உற்பத்திகள் மற்றும் சிலைகள், அழகு சாதனப் பொருட்கள் என்பன விளங்கின. உறையவைக்கப்பட்ட இறால் வகைகள், விலையுயர்ந்த கற்கள், பொறிகளின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள், தேயிலை, மீன் உற்பத்திகள் என்பவற்றிற்கான இலங்கையின் முக்கிய யப்பான் தொடர்ந்தும் விளங்கியது. 2003 இல் மேற் கத்தேய கைத்தொழில் நாடுகள் ஒரு குழுமமாக இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி வர்த்தகப் பங்காளராக விளங்கின.

மீண்டும் இந்தியா மிகப்பெரும் இறக்குமதி மூலமாக (16 சதவீதம்) விளங்கிய வேளையில் அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் கொங்கொங் (14 சதவீதம்), சிங்கப்பூர்

வரைபடம் 9.4
வர்த்தகத்தின் போக்கு

வரைபடம் 9.4.1
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




வரைபடம் 9.4.2
நாடுகளின்படி இறக்குமதிகள்



(8 சதவீதம்) மற்றும் யப்பான் (7 சதவீதம்) என்பன விளங்கின. 2003 இல் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் 26 சதவீதத்தினால் அதிகரித்தன. பெற்றோலிய உற்பத்திகள், கோதுமை, பருத்தி நூல் மற்றும் சீத்தைகள் மற்றும் சீனி, வெங்காயம், மிளகாய், பருப்பு மற்றும் உணவுப்பண்டங்கள் என்பன உள்ளிட்ட உணவுப் பொருட்கள், இரும்பு மற்றும் உருக்கு, ஊர்திகள், மருந்தாக்கற் பொருட்கள் மற்றும் பொறிகள் என்பன இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருட்களாக இருந்தன. சீனா மற்றும் கொங்கொங் என்பவற்றிலிருந்தான இறக்குமதிகள் 18 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, சிங்கப்பூரிலிருந்தான இறக்கு மதிகள் 21 சதவீதத்தினால் அதிகரித்தன. ஆடைக் கைத்தொழிலுக்கான சீத்தைகள் மற்றும் துணைக்கருவிகள் என்பன சீனா மற்றும் கொங்கொங்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரதான பொருட்களாகும். பெற்றோலிய உற்பத்திகள், தையல் இயந்திரங்கள் தொலைபேசிக் கருவிகள், தரவு செய்முறைப்படுத்தல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பனவே சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருட்களாகும். உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் அதிகரித்ததன் காரணமாக யப்பானிலிருந்தான இறக்குமதிகள் 26 சதவீதத்தினால் அதிகரித்தன. இறக்குமதிகளுக்கான ஏனைய பிரதான மூலங்களாக கொரியக் குடியரசு, தாய்வான், மலேசியா மற்றும் ஐக்கிய இராச்சியம் (தலா 4 சதவீதம்) மற்றும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் (தலா 3 சதவீதம்) என்பன விளங்கின. இதன் பிரகாரம், ஒரு குழுவாக ஆசிய நாடுகள் இறக்குமதிகளின் முக்கிய மூலமாக விளங்கின. இவற்றின் சந்தைப் பங்கு 2002 இன் 53 சதவீதத்திலிருந்து 2003 இல் 56 சதவீதமாக அதிகரித்தது. இந்தியாவிலிருந்தான உயர்ந்தளவான இற க்குமதிகளின் விளைவாக ஆசிய நாடுகளிலிருந்தான இற க்குமதிகள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன.

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்கு ஆசிய அமைப்பில் (சார்க்) அங்கம் வகிக்கும் நாடுகள் 2003 இன் மொத்த ஏற்றுமதிகளில் 7 சதவீதத்திற்கும் மற்றும் இறக்குமதிகளில் 18 சதவீதத்திற்கும் வகைகூறியதுடன், 2002 இன் இது தொடர்பான 6 சதவீதம் மற்றும் 16 சதவீதப் பங்குகளைக் காட்டிலும் இது அதிகமானதாகும். சார்க் பிராந்தியத்தில், இந்தியா இலங்கைக்கான மிகப்பெரிய ஏற்றுமதிச் சேரிடமாகவும் (மொத்த ஏற்று மதிகளில் 5 சதவீதம்), மிகப் பெரிய இறக்குமதிகள் மூலமாகவும் விளங்கியதுடன், இவ்விரு நாடுகளுக் கிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடை முறைப்படுத்தத் தொடங்கியதிலிருந்து இதனது பங்கு விரைந்த வீதத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. முழுமையான நியதிகளில், இன்னும் குறைவாக இருப்பினும் (மொத்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளில் தலா 1 சதவீதம்), இலங்கையின் பாகித்தானுடனான வர்த்தகம் முன்னைய ஆண்டைக் காட்டிலும் கணிசமாக அதிகரித்தது. 2003 இல், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 30 சதவீதமான மொத்த ஏற்றுமதிகளுக்கும், 16 சதவீதமான மொத்த இறக்குமதிகளுக்கும் வகை கூறின. ருசியாவிற்கான உயர்ந்தளவான தேயிலை ஏற்றுமதிகளுடன், பொதுநலவாய சுதந்திர நாடுகளுக்கான ஏற்றுமதிகள் இலங்கையின் ஏற்றுமதிகளில் 4 சதவீதத்திற்கு வகைகூறின.

## 9.4 பணிகள் மற்றும் வருமானம்

பணிகள் கணக்கானது தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாக உயர்ந்த மிகை ஒன்றினைப் பதிவு செய்ததுடன், ஐ.அ.டொலர்கள் 396 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் ஒன்றினையும் பதிவு செய்து, கடந்த ஆண்டை விட 34 சதவீத அதிகரிப்பு ஒன்றினையும் கொண்டிருந்தது. பணிகள் கணக்கில் ஏற்பட்ட முன்னேற மானது முக்கியமாக பயண மற்றும் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான உயர்ந்த பெறுவனவுகள் மூலம் பெறப்பட்டதாகும்.

பயணங்களிலிருந்தான வருவாய்கள் இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளன: குறிப்பாக சுற்றுலா விலிருந்தான வருவாய்கள் மற்றயது இலங்கைக்குப் பயணம் செய்த வதிவற்ற இலங்கையர்களிடமிருந்து பெற்ற பெறுகைகள் என்பனவாகும். 2003 இல் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளிலேற்பட்ட செழிப்பின் விளைவாக சுற்றுலா வருவாய்கள் ஐ.அ.டொலர்கள் 324 மில்லியன்களுக்கு 30 சதவீதத்தால் உயர்வடைந்தன. இவ்வாண்டில் இலங்கைக்குப் பயணம் செய்த வதிவற்ற இலங்கையர்களிடமிருந்தான பெறுகைகள் ஐ.அ. டொலர்களில் 100 மில்லியன் ஆக மதிப்பிடப்பட்டிருக் கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் இவ் உட்பாய்ச்சல் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வதிவற்ற இலங்கையர்கள் அடிக்கடி நாட்டிற்கு வருகை தரக் கூடுமாதலினால் நிரந்தர சமாதானம் இதனை கிரமமான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களாக மாற்றக்கூடும்.

உயர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை கார ணமாக பயணிகள் கட்டணங்கள், கப்பல் கட்டண பணிகள் மற்றும் துறைமுகம் தொடர்பான வருவாய்களை உள்ளடக்கும் தேறிய போக்குவரத்துப் பணிகள் 10 சதவீதத்தினால் ஐ.அ.டொலர்கள் 201 மில்லியன்களுக்கு அதிகரித்தன. கொழும்புத் துறைமுகத்தில் வழங்கப்படும் பணிகளுக்கு அதிகளவான போட்டித்தன்மை கொண்ட விலைகள் அளிக்கப்பட்டமையினால் இவ்வாண்டில் சரக்கு மாற்றிக்கப்பலேற்றும் கையாளலுடன் தொடர்பான செயற்பாடுகள் அதிகரித்த போதிலும் வெளிநாட்டுப் பெறுகைகள் சிறிதளவால் மட்டுமே அதிகரித்தன.

*2003 இல் தகவல் தொழில்நுட்பத்துறை 2002 இன் பின்னடைவிலிருந்து மீட்சியடைந்தது. 2001 இலும், 2002 இலும் உலகப் பொருளாதாரம் மெதுவடைந்து*

**அட்டவணை 9.6**
**தேறிய பணிகளும் வருமானமும் மாற்றல்களும் (அ)**

| விடயம் | ஐ.அ.டொ.மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2002 | 2003 (ஆ) | 2002 | 2003 (ஆ) |
| போக்குவரத்து | 183 | 201 | 17,535 | 19,388 |
| பயணம் | 100 | 145 | 9,629 | 13,940 |
| தொடர்புட்டல் பணிகள் | 61 | 45 | 5,795 | 4,380 |
| கணனி தகவல் தொழில் நுட்பப் பணிகள் | 50 | 80 | 4,783 | 7,701 |
| கட்டடவாக்கப் பணிகள் | 27 | 34 | 2,534 | 3,329 |
| காப்புறுதிப் பணிகள் | 18 | 19 | 1,710 | 1,827 |
| ஏனைய வர்த்தப் பணிகள் | -134 | -117 | -12,773 | -11,292 |
| அரச செலவினம் வே.எ.கு. | -10 | -11 | -989 | -1,126 |
| **மொத்தப் பணிகள்** | **295** | **396** | **28,224** | **38,147** |
| ஊழியர்களின் இழப்பீடு | -4 | -5 | -425 | -530 |
| நேரடி முதலீடு | -96 | -89 | -9,154 | -8,612 |
| வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -152 | -98 | -14,595 | -9,398 |
| **மொத்த வருமானம்** | **-253** | **-192** | **-24,174** | **-18,540** |
| 1. தனியார் | 1,097 | 1,205 | 104,980 | 116,321 |
| 2. பொது அரசு | 31 | 29 | 2,982 | 2,785 |
| **மொத்த நடைமுறை மாற்றல்கள்** | **1,128** | **1,234** | **107,962** | **119,106** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விளக்கம் ப.நா.நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ம் பதிப்புடன் (1993) சாத்தியமானஅளவுக்கு இணங்கிச் செல்கின்றது.

(ஆ) தற்காலிகம்

உலகளாவிய தகவல் தொழினுட்பத்திலான திரண்ட செலவிடலில் பாரிய வீழ்ச்சியினை விளைவித்தமையினால் உலகளாவிய பாரிய தொழில் நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்ப உற்பத்திகளினதும், பணிகளினதும் கொள்வனவுகளைக் குறைத்து உலகளாவிய பல தகவல் தொழினுட்ப தீர்வு வழங்கனர்களுக்கு இழப்புக்களை விளைவித்து பொதுவான வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்த உலகளாவிய போக்குகளினால் பாதிப்படைந்த இலங்கையின் கணனி மற்றும் தகவல் பணிகள் துறை 2003 இல் கணிசமானதொரு மீட்சியைக் கொண்டிருந்தது. தகவல் தொழினுட்ப ஏற்றுமதிகள் 2002 ஐ.அ.டொலர் 50 மில்லியனிலிருந்து 2003 இல் ஐ.அ.டொலர் 80 மில்லியனுக்கு 60 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏனைய முக்கிய வெளிநாட்டு செலாவணி உழைப்புத் துறைகளைக் காட்டிலும் தொழிலாளரொருவருக்கான கணிசமாக அதிகரித்த வருவாயினை இத்துறை கொண்டிருப்பதனால் வெளிநாட்டு செலாவணி வருவாய் நியதிகளில் மட்டுமன்றி வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கல் என்பவற்றுக்கான கணிசமான வாய்ப்புக்களை இலங்கை கொண்டுள்ள ஒரு துறையாகவும் இது விளங்குகின்றது. அவசியமான ஒழுங்குவிதிமுறைச் சூழலைப் பின்பற்றல், உட்கட்டமைப்புக்களை தரமுயர்த்தி நவீனமயப்படுத்தல் மற்றும் அளவு மற்றும் தரம் ஆகிய நியதிகளில் மனிதவள அபிவிருத்திக்கு உதவியளித்தல் என்பன மூலம் அரசாங்கம் இத்துறைக்கு ஆதரவளிக்க முடியும்.

இவ்வாண்டில் தொலைத்தொடர்பூட்டல் பணிகளிலிருந்தான தேறிய பெறுகைகள் 26 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 45 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. புதிய தேசியக் கொள்கையின் கீழ், தொலைத்தொடர்பூட்டல் பன்னாட்டு நுழைவுவழி தாராள மயப்படுத்தப்பட்டவுடன் வாடிக்கையாளர் பணிகளைப் பயன்படுத்துதல் மற்றும் வழங்குதல் தொடர்பாக ஏறத்தாழ 30 கம்பனிகள் புதிய உரிமங்களுக்காக விண்ணப்பித்தன. அதிகரித்த போட்டி பன்னாட்டு அழைப்புக்களுக்கான கட்டணங்களின் உள்நாட்டு விலையை குறிப்பிடத்தக்களவுக்கு குறைவடையச் செய்து உலகம் முழுவதுமான இலங்கையரின் அழைப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கின்றது. அதேவேளை, சாதகமான உள்நாட்டு வானிலைத் தன்மைகள் காரணமாக 2003 இல் வெப்ப மின்வலுவின் பாவனை நீர் மின்வலு மூலம் பதிலீடு செய்யப்பட்டதனால் வாடகைக்கு பெறப்பட்ட மின்வலுவிற்கான வாடகைக் கொடுப்பனவுகளின் குறைந்தளவான வெளிப்பாய்ச்சல்களின் காரணமாக ஏனைய வியாபாரப் பணிகளிலிருந்தான பற்றாக்குறை ஐ.அ.டொலர் 117 மில்லியன்களுக்கு 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளிலிருந்தான குறிப்பிடத்தக்களவானதொரு வருமான அதிகரிப்புக் காரணமாக, வருமானக் கணக்கின் பற்றாக்குறை இவ்வாண்டில் கணிசமாகக் குறைவடைந்து, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கு உதவியது. தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் வர்த்தக வங்கிகளின் பன்னாட்டு ஒதுக்குகளும் அதிகரித்த அதேவேளை, உலகளாவிய வட்டி வீதங்கள் பெரும்பாலும் 2002 இன் மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டன. இதன் விளைவாக, பன்னாட்டு ஒதுக்குகள் மீதான வட்டி வருமானம் இவ்வாண்டில் அதிகரித்தது. மேலும், மத்திய வங்கியினால் அலுவல்சார் ஒதுக்குகள் திறமையாக முகாமை செய்யப்பட்டமை மற்றும் குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகள் மற்றும் மத்திய வங்கியின் வசமுள்ள வெளிநாட்டுப் பிணைகளின் விலைகள் என்பன அந்நிய செலாவணி வர்த்தகப்படுத்தல்

இலாபங்கள் மற்றும் வெளிநாட்டுப் பிணை வர்த்தகப்படுத்தல் மூலமான இலாபங்கள் என்பவற்றில் சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. அலுவல்சார் ஒதுக்குகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2002 இன் ஐ.அ.டொலர் 41 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 110 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது அரச வெளிநாட்டுப் படுகடன்களுக்கான 75 சதவீத வட்டிக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குப் போதுமானதாக இருந்தது. நாட்டின் வெளிநாட்டுப் படுகடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் மீதான வதியாதோருக்கான இலாபங்கள் மற்றும் பங்குலாபங்கள் என்பவற்றை உள்ளடக்கிய வருமானக் கணக்கிற்கான வெளிப்பாய்ச்சல்கள் 2003 இல் ஐ.அ.டொல்கள் 336 மில்லியன்களுக்கு 2 சதவீதத்தினால் அதிகரித்தன.

## 9.5 நடைமுறை மாற்றல்கள்

மாற்றல்கள் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் வர்த்தக பற்றாக்குறையினை ஈடு செய்வதற்காக அதிகரித்தஅளவில் தொடர்ந்து பங்களிப்புச் செய்தன. 2003 இல் மாற்றல்கள் கணக்கிலான மிகை வர்த்தகப் பற்றாக்குறையின் 91 சதவீதமாக விளங்கியது. 1998 இல் வர்த்தகப் பற்றாக்குறை விதிவிலக்காக குறைந்தளவில் இருந்ததைத் தவிர, இவ்விகிதம் 1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் 50 சதவீதத்துக்குக் கீழாக இருந்ததுடன், 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் 70 சதவீதத்துக்குக் கீழாக இருந்தது.

தேறிய தனியார் மாற்றல்கள் மற்றும் தேறிய அலுவல்சார் மாற்றல்கள் என்பவற்றை உள்ளடக்கிய மொத்தத் தேறிய நடைமுறை மாற்றல்கள் ஐ.அ.டொலர்கள் 1,234 மில்லியன்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்தத் தேறிய மாற்றல்களில் 98 சதவீதத்திற்கு மேலாக வகைகூறும் தேறிய தனியார் மாற்றல்களே இம்முன்னேற்றத்திற்கான முக்கிய மூலமாக இருந்தன. 2003 இல் இலங்கையின் குடிபெயர்ந்த தொழிலாளர்கள் ஐ.அ.டொலர்கள் 1,414 மில்லியனை இலங்கைக்கு அனுப்பியதுடன் இது முன்னைய ஆண்டை விடவும் 11 சதவீதமானதொரு அதிகரிப்பைக் காட்டியது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக இடம்பெயர்ந்த இலங்கையர்களின் எண்ணிக்கையிலானதொரு அதிகரிப்பு, 2003 இன் முன்னேற்றத்திற்குப் பகுதியளவில் காரணமாகவிருந்தது. 2003 இல், குடிபெயர்ந்தவர்களின் ஆண்டு எண்ணிக்கை 208,801 இற்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. ஈராக் யுத்தம் எதிர்பார்க்கப்பட்டதற்கும் முன்னராக முடிவடைந்தமையினால், இது மத்திய கிழக்கு நாடுகளிலான வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பில் சிறிதளவிலான பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக தோன்றுகிறது. யுத்தத்திற்கு முன்னர் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவிய நிச்சயமற்ற தன்மை காரணமாக ஒரு முன்னேற்பாட்டு நடவடிக்கையாக தொழிலாளர்கள் தமது பெரும்பாலான சேமிப்புக்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்கள். இது 2003 இன், முதல் சில மாத காலத்திலான உயர்ந்தளவான பணவனுப்பல்களில் பிரதிபலிக்கப்பட்டது. நடைமுறையிலுள்ள சமாதான செயற்பாடுகளும், முறைசார்ந்த வர்த்தக வங்கித் தொழில் துறையினூடாக குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள முன்னரை விட தீவிரமாக செயற்படும் வர்த்தக வங்கிகளூடாக பெருமளவிலான நிதிகள் அனுப்பப்படுவதற்கு வழிவகுத்துள்ளன. வடக்கு கிழக்கிலுள்ள வர்த்தக வங்கிகளின் கிளைகள் இவ்வாண்டில் பெருமளவிலான தொகை பணவனுப்புதல்களை பெற்றுக் கொண்டிருப்பதாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

மேற்கு ஆசியப் பிராந்தியத்திலிருந்தான தொழிலாளர்களின் பணவனுப்புதல்கள் மொத்தத் தனியார் மாற்றல் பெறுவனவுகளில் 57 சதவீதத்திற்கு வகை கூறின. மேற்காசியப் பிராந்தியத்திற்கு குடிபெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோதிலும், ஐரோப்பிய நாடுகள் தொழில் வாய்ப்பு அதிகரிப்பினால் மேற்கு ஆசியப் பிராந்தியங்களிலிருந்தான வருவாய்களின் பங்கு 2002 ஆம் ஆண்டிலிருந்து குறைவடைந்து கொண்டு வருகின்றது. பதினெட்டு சதவீதமான மொத்த மாற்றல் பெறுவனவுகள் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளிலிருந்து பெறப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளாக இப்பங்கு படிப்படியாக அதிகரித்திருப்பதுடன், இது பெரும்பாலும் குடிபெயர்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதனையும் பிரதிபலிக்கின்றது. வட அமெரிக்கா, ஏனைய ஐரோப்பிய நாடுகள் மற்றும் தூர கிழக்கு நாடுகள் என்பன முறையே ஏறத்தாழ 6 சதவீதம், 8 சதவீதம் மற்றும் 5 சதவீதத்திற்கு தொடர்ந்து வகை கூறுகின்றன.

## 9.6 மூலதன அசைவுகள்

அரசுக்கான பாரிய மூலதன உட்பாய்ச்சல்கள் காரணமாக, இவ்வாண்டில் மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் முன்னேற்றமடைந்தன. பன்னாட்டு நாணய நிதியத்துடன் வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையானது இவ்வாண்டில் அரசாங்கம் பெருமளவிலான உட்பாய்ச்சல்களைப் பெறுவதற்கு உதவியது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் கொடுகடன்கள் கிடைக்கப்பெறாதபோதிலும், சென்மதி நிலுவைக்கு உதவுவதற்கு இக்கடன்கள் கிடைக்கக் கூடியதாகவிருந்ததுடன் இவ்வுடன்படிக்கையானது ஏனைய

பெறுவனவுகளுக்கானதொரு உந்துசக்தியாக செயற் பட்டது. ஏனைய கொடையாளர்களின் உதவிகள் குறிப்பாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யப்பான் என்பவற்றிலிருந்தான புதிய கடப்பாடுகள் வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி - விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதி என்பவற்றிலான பொருளாதார சீர்திருத்தங்களின் அமுலாக்கத்திலான முன்னேற்றத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றமைக்கு ஒவ்வொரு கொடையளிக்கும் நாட்டினதும் உதவி உபாயமானது வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி மற்றும் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதி என்பவற்றுடன் இணைந்ததான வறுமைக் குறைப்பு உபாய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பதே காரணமாகும். 2003 யூன் மாதத்தில் ரோக்கியோவில் நடைபெற்ற கொடையாளர் மாநாட்டில் வறுமைக்குறைப்பு உபாய அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் 2003 - 2006 காலப்பகுதிக்கு ஐ.அ.டொலர்கள் 4.5 பில்லியன் அளவான உதவிகளுக்கு உறுதி வழங்கப்பட்டது. புதிய கடப்பாட்டின் ஒரு பகுதி 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. ரோக்கியோ கடப்பாட்டின் பெரும்பகுதி பொருளாதார சீர்திருத்தங்களை நடை முறைப்படுத்தல் மற்றும் முழு நாட்டுக்குமான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்கு கிடைக்கக் கூடியதாக விருக்கின்றது. உதவியின் குறிப்பிடத் தக்களவானதொரு பகுதி வடக்கு மற்றும் கிழக்கின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கு உறுதி கூறப் பட்டுள்ளது. ஆகவே கொடையாளர்களின் உறுதி வழங்கலிலான முழு நன்மைகளையும் பெற்றுக்கொள்வது பொருளாதார சீர்திருத்தங்களின் அமுலாக்கத்திலான முன்னேற்றம் மற்றும் சமாதான செயற்பாடுகளின் முன்னேற்றம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

அரசாங்கத்தினால் பெறப்பட்ட மொத்த நீண்டகால மூலதனம் இவ்வாண்டில் ஐ.அ.டொலர்கள் 908 மில்லியன்களுக்கு 68 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2002 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட ஐ.அ.டொலர்கள் 542 மில்லியன் உதவிகளுடன்

வரைபடம் 9.5
மூலதனப் பாய்ச்சல்கள்




ஒப்பிடும்போது கிடைக்கத்தக்க வெளிநாட்டு உதவிகளின் பயன்பாட்டில் இது குறிப்பிடத்தக்கவொரு முன்னேற்றமாகவே காணப்படுகிறது. பயன்பாட்டு வீதம் 2000 மற்றும் 2001 ஆகிய இரண்டு ஆண்டுகளினதும் கிட்டத்தட்ட 13 சதவீதம் 2002 இன் 15 சதவீதம் என்ப வற்றிலிருந்து 2003 இல் 21 சதவீதத்திற்கு அதிகரித்தது[1]. வரவுசெலவுத் திட்ட நோக்கத்திற்காக நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் மூலம் கிடைக்கச்செய்யப்பட்ட பெருந்தொகையே இம்முன்னேற்றத்திற்கான முக்கிய காரணமாகவிருந்தது. இவ்வாண்டில் நிகழ்ச்சித்திட்ட நிதியிடலின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர்கள் 244 மில்லியன்களாக காணப்பட்டது. 2003 இல் பன்னாட்டு மூலதனச் சந்தையிலிருந்து திரட்டப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட வர்த்தகக் கடனும் பகிர்ந்தளிப்புக்களின் அதிகரிப்பிற்கு உதவியது. மொத்த செயற்றிட்ட நிதியிடல் ஐ.அ.டொலர்கள் 556 மில்லியனாக விளங்கி 2002 இனைக் காட்டிலும் 17 சதவீதமானதொரு அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப் படுத்தல் தொடர்பில் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்திற்கு உதவுவதற்கு, வறுமைக் குறைப்பு ஆதரவுக் கொடுகடன் திட்டத்தின் கீழ் உலக வங்கி புதிய நிகழ்ச்சித் திட்டக்கடன் ஒன்றாக ஐ.அ.டொலர்கள் 127.5 மில்லியன்களை வழங்கியது. மேலும், முன்னைய கடப்பாடுகளின் கீழ் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளை அபிவிருத்தி செய்யவும் உலக வங்கி தொடர்ந்து உதவிகளை வழங்குகின்றது. இவ்வாண்டில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் கிராமிய நிதியிடல் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியும் வரவு செலவுத் திட்டத்திற கான நிதியிடலாக கிட்டத்தட்ட ஐ.அ.டொலர்கள் 65 மில்லியனையும், செயற்றிட்ட நிதியிடலாக கிட்டத்தட்ட ஐ.அ.டொலர்கள் 150 மில்லியனையும் வழங்கியது. யப்பானின் உதவிகள் ஐ.அ.டொலர்கள் 230 மில்லியன்களையும் மிஞ்சின. ஐந்து செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக யப்பானிய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் 2003 மாச்சு மாதத்தில் 36 ஆவது கடன் பொதியினை கைச்சாத்திட்டமையானது ஐ.அ.டொலர்கள் 280 மில்லியன் கடப்பாட்டிற்கு வழிவகுத்தது. இக்கடப்பாட்டின் ஒரு பகுதி 2003 காலத்தில் பயன்படுத்தப்பட்டது.

எனினும், ஆண்டின் இறுதியை நோக்கி நிலவிய நிச்சயமற்ற தன்மை வெளிநாட்டு உதவிகளை மந்தமடையச் செய்தது. உதாரணமாக, ஓராண்டுக்குள் எதிர்பார்க்கப்பட்ட வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி - விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதி என்பவற்றின்

1. பயன்பாட்டு விகிதமென்பது முன்னைய ஆண்டின் இறுதியிலான பகிர்ந்தளிக்கப்படாதமொத்தக் கடப்பாடு மற்றும் இவ்வாண்டுக்கான புதிய கடன்பாடு என்பவற்றின் சதவீதமாக இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப் பட்ட மொத்தம் என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

இரண்டாவது தொகுதியின் வழங்கல் பிற்போடப்பட்டது. பெருமளவான நிதி உதவிகள் பன்னாட்டு நாணய நிதியத்துடனான ஏற்பாடான வறுமைக்குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி -விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதி என்பவற்றின் வெற்றியிலேயே தங்கியுள்ளதால் ஏனைய கொடையாளர்கள் 2004 இற்கான தமது கொடை உதவிகள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக முடிவெடுப்பதற்கு 'பொறுத்திருந்து பார்த்தல்' எனும் அணுகுமுறையைப் பின்பற்றினர்.

வெளிநாட்டு உதவிப் பயன்பாட்டை விரைவுபடுத்துவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழு செயற்றிட்ட நிதியிடலுக்கான பகிர்ந்தளிப்பினை மேம்படுத்தி மற்றும் கடன் உடன்படிக்கைகளை இறுதிப்படுத்துவதற்கான நேரத்தைக் குறைத்தல் என்பவற்றுக்கு உதவியளிப்பதற்காக பல நடவடிக்கைகளை எடுத்தது. எனினும் செயற்றிட்ட அமுலாக்கல் செயல்முறையினை விரைவுபடுத்த பெருமளவு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வெளிநாட்டு உதவிகளை விரைந்த வீதத்தில் பயன்படுத்துவதற்கான இயலளவை அதிகரிப்பதற்கான, நிறுவன ரீதியான அமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கம் ரோக்கியோவில் நடைபெற்ற கொடையாளர்களின் மகாநாட்டில் அறிவித்திருந்தது. நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்க முக்கிய கொடையாளர்கள் உறுதியளித்துள்ளனர்.

சலுகையடிப்படையிலான நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்டதான வெளிநாட்டு உதவிகளின் உயர்ந்தளவான பயன்படுத்துகையும், ஏற்றுமதிக் கொடுகடன்கள் மற்றும் வர்த்தக ரீதியான கடன்பாடுகள் போன்ற குறைந்தளவு சலுகைகள் கொண்ட கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான தேவையை குறைக்கிறது. குறிப்பாக, வட்டி வீதங்கள் மற்றும் முதிர்ச்சிக் காலம் ஆகிய நியதிகளில் கிடைக்கக் கூடியதாகவுள்ள சில ஏற்றுமதிக் கொடுகடன்கள் வர்த்தக ரீதியான கடன்பாடுகளிலும் பார்க்க கூடுதலான சலுகைகளைக் கொண்டனவாக தோன்றிய போதிலும் கொடையாளி நாடுகளால் உற்பத்தி செய்யப்படும் குறித்துரைக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்காக மட்டுமே அத்தகைய கொடுகடன்கள் பயன்படுத்தப்பட முடியுமாதலினால் இக் கொடுகடன்களுக்கான உண்மையான செலவு வர்த்தகக் கடன்களைப் பார்க்கிலும் சிலவேளை உயர்வாகக் காணப்படும்.

அரசாங்கத்தின் நடுத்தரகாலக் கடன்கள் மீதான முதல் தொகைகளினது மீள் கொடுப்பனவுகள் 2002 இன் ஐ.அ.டொலர்கள் 380 மில்லியன்களிலிருந்து ஐ.அ.டொலர்கள் 359 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளன. பாதுகாப்புடன் தொடர்பான கொடுகடன்களின் மீள்கொடுப்பனவு 2002 இன் ஐ.அ.டொலர்கள் 144 மில்லியன்களிலிருந்து, 2003 இல் ஐ.அ.டொலர்கள் 92 மில்லியன்களுக்கு குறைவடைந்தமையே மீள் கொடுப்பனவுகள் குறைவடைவதற்கான முக்கிய காரணமாகும். வெளிநாட்டுக் கடன்களின் உயர்ந்த பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் குறைந்த மீள்கொடுப்பனவுகள் என்பவற்றின் விளைவாக அரசுக்கான தேறிய பகிர்ந்தளிப்புக்கள் 2002 இன் ஐ.அ.டொலர்கள் 162 மில்லியன்களிலிருந்து ஐ.அ.டொலர்கள் 548 மில்லியன்களுக்கு அதிகரித்து 2003 இன், திரண்ட மிகைக்கு கணிசமான பங்களிப்பைச் செய்தன.

மாறாக, 2002 இல் ஐ.அ.டொலர்கள் 115 மில்லியன்களாகவிருந்த தனியார் துறைக்கான கடன் மூலதனத்தின் உட்பாய்ச்சல்கள் 2003 இல் ஐ.அ.டொலர்கள் 102 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் ஒருசில தனியார் துறைக் கம்பனிகளே புதிய வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொண்டன. பெரும்பகுதியான பகிர்ந்தளிப்புக்கள் வர்த்தக மற்றும் முதலீடுகள் தொடர்புடைய நோக்கங்களுக்காக முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட நடுத்தரகால வெளிநாட்டுக் கொடுகடன் மற்றும் ஏற்கனவேயுள்ள கடப்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புபட்டதாகும். குறைந்தளவிலான வெளிநாட்டு தனியார் கடன்பாடுகள் குறைவடைந்த உள்நாட்டு வட்டி வீதங்களைப் பகுதியளவில் பிரதிபலிப்பதுடன் இது வெளிநாட்டுக் கடன்பாட்டிலான அனுகூலங்களைக் குறைவடையச் செய்தது. இது மேலும் நடுத்தர மற்றும் நீண்டகால முதலீடுகளை மேற்கொள்வதிலான தனியார்துறையின் பொறுத்திருந்து பார்க்கும் அணுகுமுறை தொடர்வதனையும் பிரதிபலித்திருக்கக்கூடும். இது வெளிநாட்டு மூலதனத்தைத் திரட்டுவதில் இலங்கை தனியார் துறையினர் எதிர்கொண்டுள்ள சில பிரச்சனைகளையும் பிரதிபலித்தது. கடந்த காலத்தில் எயார் லங்கா மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் போன்ற பகுதியளவில் அல்லது முழு அளவில் அரச உடைமையாகவிருந்த நிறுவனங்களின் பெருமளவிலான தனியார் துறை வெளிநாட்டுக் கடன்கள் அரச உத்தரவாதத்தின் கீழ் பெறப்பட்டனவாகும். இக்கம்பனிகளின் தனியார் மயமாக்கலுடன், தனியார் துறையினரின் வெளிநாட்டுக் கடன்களுக்கு உத்தரவாதமளிப்பதிலிருந்து அரசாங்கம் படிப்படியாக விலகிக் கொண்டது.

தனியார் துறையினர் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துமுகமாக அரசாங்கம் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்துள்ளது. முதலாவதாக, நாட்டுக்கான சுயாதிபத்தியமான கடன் தரமிடலைப் பெற்றுக் கொள்வதற்காக அரசு பன்னாட்டு தரமிடல் முகவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கின்றது. ஏற்கனவேயுள்ள உள்நாட்டுத் தரமிடல்களுடன் சேர்ந்ததாக சுயாதிபத்தியமான தர

மிடலானது, கொடுகடன் நம்பிக்கைத் தன்மையை பன்னாட்டு முதலீட்டாளர்கள் மதிப்பிடுவதற்கு உதவியளித்து உள்நாட்டு நிறுவனங்களுக்கு மிக இலகுவில் இடர்நேர்வுக் கட்டணத்தினைத் தீர்மானிப்பதற்கும் உதவும். இரண்டாவதாக, தனியார் துறையினரால் பெறப்படும் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் தனியார் துறையினரால் பெறப்படும் நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் மீதான கட்டுப்பாடுகளை மேலும் தாராளமயமாக்கல் என்பவற்றை இலகுபடுத்துவதற்காக அரசாங்கம் பாராளுமன்றத்தில் புதிய அந்நிய செலாவணி முகாமைத்துவச் சட்டத்தை அட்டவணைப் படுத்தியிருக்கின்றது. இவ்விரு வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலானது தனியார்துறை அதன் சொந்த ஐந்தொகையின் செயலாற்றத்தின் மீது பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளக்கூடிய தனியார் துறையினரின் ஆற்றலை அதிகரிக்கின்றது. ஆயினும், சமாதானச் செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மையை அகற்றல் என்பன தனியார் துறையினரின் நடுத்தர மற்றும் நீண்டகால முதலீடுகளை ஊக்குவிக்கும் இரு முக்கிய காரணிகளாகும். மேலும் உலக வங்கியின் வர்த்தக ரீதியான கடன் வழங்கும் பிரிவான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் தனியார் துறையினருடனான அதன் செயற்பாடுகளை அதிகரித்திருக்கின்றது.

**அட்டவணை 9.7**
**2003ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் உதவியுடனான முக்கிய செயற்றிட்டங்கள்**

| நன் கொடையாளர் | செயற்றிட்டம் | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் மில்லியன் |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | 211.0 |
| இதில் | | |
| | தனியார்துறை அபிவிருத்தித் துணை நிகழ்ச்சித்திட்டம் | 53.4 |
| | சி.ந.மு.சி.தி.அ. கொடுகடன் உதவித்திட்டம் | 18.3 |
| | தென்மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் | 14.7 |
| | நகர அபிவிருத்தி மற்றும் வருமானம் குறைந்தோருக்கான வீடமைப்புத்திட்டம் | 14.4 |
| | 3ஆவது நீர் வழங்கல், மற்றும் சுகாதார செயற்றிட்டம் | 13.2 |
| | வீதி வலையமைப்பு மேம்பாட்டு செயற்றிட்டம் | 11.7 |
| | சி.ந.மு.துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 11.1 |
| | இரண்டாம் கல்வி நவீனமயமாக்கல் திட்டம் | 11.0 |
| **பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு** | | 202.0 |
| இதில் | | |
| | வறுமைக் குறைப்பு ஆதரவு கொடுகடன் | 127.9 |
| | தனியார்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்திச்செயற்றிட்டம் | 15.8 |
| | மகாவலி மீள் கட்டமைப்பு புனருத்தாரன திட்டம் | 14.5 |
| | இரண்டாம் பொது கல்வித் திட்டம் | 8.4 |
| | இலங்கை மத்திய வங்கி, நவீன மயமாக்கல் திட்டம் | 7.0 |
| **யப்பான்** | | 234.0 |
| இதில் | | |
| | வலுத்துறை மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 31.3 |
| | குக்குளே கங்கை நீர்மின்வலு வலுச் செயற்றிட்டம் | 29.3 |
| | சிறிய அளவிலான உட்கட்டமைப்பு புனருத்தாரன மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 28.4 |
| | மின் கொண்டுசெல்லல், துணை நிலையங்களின் அபிவிருத்தித்திட்டம் | 14.7 |
| | களனி திஸ்ஸ இணைந்தசுற்று வலுப்பொறிகள் நிகழ்ச்சித்திட்டம் | 12.7 |
| | கொழும்பு வடக்கு நகரங்களுக்கான நீர் விநியோகத்திட்டம் | 10.6 |
| | கொழும்புதுறைமுக அலைதாங்கி அபிவிருத்திச் செயற்றிட்டம் 11 | 10.4 |
| | பண்டாரநாயக்க சருவதேச விமான நிலைய அபிவிருத்தித்திட்டம் | 10.1 |
| | பேஸ்லயின் வீதித்திட்டம் | 8.4 |

## வெளிநாட்டு நேரடி முதலீடுகள்

தனியார்மயமாக்கல் பெறுகைகளையும் உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2002 இன் ஐ.அ.டொலர்கள் 197 மில்லியனிலிருந்து 2003 இல் ஐ.அ.டொலர் 229 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு 2003[1] இல் ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட பாரிய தனியார் மயமாக்கல் பெறுகைகள் பெறப்பட்டமையே காரணமாகும். உள்நோக்கிய முதலீடு முக்கியமாக வலு மற்றும் எரிசக்தி, துறைமுகம் தொடர்பான அபிவிருத்திகள், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தயாரிப்பு ஆகிய துறைகளினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் 2002 இன் ஐ.அ.டொலர் 11 மில்லியன் வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 27 மில்லியன் கொண்ட பாரிய வெளிப்பாய்ச்சலின் காரணமாக தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2003 இல் சிறிதளவு தாழ்வடைந்து காணப்பட்டன. இப்பாரிய வெளிப்பாய்ச்சலுக்கு முக்கியமாக இலங்கையிலுள்ள வர்த்தக வங்கியொன்றினால் வங்காள தேசத்திலுள்ள வர்த்தக வங்கியொன்றை கையேற்றுக் கொள்வதற்காக ஐ.அ.டொலர் 20 மில்லியன் முதலீடு செய்யப்பட்டமையே காரணமாகும்.

நடுத்தர காலத்திற்கான நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் பெருமளவுக்கு முதலீட்டுச் சபை மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர் களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளன. சமாதானச் செய்முறைகளின் முன்னேற்றத்துடன் கைச்சாத்திடப்பட்ட புதிய உடன்படிக்கைகள் அதிகரித்ததுடன் பேச்சுவார்த்தையின் கீழான விசாரணைகள் மற்றும் செயற்றிட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. 2003 இல் கைச்சாத்திடப்பட்ட புதிய உடன்படிக்கை களிலிருந்தான மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு 2002 இன் ஐ.அ.டொலர் 160 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2003 இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 430 மில்லியனாக விளங்கியது. இப்புதிய செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலானது எதிர்வரும் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பாரியளவிலான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை

1. வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் முதலீட்டுச்சபைக் கம்பனிகளினால் அவற்றின்தாய்க்கம்பனிகள் தவிர்ந்த மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட வெளிநாட்டு கடன்களை உள்ளடக்கவில்லை. ப.நா0நிதியத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ள புதிய சென்மதி நிலுவை கையேட்டின்படி இவ் கடன் மூலதன உட்பாய்ச்சல்கள் தனியார் நீண்டகால கடன் உட்பாய்ச்சல்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கொண்டு வருமென்பதனை இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது. எனினும் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிலவிய அரசியல் நிச்சயமற்ற தன்மையுடன் செயற்பாடு மெதுவடைந்து பேச்சுவார்த்தையின் கீழான ஒரு சில பாரிய செயற்றிட்டங்கள் பிற்போடப்பட்டன.

முக்கியமாக, உள்நாட்டு நிறுவனமொன்றினால் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் 100 பெற்றோல் நிரப்பு நிலையங்கள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொதுப் பயன்படுத்துனர் வசதிகள் என்பனவற்றின் விற பனைப் பெறுகைகள் தாமதமாகப் பெறப்பட்டமை என்பன காரணமாக, 2003 இல் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான தனியார் மயமாக்கல் பெறுகைகள் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் குறைவாகவிருந்தன. உள்நாட்டுப் பெற்றோலியத் துறையின் தாராளமயமாக்கத்தின் கீழ் இரண்டாவது நிறுவனமாக இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் உள்நாட்டுச் சந்தையில் நுழைந்ததன் விளைவாக 2003 இல், தனியார் மயமாக்கல் பெறுகையாக ஐ.அ.டொலர்கள் 30 மில்லியன் பெறப்பட்டது.

### குறுங்கால மூலதனம்

2002 இன் உட்பாய்ச்சலான ஐ.அ.டொலர்கள் 25 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2003 இல் சொத்துப் பட்டியல் முதலீடுகள் ஐ.அ.டொலர் 2 மில்லியன் கொண்ட சிறியளவு தேறிய உட்பாய்ச்சலை பதிவு செய்தன. முக்கியமாக பாரிய உள்நாட்டு கம்பனி ஒன்றினால் பாரிய சுற்றுலா விடுதியின் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து அதன் உரிமையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான உபாயமிக்க கொள்வனவின் பயனாக ஏற்பட்ட, ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 40 மில்லியன் கொண்டதொரு பாரிய பெருமளவிலான வெளிப்பாய்ச்சல் காரணமாக, குறைந்த தேறிய உட்பாய்ச்சல் பதிவு செய்யப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கல்கள் தவிர, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தேறிய உட்பாய்ச்சல்கள் ஆண்டு முழுவதும் சாதகமானதாக விளங்கி, வெளிநாட்டு முதலீட்டாளர் நம்பகத் தன்மையில் முன்னேற்றமொன்றைப் பிரதிபலித்தது. வெளிநாட்டவர்களின் மொத்தக் கொள்வனவு ஐ.அ.டொலர்கள் 145 மில்லியன்களாகவிருந்த அதேவேளை, மொத்த விற்பனைகள் ஐ.அ.டொலர்கள் 143 மில்லியன்களாகவிருந்தன. வெளிநாட்டவர்களின் கொடுக்கல்வாங்கல்கள் 2002 இன் ஐ.அ.டொலர் 140 மில்லியனிலிருந்து 2003 இல் ஐ.அ.டொலர்கள் 288 மில்லியன்களாக அதிகரித்து, பங்குச் சந்தையிலான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வத்தின் முன்னேற்றத்தைப் பிரதிபலித்தது. குறுங்கால ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான கொடுகடன்களை உள்ளடக்கிய தனியார் குறுங்காலக் கொடுகடன் ஐ.அ.டொலர்கள் 18 மில்லியன் கொண்ட குறைந்த தேறிய உட்பாய்ச்சல் ஒன்றைப் பதிவு செய்தது.

இவ்வாண்டில், மத்திய வங்கியால் வர்த்தக வங்கிகளிடமிருந்து ஐ.அ.டொலர்கள் 375 மில்லியன்கள் கொள்வனவு செய்யப்பட்டதற்கு மத்தியிலும், வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2002 இன் ஐ.அ.டொலர் 40 மில்லியனிலிருந்து 2003 இல் ஐ.அ.டொலர்கள் 96 மில்லியன்களுக்கு மேம்பாடடைந்தது. வர்த்தக வங்கிகளிடமிருந்த ஐ.அ.டொலர்கள் 158.5 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் மீள்கொடுப்பனவு செய்யப்பட்டமையே இம்முன்னேற்றத்திற்கான முக்கிய காரணமாகவிருந்தது. இலங்கை அபிவிருத்தி முறிகள் உள்நாட்டுச் சொத்தாகப் கருதப்படுவதுடன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அவற்றின் மீள்கொடுப்பனவு, வர்த்தக வங்கிகளினால் வெளிநாட்டுச் சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டதன் விளைவாக ஆண்டின் கடைசி இரு மாதங்களிலும் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மேம்பாடடைந்தன. ஆண்டின் இறுதிப் பகுதியளவில் எதிர்பார்க்கப்பட்ட ரூபாவின் உயர்ந்த பெறுமானத்தேய்வும் வர்த்தக வங்கிகள் சொத்துக்களை தொடர்ந்து வெளிநாட்டு நாணயங்களில் வைத்திருப்பதை ஊக்குவித்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள் இவ்வாண்டில் பெரும்பாலும் மாற்றடையாமலிருந்தன.

## 9.7 வெளிநாட்டுச் சொத்துக்கள்

மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்திகளின் தேறிய பெறுபேறுகளைப், பிரதிபலிக்கும் வகையில் 2003 இல் சென்மதி நிலுவைகள் ஐ.அ.டொலர்கள் 502 மில்லியன் கொண்ட திரண்ட மிகை ஒன்றை பதிவு செய்தன. தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் சென்மதி நிலுவை மிகை ஒன்றைப் பதிவு செய்ததுடன், இது முன்னொருபோதும் பதிவு செய்யப்படாத இரண்டாவது அதிகூடிய மிகையாகவும் விளங்கியது. அதிகிட்டிய

வரைபடம் 9.6
காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்



**அட்டவணை 9.8**
**இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (அ)**

| உடைமையாளர் | ஐ.அ.டொலர் மில்லியன்(ஆ) | | | | | ரூபா மில்லியன்(ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
| 1. அரசு | 20 | 22 | 78 | 46 | 55 | 1,441 | 1,767 | 7,302 | 4,424 | 5,320 |
| 2. அரச முகவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| 3. மத்திய வங்கி (இ) | 1,619 | 1,026 | 1,260 | 1,654 | 2,274 | 116,571 | 81,819 | 117,365 | 160,018 | 219,984 |
| 4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 1,639 | 1,049 | 1,338 | 1,700 | 2,329 | 118,013 | 83,585 | 124,668 | 164,442 | 225,304 |
| 5. வர்த்தக வங்கிகள் (ஈ) | 942 | 1,083 | 900 | 795 | 889 | 67,946 | 86,682 | 83,815 | 76,921 | 86,011 |
| 6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 2,582 | 2,131 | 2,238 | 2,495 | 3,218 | 185,958 | 170,268 | 208,482 | 241,364 | 311,315 |
| 7. மொத்த அலுவல்சார் சொத்துக்கள்- மாதத்தில் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 3.3 | 1.7 | 2.7 | 3.3 | 4.2 | | | | | |
| 7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 2.9 | 1.5 | 2.3 | 2.9 | 3.6 | | | | | |
| 8. மொத்தச் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 5.2 | 3.5 | 4.5 | 4.9 | 5.8 | | | | | |
| 8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 4.6 | 3.1 | 3.8 | 4.2 | 5.0 | | | | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 2002க்கான ஒதுக்கங்களானது சந்தைவிலையில் கணிக்கப்பட்டுள்ளது.
(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டன.

| ஆண்டு | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா | 72.12 | 82.65 | 93.16 | 96.73 | 96.74 |

மிகையானது (ஐ.அ.டொலர்கள் 661 மில்லியன்கள்) 1993 இல் பதிவு செய்யப்பட்டிருந்தது.

சென்மதி நிலுவையின் மிகையானது நாட்டின் தேறிய அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்தது. வர்த்தக வங்கிகளிலிருந்தான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிகளின் கொள்வனவுகள் தேறிய அடிப்படையில் இவ்வாண்டில் ஐ.அ.டொலர்கள் 375 மில்லியனாக அமைந்து, ஒதுக்குகளை அதிகரிப்பதற்கு உதவின. மிகையான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை வங்கி ஈர்த்துக்கொண்டமை குறிப்பாக மூன்றாம் காலாண்டில் செலாவணி வீதத்தை உறுதிப்படுத்த உதவியது. அரசாங்கத்தினால் பெறப்பட்ட சலுகை அடிப்படையிலான கடன்கள் மற்றும் வர்த்தகக் கடன்பாடுகளுக்கான காசுப் பகிர்ந்தளிப்புக்கள் ஐ.அ.டொலர்கள் 532 மில்லியனாக காணப்பட்டன. இப்பெறுகைகளின் பெரும்பகுதி வெளிநாட்டுப் பொதுப் படுகடன் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றிற்கான பணியாற்றல்களுக்கு உதவியது. மேலும், மத்திய வங்கியினால் முகாமை செய்யப்பட்ட பன்னாட்டு ஒதுக்குகள் சொத்துப்பட்டியலும் வட்டி வருமானம், வர்த்தப் படுத்தல் இலாபங்கள் மற்றும் மதிப்பீட்டு இலாபம் என்ற நியதிகளில் மேலும் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர்கள் 110 மில்லியன்களை சேர்த்தது.

## 9.8 வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

பன்னாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர்கள் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் பலவீன மடைந்தது. ஐக்கிய அமெரிக்காவின் அண்மைக்கால பொருளாதார மீட்சிக்கு மத்தியிலும், ஐக்கிய அமெரிக்காவின் இரட்டைப் பற்றாக்குறைகள் அதாவது நடைமுறைக் கணக்குகள் மற்றும் இறைப் பற்றாக் குறைகள் என்பனவற்றிலான அதிகரிப்புக்கள் கரிசனைக்குரியதாக அமைந்து ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலரை நலிவடையச் செய்தன. ஐக்கிய அமெரிக்கா பலமான டொலர் கொள்கையிலிருந்து விலகிக் கொண்டிருப்பதாகத் தோன்றும் அதேவேளை, யப்பான் வங்கி, யென்னை நலிவுறச் செய்வதற்கான தலையீடுகளைக் குறைத்துள்ளது. இவ் அபிவிருத்திகள் அனைத்தும் 2003 இல் ஐ.அ.டொலர்கள், யப்பானிய யென் (10.8 சதவீதம்), இசுடேர்லிங் பவுண் (11.0 சதவீதம்), யூரோ (19.9 சதவீதம்) என்பவற்றிற்கெதிராக தேய்வடைவதற்கு பங்களிப்புச் செய்தன. இது முன்னைய ஆண்டின் இந் நாணயங்களுக்கெதிரான ஐ.அ.டொலர் முறையே 10.9 சதவீதம், 10.6 சதவீதம் மற்றும் 18.7 சதவீதம் கொண்ட தேய்வினை பின்தொடர்ந்து ஏற்பட்டது.

முக்கிய நாணயங்களைப் பார்க்கிலும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவான வீதத்தைக் கொண்டிருந்த போதிலும், ஆசியாவின் தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் பெரும்பாலான நாணயங்கள் ஐ.அ.டொலருக்கு எதிராக பெறுமான வளர்ச்சியடைந்தன. இது விரைவான வீதத்தில் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கான ஆசியாவிலுள்ள மத்திய வங்கிகளினது பாரிய தலையீடுகள் மற்றும் அவற்றின் நாணயங்களின் குறிப்பிடத்தக்களவான பெறுமான வளர்ச்சியைத் தவிர்த்தல் ஆகிய விளைவுகளினால் ஏற்பட்டதாகும். இவ் அலுவல்சார் ஒதுக்குகளின்

**அட்டவணை 9.9**
**செலாவணி வீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச் சராசரி | | | புள்ளிக்குப் புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 2001 (ஆ) | 2002 | 2003 | 2001(ஆ) | 2002 | 2003 | 2002 | 2003 | 2002 | 2003 |
| யூரோ | 82.27 | 101.38 | 121.60 | 79.99 | 90.43 | 109.16 | -18.8 | -16.6 | -11.5 | -17.2 |
| இந்திய ரூபாய் | 1.93 | 2.01 | 2.12 | 1.87 | 1.97 | 2.07 | -4.3 | -5.4 | -4.1 | -4.8 |
| யப்பானிய யென் | 0.71 | 0.82 | 0.90 | 0.74 | 0.76 | 0.83 | -13.1 | -9.7 | -2.6 | -8.4 |
| பவுண் இசுடேர்லிங் | 135.06 | 155.12 | 172.20 | 128.66 | 143.74 | 157.71 | -12.9 | -9.9 | -10.5 | -8.9 |
| ஐ.அ.டொலர் | 93.16 | 96.73 | 96.74 | 89.36 | 95.66 | 96.52 | -3.7 | 0.0 | -6.6 | -0.9 |
| சிஎஉ | 116.97 | 130.99 | 143.75 | 113.75 | 123.93 | 135.23 | -10.7 | -8.9 | -8.2 | -8.4 |

| தாக்கமுள்ள செலாவணிவீதச் சுட்டெண் (இ) | மாதச் சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டினைவிட சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | புள்ளிக்குப் புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | திசெ2001 | திசெ2002 | திசெ2003 | 2001 | 2002 | 2003 | 2002 | 2003 | 2002 | 2003 |
| உ.தா.செ.வீ (1999=100) | 82.65 | 76.07 | 71.58 | 85.10 | 87.87 | 73.85 | -8.0 | -5.9 | -7.3 | -6.4 |
| பெ.தா.செ.வீ (1999=100) | 99.60 | 100.08 | 96.69 | 99.19 | 99.33 | 97.24 | 0.5 | -3.4 | 0.1 | -21 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(ஆ) 2001 சனவரி 23இலிருந்து இந்த வீதங்கள் அறிவிப்பதனை மத்திய வங்கி நிறுத்திக் கொண்டதுடன் நிரம்பல் மற்றும் கேள்விகளைக் கொண்ட சந்தை விசைகள் சந்தை வீதங்களை நிர்ணயிப்பதற்கு அனுமதித்தது.

(இ) பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்களின் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் நிறைகள் இருபுடை வர்த்தகப் பங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிக்கப்படுகிறது. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

பெரும்பகுதி ஐக்கிய அமெரிக்காவின் பிணைகளில் முதலீடு செய்யப்பட்டமையினால், இவ்வொதுக்குகளிலான அதிகரிப்பு ஐக்கிய அமெரிக்க டொலர்களின் படிப்படியான திருத்தத்திற்கும் மேலும் உதவியது. இவ்வாண்டில் இந்திய ரூபா, சிங்கப்பூர் டொலர், இந்தோனேசிய ருபியா, தாய்வான் டொலர் மற்றும் தாய்லாந்து பாத் என்பன ஐ.அ.டொலருக்கு எதிராக முறையே 5.1 சதவீதம், 1.9 சதவீதம், 6.1 சதவீதம், 2.0 சதவீதம் மற்றும் 9.2 சதவீதம் பெறுமான வளர்ச்சியடைந்த அதேவேளை, கொறியன் வொன் மற்றும் பிலிப்பைன்ஸ் பெசோ என்பன முறையே 0.7 சதவீம் மற்றும் 4.3 தசவீதத்தால் தேய்வடைந்துள்ளன. அதேவேளை அவற்றினது செலாவணிவீத முறைமைகளின் பாரிய நெகிழ்ச்சித் தன்மைக்கான அழுத்தத்தின் மத்தியிலும் சீனா, மலேசியா மற்றும் கொங்கொங் ஆகிய நாடுகள் அவற்றின் நாணயங்களைத் தொடர்ந்தும் ஐ.அ.டொலருடன் இணைத்துள்ளன.

ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதம் உறுதியாக இருந்தது. ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூபா குறைவான வீதத்தில் தேய்வடைந்ததுடன், செத்தெம்பர் மாதத்திலான சற்று முனைப்பான பெறுமான வளர்ச்சியுடன் நவெம்பர் வரைக்கும் பெறுமான வளர்ச்சியடையத் தொடங்கியது. ஒரு கட்டத்தில், ஐ.அ.டொலர்/ ரூபா வீதமானது ஐ.அ.டொலரொன்று ரூ.94.02 இற்கு 2.8 சதவீதத்தினால் பெறுமான வளர்ச்சியடைந்திருந்தது. ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக மத்திய வங்கியினால் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு செய்யப்பட்டமையானது தளம்பல்களை சுமுகப்படுத்தி பெறுமான வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியது. நவம்பரில் நிலவிய அரசியல் நிச்சயமற்ற தன்மையானது பெறுமான வளர்ச்சிப் போக்கை மாற்றியமைத்ததுடன், கடைசி இரு மாதகாலப் பகுதியில் செலாவணி வீதத்தில் உயர்ந்தளவான அடிக்கடி மாறுபாடடையும் தன்மைக்கு இட்டுச் சென்றது. இவ் அபிவிருத்திகளின் விளைவாக, ரூபா, ஐ.அ.டொலர் வீதம் 2003 இன் இறுதியில் பெரும்பாலும் ஆண்டின் தொடக்கத்தில் இருந்ததைப் போன்று அதே மட்டத்தில் காணப்பட்டது. முழு ஆண்டையும் நோக்கும்போது, 2002

வரைபடம் 9.7
செலாவணி வீத அசைவுகள் - 2003

வரைபடம் 9.7.1
செலாவணி வீதம் - 2003 - ரூ/ஐ.அ.டொ




வரைபடம் 9.7.2
வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் - 2003




மற்றும் 2001 இன் பெறுமானத்தேய்வுகளான முறையே 3.7 சதவீதம் மற்றும் 11.3 சதவீதம் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, ஐ.அ.டொலருக்கு எதிராக ரூ.0.01 சதவீதத்தினால் ஐ.அ.டொலரொன்றுக்கு ரூ.96.74 இற்கும் பெறுமானத் தேய்வடைந்தது. ஐ.அ.டொலர் நலிவுற்றமைக்கு மேலாக 2003 இல் ரூபா உறுதிப்பாடடைந்தமையானது முன்னேற்றமடைந்த பொருளாதார அடிப்படைகள் கொடையாளர்களிடமிருந்தான அரசுக்கான பாரிய மூலதன உட்பாய்ச்சல்கள், வெளிநாட்டவர்களால் உயர்ந்தளவிலான சொத்துப்பட்டியல் முதலீடுகள், அதிகரித்த சுற்றுலா வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்புதல்கள் என்பனவற்றைப் பிரதிபலித்தது.

எனினும் ஐ.அ.டொலருக்கும் ஏனைய முக்கிய நாணயங்களுக்குமிடையிலான குறுக்கு செலாவணி வீத தாக்கத்தின் காரணமாக இவ்வாண்டில் ஏனைய நாணயங்களுக்கெதிரான ரூபா பெருமளவில் தேய்வடைந்தது. 2003 இல் யப்பானிய யென் (9.7 சதவீதம்), இஸ்டேர்லிங் பவுன் (9.9 சதவீதம்), யூரோ (16.6 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (5.1 சதவீதம்) என்பவற்றுக்கெதிராக ரூபா பெறுமானத் தேய்வடைந்தது. சிறப்பு எடுப்பனவு உரிமைக்கு எதிராக ரூபா 8.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

வரைபடம் 9.8
பயன்தரு செலாவணி வீதச் சுட்டெண்கள்
(1999 = 100)




## பெயரளவு மற்றும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதங்கள்

ரூபா டொலர் பெயரளவு செலாவணி வீதத்தின் குறைவானதொரு தேய்விற்கு மத்தியிலும் ஐ.அ.டொலர், யப்பானிய யென், இஸ்டேர்லிங் பவுண், யூரோ மற்றும் இந்திய ரூபா என்பவற்றை உள்ளடக்கிய 5 நாணயக் கூடையை மையமாகக் கொண்ட இலங்கையின் பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் 2002 இன் இறுதியிலிருந்து 2003 இறுதியில் 5.0 சதவீதத்தினால் தேய்வடைந்து, ஏனைய பிரதான நாணயங்களுக்கெதிரான ரூபாவின் முனைப்பான தேய்வினைப் பிரதிபலித்தது. வர்த்தக பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய 24 நாணயக் கூடைக்கு எதிராகக் கணிப்பிடப்பட்ட 24 நாணய பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் இதே காலப்பகுதியில் 5.9 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அதேவேளை இதே காலப்பகுதியில் உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் 5 நாணயக் கூடைக்கு எதிராக 2.8 சதவீதத்தினால் தேய்வடைந்த அதேவேளை, 24 நாணயக் கூடைக்கு எதிராக இது 3.4 சதவீதத்தினால் தேய்வடைந்தது. இது உண்மைச் செலாவணி வீதச் சுட்டெண்கள் நியதிகளில் இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மை மேலும் முன்னேற்றமடைந்திருப்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

கொடுக்கல் வாங்கல்களின் அளவு நியதிகளிலும் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் காலம்

சிறப்புக்குறிப்பு 16

# உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதம்

## செலாவணி வீதங்கள்

செலாவணி வீதமொன்றினை வெளிநாட்டு நாணய அலகின் உள்நாட்டு நாணயப் பெறுமதி (விலைக் குறியீட்டு முறைமை) என்ற நியதியிலோ அல்லது உள்நாட்டு நாணய அலகின் வெளிநாட்டு நாணயப்பெறுமதி (அளவு குறியீட்டு முறைமை) என்ற நியதியிலோ வெளிப்படுத்தலாம். முன்னைய வகையில் செலாவணி வீதம் வெளிப்படுத்தப்படுவதே வழக்கமாயினும் பின்னைய முறை உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி உயர்வு மற்றும் தேய்மானம் என்பவற்றின் அளவினை மதிப்பீடுசெய்ய மிகவும் உகந்த குறிகாட்டியாகவுள்ளது.[1] உதாரணமாக, ஐ.அ.டொலருக்கு எதிரான ரூபாவின் வருடாந்த சராசரி செலாவணி வீதம் 2002 இன் 95.66 ரூபாவிலிருந்து 2003 இல் 96.52 ரூபாவிற்கு அதிகரித்தது. இதனால், இக்காலத்தின்போது, ரூபாவின் ஐ.அ.டொலர் பெறுமதி ரூபாவுக்கு 1.05 ஐ.அ.சதத்திலிருந்து 1.04 ஐ.அ.சதங்களாகக் குறைந்தது. இதன்படி ஐ.அ.டொலருக்கு எதிரான ரூபாவின் சராசரி பெயர் குறித்த செலாவணி வீதமானது பெயரளவு நியதிகளின்படி, 2002 இல் 1 சதவீதத்தினால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது.

செலாவணிவீத மாற்றங்களை அளவிடுவதற்கென பெருமளவில் பாவிக்கப்படும் ஏனைய இரு குறிகாட்டிகள் பெயரளவு தாக்கமுடைய செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதம் என்பனவாகும். பெயர் குறித்த தாக்கமுடைய செலாவணி வீதமானது செலாவணி வீதக் கூடையிலுள்ள[2] ஒவ்வொரு நாணயத்தினதும் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளை அடிப்படையாகக் கொண்ட நிறைகளுடன் சேர்ந்த முக்கிய இருபுடை பெயரளவு செலாவணி வீதங்களின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதமானது கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளுடனான பணவீக்க வேறுபாடுகளுக்கு பெயரளவுத் தாக்கமுடைய செலாவணி வீதங்களைச் சீராக்கம் செய்யப்படுவதன் மூலம் பெறப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டினதும் பணவீக்க வீதம் உள்நாட்டு உற்பத்திச் செலவுகளின் போக்கை விரிவாகக் குறிக்கிறது என ஊகிக்கப்படுவதால், உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதமானது உள்நாட்டு உற்பத்திகளுக்கான வெளிநாட்டுப் போட்டித் தன்மையினைப் பிரதிபலிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், ஒருவர் போட்டித் தன்மையிலுள்ள பெருமளவு மாறுபாடுகளை அளவீடு செய்ய உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதத்தில் மட்டும் தங்கியிருக்க முடியாது. காரணம் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளிலான மாற்றங்கள் மற்றும் ஒழுங்குபடுத்துகை, நிறுவன ரீதியான சூழல், உற்பத்தித்திறன் மாற்றங்கள் என்பன உள்ளடங்கிய வர்த்தக, செலாவணி அமைப்பு மாற்றங்கள் போன்ற ஏனைய காரணிகளின் தாக்கத்தை இது போதியளவு உள்வாங்கிக் கொள்ள முடியாமையேயாகும். மேலும், குறிப்பாக விலைக்குறிகாட்டிகள் தொடர்பான தரவுகளிலும் குறைபாடுகள் இருக்கலாம்.

இருந்தபோதிலும், போட்டித்தன்மையை மதிப்பீடு செய்வதற்கென தாக்கமுள்ள செலாவணிவீத குறிகாட்டிகள் பயன்படுத்தப் படுகின்றன. பெயரளவுத் தாக்கமுடைய செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதம் என்பவற்றின் குவிந்த கவனம் வர்த்தக நிலுவை மீதானதாகும். குறிப்பாக அவை வர்த்தகப் பாய்ச்சல்கள் மீதான செலாவணிவீத தூண்டுகைகளின் மாற்றங்கள் மீது காணப்பட்டது. உண்மையான பயன்தரு செலாவணி வீதத்தில் காணப்படு உயர்வுப் போக்கு ஏற்றுமதி, இறக்குமதிப் போட்டிக் கைத்தொழில்களின் முன்னேற்றத்துக்குப் பாதகமானதெனக் கருதப்படுகின்றது.

## சுட்டெண்களின் வெளியீடு

மத்திய வங்கி பல வருடங்களாக, தனது உள்ளக கொள்கை நோக்கங்கட்காக, பல பெயரளவு தாக்கமுடைய செலாவணி வீதங்களையும் மற்றும் உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதங்களினதும் சுட்டெண்களைக் கணித்துள்ளது. எனினும் இவை கடந்த காலங்களின்போது பொதுமக்கட்கு கிடைக்கச் செய்யப்படவில்லை. இலங்கை சுதந்திரமாக மிதக்க விடுகின்ற செலாவணி வீத அமைப்பிற்குள் நுழைந்தமையினாலும் இதன் விளைவாக இருபுடை செலாவணி வீதங்கள் சந்தையினால் தீர்மானிக்கப் படுவதனாலும் இச் சுட்டெண்களைப் பிரசுரிப்பது சந்தைக்குப் பயனுள்ள தகவல்களை வழங்குமென உணரப்பட்டது.

ஒரு வெளிநாட்டு நாணயத்தின் மீதான செலாவணிவீத நகர்வுகளில் மட்டும் கவனம் செலுத்துவதை விட, இது சந்தையில் பங்குபற்றுவோரை இலங்கை நாணயம் மீதும் அதற்கு எதிரான கூடை

1. பிரித்தானியா அளவுக் குறிப்பீட்டு முறைமையை பயன்படுத்துகிறது. இதில் ஸ்டேர்லிங்க பவுணுக்கான செலாவணிவீதம் ஒரு ஸ்டேர்லிங் பவுணுக்கு வெளிநாட்டு நாணயம் என்ற நியதிகளின்படி பொதுவாக வெளிப்படுத்தப்படுகிறது.

2. பெயர் குறித்த தாக்கமுடைய செலாவணிவீதம் எனும் கருதுகோள் கிர்ச் கிக்கின்ஸ் (1970) ஆகியோரால் விருத்தி செய்யப்பட்டு பின்னர் ஏனையோரால் விரிவாக்கப்பட்டது.

*சிறப்புக்குறிப்பு 16 (தொடர்ச்சி)*

நாணயங்களின் சராசரி மீதும் கவனம் கொள்ளவதனை இயலச் செய்யும். குறிப்பாக, குறுக்கு நாணய அசைவுகளின் தாக்கத்தையும் பணவீக்க வீதங்களின் வேறுபாடுகளையும் கணக்கிலெடுக்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் அசைவு இலங்கையின் பன்னாட்டு போட்டித் தன்மை மீதான சில தகவல்களை வழங்கும்.

பெயரளவுத் தாக்கமுடைய செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதம் என்பவற்றின் சுட்டெண்கள் வழங்கப்படுவதற்குப் புறம்பாக கணிப்பீட்டு வழிமுறைகள், கூடையிலுள்ள நாணயங்கள் கணிப்பீட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வர்த்தக நிறைகள் என்பனவும் பிரசுரிக்கப்படுகின்றன. இது, ஈடுபாடுடையோர் சுயமாக தமது பகுப்பாய்வை மேற்கொள்ள உதவியாக அமையும். இச்சுட்டெண்கள் எதிர்காலத்தில் மாதாந்த அடிப்படையில் பூரணப்படுத்தப்படும்.

## கணிப்பீடு, மூலங்கள் மற்றும் முறையியல்

24 வர்த்தகப் பங்காளி நாடுகளுடனான வர்த்தக உள்ளமைப்பை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுடைய செலாவணி வீதமும் உண்மையான தாக்கமுடைய செலாவணிவீதமும் கிரமமான அடிப்படையில ஒழுங்காக மத்திய வங்கியினால் கணிக்கப்படுகின்றன.

## பெயரளவுத் தாக்கமுடைய செலாவணிவீத வீதம்

பெயரளவுத் தாக்கமுடைய செலாவணி வீதம் என்பது வெளிநாட்டு நாணயங்களின் நியதிகளின் படியான உள்நாட்டு நாணயத்தின் இருபுடை பெயரளவு தாக்கமுடைய வீதங்களின் நிறையேற்றப்பட்ட கேத்திர கணித சராசரியாகும்.

$$\text{பெதாசெவீ} = \prod_{i=1}^{24} (e / e_i)^{w_i}$$

e: ஐ.அ.டொலருக்கான இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் (ரூபாவுக்கான ஐ.அ.டொலர்கள் சுட்டெண் வடிவில்)

$e_i$: ஐ.அ.டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் (ரூபாவிற்கான ஐ.அ.டொலர்கள் சுட்டெண் வடிவில்)

$w_i$: நாட்டுடன் தொடர்பான நிறைகள்/ i சுட்டெண் ணில்.

## நிறையேற்றுகின்ற திட்டம்

24 நாடுகள் ஒவ்வொன்றுக்குமான இலங்கையின் இருபக்க வர்த்தகத்தின் சராசரி அடிப்படையில் நிறைகள் பெறப்படுகின்றன. இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் ஒவ்வொரு நாட்டினதும் இருபுடை வர்த்தகம் என்ற விகிதாசாரம் கீழ்க்காணும் நிறைகள் கிடைக்கப்பெறும் பின்னர் பொதுவாக்கப்படுகின்றன.

இருபுடை வர்த்தகப் பங்குகள் மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கை ஏற்றுமதிகளுடன் போட்டிபோடும் பிறநாட்டு ஏற்றுமதிகளின் போட்டி நியதிகளின் முக்கியத்துவம் என்பவற்றின் அடிப்படையிலேயே கூடையில் இடம்பெறும் நாடுகளின் தெரிவு இடம் பெறுகிறது. உதாரணமாக, இலங்கையுடனான கென்யாவின் இருபுடை வர்த்தகப் பங்கானது ஆகக்கூடிய 24 வர்த்தகப் பங்குகளுள் இடம்பெறாத போதிலும்கூட, கென்யா பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கைத் தேயிலையின் முக்கிய போட்டி நாடாக விளங்குகின்றமையால் இது கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## உண்மைத் தாக்கமுடைய செலாவணி வீதம்

உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் என்பது பண வீக்கத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமாகும்.

$$\text{பெதாசெவீ} = \prod_{i=1}^{24} (e / e_i)\ (p / p_i)^{wi}$$

p : = இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்

$p_i$ : = நாட்டின் நுகர்வோர் விலைச்சுட்டெண்

வர்த்தக உள்ளமைப்ப
(1999=100)
(சதவீதம்)

| நாடு | நிறை |
|---|---|
| ஐக்கிய நாடுகள் | 24.5 |
| ஐக்கிய இராச்சியம் | 10.62 |
| யப்பான் | 8.95 |
| இந்தியா | 6.99 |
| கொங்கொங் | 6.97 |
| சிங்கப்பூர் | 6.17 |
| கொரியா | 5.22 |
| தாய்வான் | 4.48 |
| சேர்மனி | 4.35 |
| பெல்ஜியம் | 3.51 |
| தாய்லாந்து | 2.44 |
| நெதர்லாந்து | 2.40 |
| பிரான்சு | 2.24 |
| இந்தோனேசியா | 2.20 |
| மலேசியா | 2.18 |
| சீனா | 2.05 |
| இத்தாலி | 1.75 |
| கனடா | 1.00 |
| சுவீடன் | 0.74 |
| தென்னாபிரிக்கா | 0.55 |
| டென்மார்க் | 0.34 |
| வங்காளதேசம் | 0.20 |
| பிலிப்பைன்ஸ் | 0.12 |
| கென்யா | 0.03 |
| | 100 |

**சிறப்புக்குறிப்பு 16 (தொடர்ச்சி)**

நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் மாதாந்த அடிப்படையில் பூரணப்படுத்தப்படுகின்றன. நுகர்வோர் விலைச்சுட்டெண் தரவுகளின் காலங்கடந்ததன்மைகளின் காரணமாக கிடைக்கத்தக்க தரவுகள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. உண்மையான தரவு அடிப்படையிலான உண்மைத் தாக்கமுடைய செலாவணிவீத சுட்டெண் ஆறு கிழமை இடைவெளியில் பிரசுரிக்கப்படுகிறது.

செலாவணி வீதங்கள் சுட்டெண்களின் நியதிகளின்படி வரையறுக்கப்பட்டுள்ளமையால் ரூபாவின் பெறுமதி உயர்வு, தேய்மானம் என்பன உண்மைத் தாக்கமுடைய செலாவணிவீதச் சுட்டெண் பெறுமதியின் அதிகரிப்பு வீழ்ச்சி என்பவற்றால் நேரடியாகப் பிரதிபலிக்கப்படுகின்றன.

பூரணமான தகவலை உறுதிப்படுத்தும் நோக்கில் 1990 ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகக் கொள்ளப்பட்டுள்ளதுடன் சனவரி 2000 தொடக்கம் சுட்டெண்ணும் ஆரம்பிக்கின்றது. 24 நாணயங்களின் உண்மையான தாக்கமுடைய செலாவணி வீத சுட்டெண் தரவுகள் அட்டவணை 9.9 இலும் பின்னிணைப்பு அட்டவணை 104 இலும் தரப்பட்டுள்ளன.

தொடர்பான நியதிகளிலும், 2003 இல் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை தொடர்ந்து விரிவடைந்து ஆழமடைந்தது. இவ்வாண்டில் முன்னோக்கிய சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவு ஐ.அ.டொலர்கள் 1,401 மில்லியன்களுக்கு 48 சதவீதத்தினால் உயர்வடைந்து, இவ்வாண்டின் வங்கிகளுக்கிடையிலான மொத்தக் கொடுக்கல் வாங்கல்களில் ஏறத்தாழ 38 சதவீதமாக இருந்தது. 2002 இன் ஐ.அ.டொலர்கள் 79 மில்லியனுடன் ஒப்பிடும்போது முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் மாதாந்த சராசரி அளவு 2003 இல் ஐ.அ.டொலர்கள் 117 மில்லியனுக்கு அதிகரித்தது. நீண்டகால முதிர்வு காலத்தையுடைய முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களுக்கானதொரு அதிகரிப்பும் கூட முன்னேற்றமடைந்த சந்தை நம்பகத் தன்மையை தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. வட்டி வீதம் உயர்ந்தளவில் மாற்றமடைந்திருந்த சில நாட்கள் தவிர, ஆண்டு முழுவதும் முன்னோக்கிய மிகை வட்டங்கள் வட்டி வீத வேறுபாடுகளிலும் குறைவாக இருந்தன.

முன்னோக்கிய சந்தைச் செயற்பாடுகள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகின்றன. 2003 இல் ஐ.அ.டொலர்களுக்கெதிராக பெறுமான வளர்ச்சியடைந்து, ஒப்பீட்டு ரீதியில் செலாவணி வீதம் உறுதியாக இருந்த குறிப்பாக ஆண்டின் முதல் 10 மாத காலப் பகுதியில் இச் செயற்பாடுகள் கணிசமானளவு வளர்ச்சியடைந்திருந்தன. வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுக்கு எதிராக காப்பீடு செய்வதற்கான பிரபல்யமான ஒரு கருவியாக முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் விளங்குகின்றன. பெறுமானம் வளர்ச்சியடைந்து சென்ற காலப்பகுதியில் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் சான்றுப்படுத்தப்பட்டவாறு, ரூபாவின் பெறுமான வளர்ச்சியடையும் போக்கு காணப்பட்ட போது, ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி பெறுகைகளை முன்னோக்கிய சந்தையில் விற்பனை செய்யத் தொடங்கினார்கள். ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கிடையிலான 7 சதவீத வட்டி வீத வேறுபாட்டிற்கு கீழாக முன்னோக்கிய மிகைக் கட்டணம் 4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைவதற்கும் இது காரணமாக அமைந்தது. எனினும், ஆண்டின் கடைசி இரு மாதங்களில் உயர்ந்த வீதத்தில் பெறுமானத் தேய்வொன்று எதிர்பார்க்கப்பட்டதால் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இலங்கை இறக்குமதியாளர்கள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுக்கான பரிசைக் காப்பளித்தலை குறைந்தளவில் பயன்படுத்தியதுடன், ஏற்றுமதியாளர்களை விடவும் குறைந்தளவில் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களில் நுழைந்ததுமே இதற்கான பகுதியளவு காரணமாக இருந்தது. உயர்ந்தவொரு பெறுமானத் தேய்வு எதிர்பார்ப்புடன், இறக்குமதியாளர்கள் முன்னோக்கிய உடன்படிக்கைகளில் ஈடுபடுவதிலும் பார்க்க உடன் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வியை அதிகரிப்பதில் நாட்டம் செலுத்தினர். இது செலாவணி வீதத்தில் அழுத்தத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், உடன் சந்தையில் இறக்குமதியாளர் தமது இறக்குமதிக்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவு செய்ய முன்னதாகவே ரூபா நிதி தேவைப்பட்டதால் இறக்குமதிக்கான செலவையும் அதிகரித்தது. ஆகையால், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாறுபாடுகளைக் குறைத்தல் மற்றும் இறக்குமதிச் செலவுகளைக் குறைத்தல் என்பவற்றிற்காக இறக்குமதியாளர்கள் முன்னோக்கிய கருவிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டியிருக்கின்றது. ஆண்டின் இறுதிப் பகுதியளவில் காணப்பட்ட அரசியல் நிச்சயமற்ற தன்மையை பிரதி பலிக்கும் வகையில் செலாவணி

வீதத்திலான அதிகரித்த மாறுபாடடையும் தன்மையானது மிகையான மாறுபாடடையும் தன்மையை குறைப்ப தற்காக உள்நாட்டு வெளிநாட்டு நாணயச்சந்தை மேலும் செறிவாக்கப்படல் வேண்டுமென்பதனை எடுத்துக் காட்டியது.

## 9.9 வெளிநாட்டுப் படுகடன்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2002 இன் 56.3 சதவீதத்திலிருந்து 2003 இல் 58.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், 2003 இன் இறுதியில், ஐ.அ.டொலர் நியதிகளில் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர்கள் 10,644 மில்லியனுக்கு 14 சதவீதத்தால் அதிகரித்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் பொறுப்புக்களை உள்ளடக்கிய அரச படுகடன்கள் ஐ.அ.டொலர்கள் 1,293 மில்லியன்களால் (15 சதவீதம்) ஐ.அ.டொலர்கள் 10,025 மில்லியன்களுக்கு அதிகரித்து, மொத்த வெளிநாட்டுப் படுகடன்களின் அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தது. ஏறத்தாழ 43 சதவீதம் மற்றும் 31 சதவீதம் கொண்ட படுகடன்கள் முறையே சிறப்பு எடுப்பனவு உரிமை மற்றும் யென் என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டிருப்பதனால் முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் முனைப்பாக பெறுமானத் தேய்வடைந்ததன் காரணமாக ஐ.அ.டொலரிலான மொத்த வெளிநாட்டுப் படுகடன் 50 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. முக்கியமாக அரசாங்கத்திற்கான சலுகை அடிப்படையிலான படுகடன்களை (85 சதவீதம்) உள்ளடக்கிய நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் மொத்த வெளிநாட்டுப் படுகடன்களில் 94 சதவீதத் திற்கு வகைகூறின.

அரசாங்கத்தின் சலுகை அல்லாத இருப்பு ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தமையினால் நடுத்தர மற்றும் நீண்டகால தனியார்துறைப் படுகடனை எஞ்சிய சலுகையல்லாத கடன் இருப்பு பெருமளவில் பிரதி நிதித்துவப் படுத்தியது. ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில், ஐக்கிய அமெரிக்க டொலர் 90 மில்லியன் கொண்ட வெளிநின்ற பாதுகாப்புக்கடன் மீளச்செலுத்தப் பட்டமை மற்றும் பன்னாட்டு நிதிச் சந்தையின் ஊடாக திரட்டப்பட்ட வர்த்தக கடனான ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட பெறுகைகள் என்பவற்றின் கார ணமாக அரசாங்கத்தின் சலுகை அல்லாத படுகடன்கள் ஐ.அ.டொலர் 219 மில்லியன்களாக பெரும்பாலும் மாற்றமில்லாமல் தொடர்ந்திருந்தன. நாட்டின் வெளிநாட்டுப் படுகடனின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணுவதற்காக சலுகை அல்லாத வெளிநாட்டுக் கடன்களை மட்டுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான தேவை காணப்படுகின்றது. சலுகை நியதிகளில் பெறப்பட்ட கடன்களின் உயர்ந்தளவான பயன்பாடானது அரசாங்கத்தின் நிதியிடல் தேவைகளை குறைந்த செலவில் உறுதியானதொரு அடிப்படையில் எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதேவேளை, குறுங்காலக் படுகடன்களை உள்ளடக்கிய மொத்த தனியார்துறை படுகடன் இவ்வாண்டில் 2 சதவீதத்தால் ஐ.அ.டொலர்கள் 1,553 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. அரசாங்கம் தனியார் துறையினருக்கு உத்தரவாதம் வழங்குவதிலிருந்து விலகியதால், அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப் பட்ட பொதுக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறையினருக்கான வெளிநாட்டுப் படுகடன்கள் 13 சதவீதத்தால் ஐ.அ.டொலர்கள் 599 மில்லியன்களுக்குக் குறைவடைந்தன. நடுத்தரக்கால வர்த்தகக் கொடுகடன்களை பெருமளவு உள்ளடக்கிய அரசாங்க உத்தரவாதமல்லாத தனியார் துறை வெளிநாட்டுப் படுகடன் 2003 இல் ஐ.அ.டொலர்கள் 335 மில்லியன்களுக்கு அதிகரித்தது.

2002 இல் ஐ.அ.டொலர்கள் 601 மில்லியன்களாக விருந்த குறுங்கால வெளிநாட்டுக் படுகடன்கள் ஐ.அ.டொலர்கள் 619 மில்லியன்களுக்கு (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. குறுங்காலப் படுகடன்கள் வர்த்தகம் தொடர்பான கொடுகடன்களை மட்டும் உள்ளடக்கியுள்ளன. வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி - விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பகிர்ந்தளித்தல்கள் காரணமாக பன்னாட்டு நாணய நிதியத்திற்கான பொறுப்புக்கள் இவ்வாண்டில் ஐ.அ.டொலர்கள் 80 மில்லியன்களால் அதிகரித்தன.




வரைபடம் 9.9
வெளிநாட்டுப் படுகடன்

இதேவேளை 2003 இன் முடிவில் முக்கியமாக ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பெருமளவு பொறுப்புக்கள் கார ணமாக, வங்கித்தொழில் துறைக்கான வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 45 மில்லியன்களால் 1,046 மில்லியன்களுக்கு அதிகரித்தன.

### அட்டவணை 9.10
### வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்

| விடயம் | ஐ.அ. டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) |
| **1. நடுத்தர நீண்டகாலப் படுகடன்** | **8,613** | **8,456** | **7,839** | **8,732** | **10,025** | **620,274** | **676,045** | **730,245** | **844,703** | **969,811** |
| 1.1 அரசு | 7,125 | 6,989 | 6,808 | 7,464 | 8,723 | 513,785 | 559,544 | 634,255 | 721,956 | 843,882 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் (இ) | 944 | 1,028 | 572 | 689 | 599 | 68,105 | 82,302 | 53,324 | 66,663 | 57,952 |
| 1.3 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் (இ) | 286 | 278 | 249 | 292 | 335 | 20,618 | 22,257 | 23,203 | 28,297 | 32,425 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் | 258 | 161 | 209 | 287 | 368 | 17,766 | 11,943 | 19,463 | 27,787 | 35,552 |
| 2. குறுங்காலக் கடன் | 475 | 575 | 533 | 601 | 619 | 34,240 | 46,034 | 49,648 | 58,116 | 59,848 |
| 2.1 அரசு | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2.2 ஏனையவை (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏனைய வர்த்தககொடுகடன்களும்(இ) (ஆ) | 475 | 575 | 533 | 601 | 619 | 34,240 | 46,034 | 49,648 | 58,116 | 59,848 |
| 3. வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (இ) | 885 | 1,076 | 1,119 | 1,001 | 1,046 | 63,838 | 86,132 | 104,201 | 96,807 | 101,149 |
| 3.1 மத்திய வங்கி | ... | ... | 2 | 1 | - | 7 | 33 | 172 | 123 | 32 |
| 3.2 வர்த்தக வங்கிகள் | 765 | 938 | 1,009 | 865 | 863 | 55,142 | 75,101 | 94,030 | 83,655 | 83,514 |
| 3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 121 | 137 | 107 | 135 | 182 | 8,689 | 10,998 | 9,999 | 13,029 | 17,604 |
| 4. மொத்த வெளிநாட்டுப்படுகடன்(1+2) | 9,088 | 9,031 | 8,371 | 9,333 | 10,644 | 654,514 | 722,079 | 779,893 | 902,818 | 1,029,659 |
| 5. மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3) | 9,973 | 10,106 | 9,490 | 10,334 | 11,689 | 718,352 | 808,211 | 884,095 | 998,629 | 1,130,808 |
| ஒப்பந்தக் குறிப்பு விடயங்கள் | | | | | | | | | | |
| நடுத்தர நீண்டகாலப்படுகடன் | | | | | | | | | | |
| செயற்றிட்டக் கடன்கள் | 5,517 | 5,346 | 5,374 | 4,358 | 6,961 | 397,882 | 427,965 | 480,237 | 421,637 | 673,432 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,612 | 1,426 | 1,154 | 3,048 | 1,726 | 116,247 | 114,174 | 103,163 | 294,880 | 167,007 |
| நிரம்பலர் கொடுகடன் | 182 | 338 | 316 | 100 | 216 | 13,146 | 27,074 | 29,411 | 9,718 | 20,921 |
| ப.நா.நி. எடுப்பனவுகள் | 258 | 161 | 209 | 287 | 368 | 17,766 | 11,943 | 19,463 | 27,787 | 35,552 |
| ஏனைய கடன்கள் (ஈ) | 1,043 | 1,185 | 786 | 939 | 754 | 75,233 | 94,890 | 97,971 | 90,680 | 72,899 |
| குறுகியகாலப் படுகடனும் வங்கித் துறைப் பொறுப்புக்களும் | 1,360 | 1,650 | 1,651 | 1,602 | 1,664 | 98,078 | 132,166 | 153,850 | 154,923 | 160,997 |
| **மொ.உ. உ. வின் சதவீதமாக** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 57.8 | 54.5 | 53.2 | 56.3 | 58.4 | 59.2 | 57.5 | 55.4 | 57.0 | 58.5 |
| மொத்த வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 5.6 | 6.5 | 7.1 | 6.0 | 5.7 | 5.8 | 6.9 | 7.4 | 6.1 | 5.7 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 63.5 | 61.0 | 60.3 | 62.4 | 64.1 | 65.0 | 64.4 | 62.8 | 63.1 | 64.2 |
| குறுங்காலப் படுகடன் | 3.0 | 3.5 | 3.4 | 3.6 | 3.4 | 3.1 | 3.7 | 3.5 | 3.7 | 3.4 |
| குறுங்காலப் படுகடனும் வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களும் | 8.7 | 10.0 | 10.5 | 9.7 | 9.1 | 8.9 | 10.5 | 10.9 | 9.8 | 9.1 |
| குறுங்காலப்படுகடன் | 4.8 | 5.7 | 5.6 | 5.8 | 5.3 | 4.8 | 5.7 | 5.6 | 5.8 | 5.3 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 8.9 | 10.6 | 11.8 | 9.7 | 8.9 | 8.9 | 10.7 | 11.8 | 9.7 | 8.9 |
| அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுகடன் | 29.0 | 54,8 | 39,8 | 35.3 | 26.6 | 29.0 | 55.1 | 39.8 | 35.3 | 26.6 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்டகொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.
(இ) வெ.நா.வ.தொ. பிரிவுகள் உள்ளிட்ட வர்த்தக வங்கிகளின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் வரவுகளும் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்.
(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை கூட்டுத்தாபனங்களின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளின் விளைவாக, வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன்களும் ஏனையப் பொறுப்புக்களும் 2002 இன் 62.4 சதவீதத்திலிருந்து 2003 இல் மொ.உ.உற்பத்தியின் 64.1 சதவீதத்திற்கு அதிகரிப்படைந்தன. எனினும் ஐ.அ.டொலர் நியதிகளில் படுகடன் இருப்பானது 13 சதவீதத்தால் ஐ.அ.டொலர்கள் 11,689 மில்லியன்களுக்கு அதிகரித்தது.

## 9.10 படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

நாட்டின் வெளிநாட்டு செலாவணி உழைப்புக்களுக்கெதிராக மொத்தப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளை ஒப்பிடுகின்ற படுகடன் பணி விகிதங்கள் வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பதற்கான நாட்டின் ஆற்றல் 2003 இல் மேலும் முன்னேற்றமடைந்ததை பிரதிபலித்தன. ஐ.அ.டொலர் நியதிகளிலான உயர்ந்தளவான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் மற்றும் குறைவடைந்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் என்பன காரணமாக வெளிநாட்டுப் படுகடனை தீர்ப்பதற்கான ஆற்றலில் நாடு தொடர்ந்தும் முன்னேறி வருவதை இவ் விகிதங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பொருட்களின் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான பெறுவனவுகளின் விகிதாசாரமாக படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2002 இன் 13.2 சதவீதத்திலிருந்து 2003 இல் 11.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பொருட்கள், பணிகள், வருமானம் மற்றும் தனியார் மாற்றல்கள் என்பவற்றிலிருந்தான பெறுவனவுகளின் ஒரு விகிதாசாரமாக, படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2002 இன் 10.8 சதவீதத்திலிருந்து 2003 இல் 9.3 சதவீதத்திற்கு குறைவடைந்தன. படுகடன் பணி விகிதங்களின் வீழ்ச்சிப் போக்கானது நாட்டினது வெளிநாட்டுத் துறையின் பாதிப்படையக்கூடிய தன்மை மற்றும் வெளிநாட்டுப் படுகடன்களின் தாக்குப்பிடிக்கும் தன்மை ஆகிய இரண்டினதும் முன்னேற்றத்தின் ஒரு அடையாளமாகக் காணப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டில் அனைத்து வெளிநாட்டுக் படுகடன்கள் மீதான கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய

**அட்டவணை 9.11**
**வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 846 | 953 | 813 | 788 | 757 | 59,321 | 74,554 | 72,584 | 74,717 | 72,732 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 550 | 621 | 558 | 572 | 527 | 48,472 | 49,410 | 49,883 | 54,011 | 50,633 |
| ப.நா. நிதியத்திற்கு | 100 | 97 | 78 | 56 | 32 | 6,813 | 9,700 | 6,966 | 4,647 | 2,869 |
| ஏனையவற்றிற்கு | 451 | 524 | 480 | 516 | 495 | 31,658 | 39,711 | 42,918 | 49,364 | 47,764 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 296 | 332 | 254 | 216 | 229 | 20,850 | 25,144 | 22,701 | 20,705 | 22,099 |
| ப.நா. நிதியத்திற்கு | 5 | 5 | 5 | 4 | 4 | 376 | 410 | 348 | 398 | 414 |
| ஏனையவற்றிற்கு | 291 | 326 | 250 | 212 | 225 | 20,474 | 24,734 | 22,353 | 20,307 | 21,685 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் | 5,578 | 6,476 | 6,172 | 5,967 | 6,541 | 393,303 | 492,301 | 551,309 | 571,195 | 631,257 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 6,801 | 7,787 | 7,436 | 7,330 | 8,099 | 479,469 | 591,567 | 664,073 | 701,579 | 781,558 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக முழு மொத்த விகிதம் | 15.2 | 14.7 | 13.2 | 13.2 | 11.6 | 15.1 | 15.1 | 13.2 | 13.1 | 11.5 |
| ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 13.3 | 13.1 | 11.8 | 12.2 | 11.0 | 13.3 | 13.1 | 11.8 | 12.2 | 11.0 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக முழு மொத்த விகிதம் | 12.4 | 12.2 | 10.9 | 10.8 | 9.3 | 12.4 | 12.6 | 10.9 | 10.6 | 9.3 |
| ப.நா.நி. கொடுக்கல வாங்கல் நீங்கலாக | 10.9 | 10.9 | 9.8 | 9.9 | 8.9 | 10.9 | 10.9 | 9.8 | 9.9 | 8.9 |
| 5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவு | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவு (இ) | 449.0 | 437.0 | 449.8 | 521.9 | 502.0 | 31,612.9 | 33,099.6 | 40,190.0 | 49,927.6 | 48,452.1 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 53.1 | 45.9 | 55.3 | 66.2 | 66.3 | 53.3 | 44.4 | 55.4 | 66.8 | 66.6 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) ரூபாய் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.
(இ) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மொத்தப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர்கள் 757 மில்லியன்களுக்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் 70 சதவீதத்திற்கு வகைகூறும் கடன்தீர்ப்பனவு கொடுப்பனவுகள் முக்கியமாக அரசாங்கத்தின் பாதுகாப்புடன் தொடர்பான கொடுகடன்களுக்கான குறைந்தளவான மீள் கொடுப்பனவுகள் காரணமாக ஐ.அ.டொலர்கள் 527 மில்லியன்களுக்கு 8 சதவீதத்தால் குறைவடைந்தன. வட்டிக் கொடுப்பனவுகள் 6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 229 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்பட்டன. முதலாவதாக, உலக வட்டி வீதங்கள் பெரும்பாலும் அதே மட்டங்களில் மாறாமலிருந்தபோதும் அரசாங்கத்தின் நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்களின் பாரிய பகிர்ந்தளிப்பானது படுகடன் இருப்பை அதிகரித்ததுடன் அதன் மூலம் வட்டிக் கொடுப்பனவுகளையும் அதிகரித்தது. அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள் முதற்தொகையின் மீள்கொடுப்பனவு தொடர்பில் சலுகைக் காலத்தைக் கொண்டிருப்பதால் அதிகரித்த படுகடன் இருப்புக்கள் குறுங்காலத்தில் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை கட்டாயமாக அதிகரிக்க வேண்டிய அவசியமில்லையெனினும் வட்டிக் கொடுப்பனவுகளை அதிகரிக்கின்றன. இரண்டாவதாக, இவ்வாண்டில் ஐ.அ.டொலர் முனைப்பாக பெறுமானத் தேய்வடைந்தமையினால் ஐ.அ.டொலர் நியதிகளில் அளவிடப்படும் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் அதிகரித்தன.

## 9.11 வெளிநாட்டு வர்த்தகச் சூழலும் கொள்கையும்

சந்தை சார்ந்த கொள்கைக் கட்டமைப்பின் கீழான வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் தீர்வைக் கொள்கையானது தாழ்ந்த மற்றும் இலகுபடுத்தப்பட்ட தீர்வை அமைப்பு ஆகிய தனிச்சிறப்புடன் கூடியதொரு தாராளமயமான போட்டிகரமான, குறைந்த பாதுகாப்பளிக்கும் தீர்வை அமைப்பொன்றை அடைவதனை குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றது. எனினும், 2000 பெப்புருவரியிலிருந்து நடைமுறையிலிருந்த 10 சதவீதம் மற்றும் 25 சதவீதம் கொண்ட இரு பிரிவுத் தீர்வை முறையினை பதிலீடு செய்யுமுகமாக 2002 நவம்பரில் பல தீர்வைப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டமையினால் கொள்கைப்போக்கு இடையூறுக்குள்ளானது. தீர்வை விலக்களிக்கப்பட்டிருந்த பல பொருள் வகைகள் (1,663 பொருட்கள்) 2 சதவீத புதிய பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்ட அதேவேளை மற்றைய 59 பொருட்கள் 20 சதவீத் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொறிகள் மற்றும் கருவிகள் (820 பொருட்கள்) 5 சதவீத தீர்வை வீதத்தின் கீழ் பராமரிக்கப்பட்ட அதேவேளை 1,260 பொருட்கள் 25 சதவீதத்தில் பராமரிக்கப்பட்டன. பியர் மற்றும் புகையிலை போன்ற சில பொருட்கள் உயர்ந்தளவான 75 வீதத்தில் இருந்த அதேவேளை சில சிகரட்டுக்கள் 100 சதவீதத்தின் கீழிருந்தன. அதேவேளை, சில வகையான புகையிலை மற்றும் பாதணிகளை உள்ளடக்கிய 31 பொருட்கள் பெறுமான அடிப்படையிலான தீர்வை அல்லது சிறப்புத் தீர்வை இது இரண்டிலும் எது உயர்வானதோ அதற்கு உட்பட்டதாக இருந்தன. முக்கிய வேளாண்மைப் பொருட்களை உள்ளடக்கிய ஏனைய 46 பொருட்கள் இன்னமும் சிறப்பு தீர்வைகளுக் குட்பட்டிருந்தன. 2002 இல் அமைக்கப்பட்ட நிரந்தர தீர்வை ஆலோசனைச் சபை தீர்வை அமைப்பிலுள்ள திரிபுகள் மற்றும் முரண்பாடுகள் என்பவற்றைப் பரீட்சித்தல் மற்றும் திருத்தி அமைத்தல் அத்துடன் இறக்குமதியாளர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணல் ஆகிய அதன் தொழிற்பாட்டைத் 2003 இலும் தொடர்ந்தது.

### வெளிநாட்டு வர்த்தகம் மீதான தீர்வைகளும் வரிகளும்

தெரிவு செய்யப்பட்ட சில பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டதைத் தவிர 2003 இல், இறக்குமதித் தீர்வையில் பாரிய மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. இவ்வாண்டில் தீர்வை அமைப்பில் நான்கு தடவைகள் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டன. 20 சதவீதம் கொண்ட இறக்குமதி மேலதிகக் கட்டணம் 2003 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது. இறக்குமதித் தீர்வை மிகைக் கட்டணங்களுக்கான விலக்களிப்புக்கு ஏற்புடைய பட்டியலில் வெங்காயம் மற்றும் மிளகாய் இறக்குமதிகள் சேர்க்கப்பட்டன. தீர்வைத் தளர்த்தல் விலக்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களின் அறிமுகம் என்பன மூலமான திரிபுகள் தற்போதைய கொள்கை வழிகாட்டலுக்கமைய குறைந்த மட்டத்தில் பேணப்பட்டன.

2003 மாச்சு 5 ஆம் நாளிலிருந்து அரிசி மீதான சிறப்புத் தீர்வைகள் கிலோ கிறாம் ஒன்றிற்கு 5 ரூபாவிலிருந்து 7 ரூபாவிற்கு அதிகரிக்கப்பட்டு அதன் பின்னர் 2003 ஒகத்து 21 இலிருந்து கிலோகிறாமொன்றிற்கு ரூ.9 இற்கு அதிகரிக்கப்பட்டது. துவிச்சக்கர வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பவற்றின் மீதான சிறப்புத்தீர்வை குறித்துரைக்கப்பட்ட தீர்வை 2003 மாச்சு 5 இல் அலகு ஒன்றிற்கு ரூ.500 இலிருந்து ரூ. 750 இற்கு அதிகரிக்கப்பட்டது. பழங்கள், நறுமணப் பொருட்கள், அழகு மற்றும் அழகுசாதனப் பொருட்கள், தெரிவு செய்யப்பட்ட பிளாத்திக்கு பொருட்கள், பதனிடப்பட்ட தோல் மற்றும் தோல் பொருட்கள், ஒட்டுப்பலகை மற்றும் ஏனைய மரப்பொருட்கள், நில விரிப்புக்கள், ஊர்திகளுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பொருட்கள் அத்துடன் சில பொறிகள் மற்றும் கருவிகள் போன்ற தெரிவு செய்யப்பட்ட சில பொருட்கள் மீதான தீர்வை வீதங்கள் 2003 ஒகத்து 21 இலிருந்து திருத்தியமைக்கப்பட்டன.

2003 செத்தெம்பர் 4 ஆம் நாளிலிருந்து, 2 சதவீத தீர்வைப் பிரிவு 2.5 சதவீதத்திற்கு மேல்நோக்கி திருத்தியமைக்கப்பட்ட அதேவேளை சிறப்புத் தீர்வையானது பெரிய வெங்காயம், பதனிடப்பட்ட மற்றும் காய்ந்த வெங்காயம் என்பன கிலோ கிறாம் ஒன்றிற்கான ரூ.6 மற்றும் சீனி மீதான கிலோ கிறாம் ஒன்றுக்கான ரூ.3.50 என்பன முறையே கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.8 மற்றும் கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.3.75 ஆக உயர்த்தப்பட்டது. 2003 செத்தெம்பர் 9 ஆம் நாளிலிருந்து குடிவகை மீதான இறக்குமதித் தீர்வை மேல்நோக்கி திருத்தியமைக்கப்பட்டது.

இறக்குமதி மீதான தீர்வைத் தளர்த்தல்கள் காரணமாக இழக்கப்பட்ட அரசிறை 2002 இன் ரூ.9,034 மில்லியன்களுக்கு எதிராக 2003 இல் ரூ.163 மில்லியன்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. 2003 இல் பெற்றோலியம் மற்றும் சில உணவுப் பொருட்களுக்கு வழங்கப்பட்டிருந்த தீர்வைத் தளர்த்தல்கள் அகற்றப் பட்டமையே குறைந்த அரசிறை இழப்புக்களுக்கான முக்கிய காரணமாக அமைந்தது. தர்ம ஸ்தாபனங்களுக்கான நன்கொடைகள், சமய ஸ்தாபனங்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் அரசாங்கத்தினால் கொடை முகவர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் தொடர்பான அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் என்பவற்றிற்கு மட்டுமே தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன.

2002 மாச்சு மற்றும் நவம்பரில் தீர்வை அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மேல் நோக்கிய திருத்தத்தின் முழு ஆண்டுத் தாக்கத்துடன், சராசரி இறக்குமதித் தீர்வை அதாவது மொத்த சீராக்கப்பட்ட இறக்குமதிகளுக்கான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு விகிதம் 2002 இன் 4.8 சதவீதத்திலிருந்து 2003 இல் 5.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. 20 சதவீத மேலதிக கட்டணத் தாக்கமற்ற சராசரி இறக்குமதித் தீர்வை விகிதம் 2002 இன் 4.1 சதவீதத்திற்கு எதிராக 4.6 சதவீதமாக இருந்தது. 2002 நவெம்பரில் பூச்சிய சதவீத பிரிவின் கீழுள்ள பொருட்கள் 2 சதவீதப் பிரிவின் கீழ் பதிலீடு செய்தமை மற்றும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் என்பவற்றின் தாக்கமே சராசரி தீர்வை வீதத்தின் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக இருந்தது. அதனைத் தொடர்ந்து மொத்த இறக்குமதிகளில் தீர்வைக்குட்பட்ட இறக்குமதிகள் 2002 இன் 28 சதவீதத்திலிருந்து 2003 இல் 37 சதவீதமாக அதிகரித்து தீர்வைத் தளத்தை விரிவுபடுத்தியது.

முன்னர் தீர்வையற்றிருந்த சில பொருட்கள் மீது தீர்வை கொண்டுவரப்பட்டதால் நுகர்வுப் பொருட்கள் வகையிலுள்ள தீர்வைக்குட்பட்ட இறக்குமதிகள் 2002 இன் 61 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக அதிகரித்தது.

**அட்டவணை 9.12**
**இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)**

| விடயம் | 1999 | 2000 | 2001 (ஆ) | 2002 (ஆ) | 2003 (இ) (ஈ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | 12.8 | 11.5 | 13.3 | 13.3 | 13.5 |
| **உணவும் குடிபானமும்** | 13.6 | 11.7 | 15.3 | 14.4 | 14.2 |
| அரிசி | 16.4 | 30.0 | 21.2 | 32.9 | 29.3 |
| மா | - | 6.2 | 13.3 | 12.3 | 11.5 |
| சீனி | 21.3 | 15.9 | 16.2 | 16.0 | 16.8 |
| கோதுமையும் இறுங்கும் | 0.3 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 11.6 | 10.6 | 15.3 | 11.9 | 12.2 |
| கருவாடு | 1.2 | 1.3 | 2.0 | 7.9 | 10.8 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 4.8 | 5.1 | 6.3 | 6.8 | 7.9 |
| எனைய உணவு விடயங்கள் | 19.9 | 18.7 | 25.4 | 22.9 | 22.3 |
| **உணவல்லாத நுகர்வுப் பொருட்கள்** | 12.0 | 11.3 | 10.9 | 12.1 | 13.0 |
| உந்து ஊர்திகளும் ஈருருளிகளும் | 20.1 | 16.6 | 21.1 | 23.3 | 22.1 |
| வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் | 11.9 | 6.8 | 8.3 | 8.6 | 8.9 |
| இறப்பர் டயர்களும் ரியூப்புக்களும் | 28.4 | 23.5 | 29.6 | 27.9 | 26.0 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 0.6 | 0.5 | 0.6 | 0.6 | 0.6 |
| ஏனைய உணவல்லாத விடயங்கள் | 9.1 | 11.1 | 9.7 | 9.4 | 9.2 |
| **இடைநிலைப் பொருட்கள்** | 4.1 | 2.9 | 1.7 | 1.6 | 1.5 |
| வளமாக்கி | - | - | - | 0.4 | 2.6 |
| மசகெண்ணெய் | 15.8 | 7.4 | … | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலியப் பொருட்கள் | 16.1 | 5.3 | 0.9 | 0.8 | 0.8 |
| இரசாயன மூலங்களும் கலவைகளும் | 3.6 | 3.2 | 3.3 | 1.1 | 2.2 |
| சாயமூட்டல் பதனிடல் நிறமூட்டல் | 5.3 | 5.2 | 6.3 | 4.0 | 4.6 |
| தாள் தாள் அட்டைகள் | 5.7 | 5.0 | 6.7 | 5.2 | 5.4 |
| புடவையும் ஆடைகளும் | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 4.1 | 3.5 | 4.2 | 4.3 | 3.3 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | 4.4 | 4.0 | 5.3 | 5.5 | 7.2 |
| கட்டடப் பொருட்கள் | 7.8 | 7.5 | 9.3 | 7.4 | 7.7 |
| போக்குவரத்துக் கருவிகள் | 7.4 | 7.4 | 10.3 | 11.0 | 12.9 |
| பொறியும் கருவியும் | 2.2 | 1.8 | 2.7 | 3.7 | 5.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 3.4 | 3.2 | 4.2 | 3.8 | 4.6 |
| **மொத்தம்** | 7.0 | 4.5 | 4.9 | 4.8 | 5.3 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூ.மொ.வி.நிலையம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட இலங்கை பிறிமா

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதிகளின் சதவீதமாக உண்மையான தீர்வைச் சேகரிப்பு (க.ஏ.பெ.)

(ஆ) இது 2001 பெப்புருவரி 21ஆம் நாளன்று தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட40 சதவீத மேலதிகக் கட்டணத்தின் தாக்கத்தையும் 2002 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து 20 சதவீத மேலதிகக் கட்டணத்தையும் உள்ளடக்குகிறது.

(இ) இது 2003 சனவரி 01ஆம் நாளன்று தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட 20 சதவீத மேலதிகக் கட்டணத்தின் தாக்கத்தை உள்ளடக்கும்.

(ஈ) தற்காலிகமானவை

உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக முக்கிய உணவுப் பொருட்களின் மீது அதிகரித்த சிறப்புத் தீர்வை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதால், உணவு மற்றும் குடிபானங்கள் மீதான சராசரி இறக்குமதித் தீர்வை வீதம் சிறிதளவால் அதிகரித்தது. 2002 இல் 12 சதவீதமாக இருந்த உணவு அல்லாத நுகர்வுப் பொருட்களின் வகைகளின் மீதான சராசரி இறக்குமதித் தீர்வை வீதம் 2003 இல் 13 சதவீதமாக அதிகரித்தது.

இடைநிலைப் பொருட்கள் வகையில், தீர்வைக்குட்பட்ட இறக்குமதிகளின் பங்கு 10 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரித்த அதேவேளை, முதலீட்டுப் பொருள் வகையின் பங்கு 45 சதவீதத்திலிருந்து 2003 இல் 62 சதவீதமாக அதிகரித்தது. எனினும், பெரும்பகுதியான இடைநிலைப் பொருட்கள் இன்னும் தீர்வையற்றதாக இருப்பதால், இடைநிலைப் பொருட்கள் மீதான சராசரித் தீர்வை வீதம் 2002 இன் மட்டத்திலேயே தொடர்ந்திருந்தது. பெரும் பகுதியான முதலீட்டுப் பொருட்கள் தற்போது வரி வலையமைப்பினுள் காணப்படுவதோடு இறக்குமதி மற்றும் மேலதிகக் கட்டணங்கள் ஆகிய இரண்டுக்கும் உட்படுவதால், முதலீட்டுப் பொருட்கள் மீதான சராசரித் தீர்வை வீதம் 5.5 சதவீதத்திலிருந்து 7.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த போக்குவரத்துக் கருவிகளின் தாக்கத்தையும் பிரதிபலிக்கின்றது.

## இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்

பல தரப்பட்ட நோக்கங்களுக்காக 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க (1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டம் என்பவற்றால் திருத்தியமைக்கப்பட்டதற்கமைய) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் (கட்டுப்பாட்டு) சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. நிர்வாக ரீதியான தாமதங்களைக் குறைத்தல் மற்றும் நடைமுறைகளை இலகுபடுத்தல் என்பவற்றிற்காக, 2003 பெப்புருவரியில் ஒரு கொடையாக அல்லது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவு தேவையற்ற ஐ.அ.டொலர்கள் 1,000 க்கு அதிகமான பெறுமதியுடைய பொருட்களின் இறக்குமதியிலிருந்தான செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தலையீடு நீக்கப்பட்டது. அதேபோல், 2003 மாச்சு மாதத்திலிருந்து அரச பாதுகாப்பு பணிகள் தொடர்பாக செய்யப்படும் இறக்குமதிகளுக்கு, இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் பெறுவதிலிருந்தான தேவைப்பாட்டிலிருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இறக்குமதியாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை இறுதியாக்குவதற்கு அதிகளவு நெகிழ்ச்சித் தன்மையை வழங்கும்பொருட்டு முற்பண கொடுப்பனவுத் திகதிக்கும், பொருட்களை பெற்றுக்கொள்ளும் திகதிக்குமிடையில் இறக்குமதியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலம் 2003 திசெம்பரில் 30 நாட்களிலிருந்து 90 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வைரக்கற்கள் வர்த்தகத்திலான சட்டவிரோதக் கொடுக்கல் வாங்கல்களை தவிர்க்கும் நோக்குடன் 2003 ஆம் ஆண்டு யூனிலிருந்து அத்தகைய வர்த்தக செயற்பாட்டின் சட்டரீதியான தன்மையினை உறுதிப்படுத்தும் கிம்பேர்லி செய்முறைச் சான்றிதழ் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அனைத்து பட்டை தீட்டப்படாத வைரக்கற்கள் இறக்குமதிகளும் கையாளப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையே இறக்குமதி செய்யப்பட்ட வைரங்களைப் பயன்படுத்தியே ஏற்றுமதி செய்முறைப்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து வைரக்கல் ஏற்றுமதிகளும் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை கொண்டிருக்க வேண்டும்.

2003 ஒகத்திலிருந்து சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக, பயன்படுத்தப்பட்ட ஊர்தி இருக்கைகள் (20 சதவீதம்), பயன்படுத்தப்பட்ட தளபாடங்கள் மற்றும் உந்து ஊர்திகளின் கழற்றப்பட்ட பகுதிகள் (ஒவ்வொன்றும் 50 சதவீதம்), பயன்படுத்தப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள், ஆழ்குளிர் சாதனப்பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள் (ஒவ்வொன்றும் 5 சதவீதம்) மற்றும் வர்த்தக ரீதியான அளவு (ஒவ்வொன்றும் 10 சதவீதம்) என்பவற்றிற்கு இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படும்போது இறக்குமதிகளின் கொ.கா.க பெறுமதியில் உரிமைக் கட்டணம் விதிக்கப்பட்டது. மேலும் 2003 ஒத்தோபரிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த சிறப்பு பாவனைக்கான ஊர்திகள், வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத்திற்கான பொறிகள் என்பன உரிமத் தேவைப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்வகைப்பட்ட இறக்குமதிகளை மேலும் தாராளமயமாக்கும் நோக்குடன் 2003 யூனில் பொறிகளின் சில உதிரிப்பாகங்கள் உரிமம் பெறும் தேவைப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இத்திருத்தங்களுடன், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் 6 இலக்க மட்டத்திலான இணக்குவிப்பு முறைக் குறியீட்டின் (இமு குறியீடு) கீழான பொருட்களின் மொத்த எண்ணிக்கை 2003 ஆம் ஆண்டின் இறுதியில் 63 விடயங்களால் 376 இற்கு அதிகரித்தது.

கிட்டத்தட்ட 30 வகையான ஏற்றுமதிகள், அதாவது மரம் மற்றும் மரத்திலான பொருட்கள் (கருங்காலி), யானைத் தந்தம் மற்றும் யானைத்தந்தத்திலான உற்பத்திகள் மற்றும் உந்து ஊர்திகள் (1945 இற்கு முன்னர் இலங்கையில் முதன் முதலாக பதிவு செய்யப்பட்டது) மற்றும் பல கனிப்பொருள் உற்பத்திகளான விரயமான மற்றும் கழிவான செம்பு, நிக்கல், அலுமினியம், ஈயம், சிங், தகரம், தங்ஸ்ரன், மொப்டனும்ரன்ரலும் மற்றும் மகனீசியம் ஆகியவை சூழலைப் பாதுகாத்தல் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாத்தல் போன்ற குறிக்கோள்களின் அடிப்படையில் தொடர்ந்தும் உரிமத்தின் கீழ் இருந்தன. பளிங்கு, இரும்பு மற்றும் மெல் உருக்கு உற்பத்திப் பொருட்கள் நீங்கலான முழு ஏற்றுமதி துறையும் அனைத்து ஏற்றுமதி மற்றும் பெறுமதி மீதான விற்பனை வரிகளிலிருந்து 1992 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து தொடர்ந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

எனினும், தேயிலை, தெங்கு, தெங்குற்பத்திப் பொருட்கள், கோதுடன் கூடிய மரமுந்திரிகைப் பருப்பு, பதனிடப்படாத தோல் மற்றும் இரும்பு அல்லாத கழிவு உலோகங்கள் என்பவற்றின் மீது ஏற்றுமதி வரி பிரயோகிக்கப்படுகின்றது. சங்குகள், முருகைக்கல் பாறை ஓடுகள், யானைகள் மற்றும் கொம்பன் யானைகள் என்பவற்றின் மீது ஒரு பெயரளவான கட்டணம் அல்லது இறைக் கட்டணம் விதிக்கப்படுகின்றது.

விலக்களிக்கப்பட்ட பொருட்கள் பட்டியலில் உள்ள பொருட்களின் எண்ணிக்கை 2002 நவெம்பர் 6 ஆம் நாளன்று 22 ஆக தொடர்ந்தும் மாற்றமடையாமலிருந்தது. அந்தந்த வகைகளின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும் திறைசேரி செயலாளரின் அனுமதி பெறப்பட்டுள்ளதென்றும் சுங்கப்பணிப்பாளர் நாயகம் திருப்திகொள்ள வேண்டும். 2 சதவீத சலுகைத் தீர்வையுடனான 13 பொருட்கள் மற்றும் சாதாரண தீர்வையில் 50 சதவீதம் கொண்ட 2 பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்கிய சலுகைப்பட்டியல் 2002 நவெம்பர் 6 ஆம் நாளிலிருந்து தொடர்ந்தும் மாறாதிருந்தது. எனினும் 2003 செத்தெம்பர் 4 இல் 2 சதவீத சலுகை வீதம் 2.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2002 மே 1 ஆம் நாளிலிருந்து இறக்குமதிகளின் கொ.கா.க பெறுமதியில் 1 சதவீதம் கொண்ட துறை முகங்கள் மற்றும் வானூர்தி நிலையங்கள் அபிவிருத்தி வரி அறிமுகப்படுத்தப்பட்டது. பதனிட்டு மீளஏற்றுமதி செய்வதற்கான இறக்குமதிகளின் கொ.கா.க பெறுமதியில் 0.75 சதவீதத்திற்குட்பட்டிருந்த துறைமுகங்கள் மற்றும் வானூர்திகள் அபிவிருத்தி வரி, 2003 சனவரி 1 ஆம் நாளிலிருந்து 0.5 சதவீதமாக குறைக்கப்பட்டது.

சுங்க பெறுமதி மதிப்பீடு மீதான உடன்படிக்கை 2003 சனவரியில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப் பட்டது.[1] வர்த்தக நடைமுறைகளுக்கு இணங்கிச்செல்லும் எழுந்தமானமான மற்றும் போலியான சுங்க பெறுமதி மதிப்பீட்டு நடைமுறைகளை மாற்றியமைக்கும் ஒருமைத்தன்மை மற்றும் சமத்துவ முறை கொண்ட பொருட்களுக்கான பெறுமதி மதிப்பீட்டினை இவ்வுடன்படிக்கை குறிக்கோளாக கொண்டுள்ளது.

### புடவைகள் மற்றும் ஆடைகள் அனுமதிப் பங்கு ஒதுக்கீடு

அனுமதிப் பங்கீட்டு முறையை அதிக நெகிழ்ச்சித் தன்மையுடையதாக ஆக்குதல், ஆவணப்படுத்தலிலான செலவினை குறைத்தல் மற்றும் காலதாமதத்தை குறைத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு புடவை அனுமதிப்பங்குச் சபை 2003 இல் அதன் அனுமதிப் பங்கு ஒதுக்கீடு, ஒப்படைத்தல் மற்றும் மாற்றல் செய்யும் நடைமுறைகள் என்பவற்றை மாற்றியுள்ளது. புடவை அனுமதிப்பங்குச் சபையானது இக்கொடுக்கல் வாங்கல்களை ஏற்றுமதியாளர்களுக்கு அதிக பயனுறுதியுள்ளதாகவும், பிரயோசனமுள்ளதாகவும் ஆக்கும் நோக்குடன் புதிய அனுமதிப்பங்கு உரிமை மாற்ற நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய நடைமுறையின் கீழ் உரிமை மாற்றப்பட்ட அனுமதிப்பங்கு உரிமை மாற்றப்பட்டவரின் பிரதான அனுமதிப் பங்குடன் இணைக்கப்படுவதுடன் உரிமை மாற்றப்பட்டவரின் ஏதாவது மற்றைய அனுமதிப் பங்குகளுடன் சேர்த்து அனுமதிப்பங்கு ஆண்டு முழுவதும் பயன்படுத்தக் கூடியதாகவிருக்கும். முன்னைய முறைமையின் கீழ் தொகையாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டியிருந்த உரிமை மாற்றப்பட்ட அனுமதிப் பங்குகளின் பயன்படுத்தலிலான நெகிழ்வுத்தன்மையை இது அதிகரிக்கச் செய்யும். குறிப்பிடப்பட்ட ஆண்டில் ஒத்தோபருக்கு முன் ஒப்படைக்கப்பட்ட அனுமதிப் பங்குக்காக எதிர்வரும் ஆண்டில் 100 சதவீத அனுமதிப்பங்கை பெற்றுக்கொள்வதற்கு மேலதிக அனுமதிப் பங்குகளை ஒப்படைத்திருந்த அனுமதிப் பங்குடமையாளருக்கு சந்தர்ப்பமொன்றினை வழங்குவதன் மூலம் அனுமதிப் பங்கிற்கான ஒப்படைத்தல் திட்டமும் மாற்றியமைக்கப்பட்டது. முன்னைய முறைமையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அனுமதிப் பங்கிற்காக எதிர்காலத்தில் அனுமதிப்பங்கு வழங்கப்படுவதானது பயன் படுத்தப்படாத அனுமதிப் பங்கின் ஒப்படைக்கப்பட்ட நேரத்திற்கமைய வேறுபட்டதுடன், ஆகத்து மாதத்துக்குப் பின் தமது அனுமதிப் பங்கினை ஒப்படைத்த அனுமதிப் பங்குதாரர் அதற்காக எதிர்காலத்தில் அனுமதிப்பங்கினை பெறுவதற்கு பொருத்தமற்றவராவார். மேலும், புடவைகள் அனுமதிப்பங்கு சபை முன்னர் நலிவுற்றிருந்து மீளவமைக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக அனுமதிப்பங்கை ஒதுக்கீடு செய்தது. 2003 சனவரியிலிருந்து, புடவைகள் அனுமதிப்பங்கு சபையுடன் துணை ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தலுக்கான தேவைப்பாடு நீக்கப்பட்டது.

2003 இல், ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்காவுக்கான ஏற்றுமதிக்காக, 30 அனுமதிப்பங்கு வகைகளும் கனடாவுக்கான ஏற்றுமதிக்காக 11 வகைகளும் கட்டுப்பாடின்றி திறந்து விடப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் கிடைக்கத்தக்க தாகவுள்ள அடிப்படை அனுமதிப்பங்கு முறையே 9 சதவீதத்தினாலும், 13 சதவீதத்தினாலும் அதிகரித்தது. இதன் பிரகாரம் 2003 இல் இந்நாடுகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்தஅனுமதிப்பங்கு 9 சதவீதத்தால் அதிகரித்தது.

---

1 1994 இன் வர்த்தக மற்றும் தீர்வைக்கான பொது உடன்படிக்கையின் வாசகம் VII இன் அமுலாக்கமம் மீதான உடன்படிக்கை என உத்தியோகபூர்வமாக அறியப்படுகின்றது.

2002 இன் 70 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2003 இல் மொத்த அனுமதிப்பங்கு பயன்பாட்டு வீதம் 65 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், அனுமதிப்பங்கின் கீழான ஏற்றுமதிகளின் அளவு இவ்வாண்டில் 2 சதவீதத்தால் அதிகரித்தது. வேறுபட்ட உற்பத்தி வகைகள் மற்றும் நாடுகளுக்கிடையில் அனுமதிப்பங்கின் பயன்பாடு பெரியளவில் வேறுபட்டது. இலங்கை ஆடைகளுக்கான ஐக்கிய அமெரிக்காவின் உயர்ந்த கேள்விகளுக்கு மத்தியிலும், ஐக்கிய அமெரிக்க அனுமதிப் பங்கின் பயன்பாடு 2002 இன் 71 சதவீதத்திலிருந்து 2003 இல் 67 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறிக்கப்பட்ட பொருட்களுக்கான குறைந்தளவான கேள்வி, ஏனைய அனுமதிப்பங்கு வகைகளின் கீழ் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் உயர்ந்த பெறுமதி கூட்டிய ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு அவர்களது இயலளவைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்தமை அல்லது அனுமதிப்பங்கின் கீழ் அல்லாத ஆடைகளை உற்பத்தி செய்தல் என்பன குறைபயன்பாட்டிற்கான பகுதியளவு காரணமாக அமைந்தன. இது அனுமதிப் பங்கல்லாத ஆடை வகைகளின் அதிகரித்த ஏற்றுமதிகள் மற்றும் சில பிரபல்யமான வகைகளின் அனுமதிப்பங்கின் முழுப் பயன்பாடு என்பவற்றில் தெளிவாகக் காணப்பட்டது. நீளக்காற்சட்டைகள், உள்ளங்கிகள், ஆண்களுக்கான பின்னப்பட்ட மேலங்கிகள் மற்றும் பெண்களுக்கான மேற்சட்டைகள் போன்ற சில பிரபல்யமான வகைக்கான பயன்பாட்டு வீதங்கள் தொடர்ந்தும் 90 சதவீதத்துக்குமேல் மாறாமலிருந்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே கனடாவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பங்குகளின் பயன்பாட்டு வீதம் ஐக்கிய அமெரிக்காவினதைப் பார்க்கிலும் குறைவாக இருந்தது. கனடிய அனுமதிப் பங்குகளின் மொத்தப் பயன்பாட்டு வீதம் 2002 இன் 33 சதவீதத்திலிருந்து 2003 இல் 32 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. நீளக்காற்சட்டைகள், மேலாடை மற்றும் அரைக்காற்சட்டைகள் என்பவையே 90 சதவீதத்திற்கு மேல் பயன்படுத்தப்பட்ட ஒரே ஒரு வகையாகும்.

### ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள்

2003 இல், வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட பல ஊக்குவிப்புத் திட்டங்களை ஏற்றுமதியாளர்களுக்கென அரசு தொடங்கிவைத்த அதேவேளை தற்போதுள்ள ஊக்குவிப்புக்களான வரிவிலக்களிப்பு, மூலப்பொருட்களின் தீர்வையற்ற இறக்குமதிகள் மற்றும் தீர்வை மற்றும் வரிச்சலுகைகள் என்பன தொடர்ந்து செயற்படுத்தப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட மூலதன மற்றும் இடைநிலைப் பொருட்களுக்கான சுங்க அனுமதியுடனான களஞ்சிய வசதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கான உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள் மீதான தீர்வைகள் மற்றும் ஏனைய இறைவரிகள் என்பவற்றை ஏற்கனவேயுள்ள திட்டங்கள் உள்ளடக்குகின்றன. ஆண்டுக்கான விற்பனைப் புரள்வாக ஐ.அ.டொலர் 25 மில்லியனுக்கும் கூடுதலாகக் கொண்ட ஏற்றுமதி வர்த்தகப்படுத்தல் நிறுவனங்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு வரி விடுதலை கிடைக்கக் கூடியதாகவுள்ள அதேவேளை குறைந்த மட்டமான ஐ.அ.டொலர்கள் 5 மில்லியன் புரள்வினைக் கொண்ட வர்த்தகப்படுத்தல் நிறுவனங்கள் 5 - 10 வீதம் வரையான சலுகை வீதங்களுக்கும் தகுதியுடையனவாகும். குறைந்தபட்ச முதலீட்டுத் தேவைப்பாடுகளுக்குட்பட்டு பாரியளவான உட்கட்டமைப்பு மற்றும் வேளாண்மையை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு 5 - 10 ஆண்டுகள் கொண்டதொரு வரிவிடுதலையும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பணிகள் போன்றவைகளும் 3 ஆண்டு சலுகைரீதியான வரி விடுதலையும் போன்ற துறை வாரியான ஏனைய வரி உக்குவிப்புக்களும் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. 2003 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளை உள்ளடக்கிய, தயாரிப்பில் ஈடுபட்டு தமது உற்பத்தியில் 80 சதவீதத்திற்கு மேலானவற்றை ஏற்றுமதி செய்கின்ற ரூ.15 மில்லியன் முதலீட்டினை கொண்டுள்ள கைத்தொழில்களில் மேல்மாகாணத்தில் உள்ளவைக்கு (பிராந்தியம் I) 3 ஆண்டு ஏனைய மாகாணங்களில் உள்ளவைக்கு (பிராந்தியம் II) 5 ஆண்டு வரி விடுதலை வழங்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட மற்றும் சிறியளவான கைத்தொழில்களுக்கு நேரடியான நிதியுதவிகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களது சொந்த முயற்சிகளுக்கு செலவினைப் பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில் நிதி உதவி வழங்கியது. நவீனமயமாக்கல், உற்பத்தித்திறனை முன்னேற்றுதல் மற்றும் பன்னாட்டு சந்தையில் போட்டித்தன்மையுடையதாக மாற்றுதல் என்பன தொடர்பாக கைவினைப் பொருள் ஏற்றுதியாளர்களுக்கு உதவுவதற்காக திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. உறையவைக்கப்பட்ட கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றின் ஏற்றுமதியாளர்களுக்கு 2003 இல் தீர்வைத் தள்ளுபடி திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. 2003 இல் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஏறத்தாழ 30 மில்லியன்களாக இருந்தது.

## ஏற்றுமதியாளர்களுக்கான நிறுவன ரீதியான உதவிகள்

உற்பத்தி அபிவிருத்தி, சந்தை வாய்ப்பு, சந்தைப்படுத்தல், காப்புறுதி வசதி மற்றும் கொடுகடன் ஆகிய பலதரப்பட்ட வழிகளில் பல்வேறு நிறுவனங்கள் ஏற்றுமதியாளர்களுக்கு தொடர்ந்தும் உதவின. ஏற்றுமதி செய்முறையின் வேறுபட்ட படிமுறைகளுக்கு உதவி வழங்குவதற்கான பலதரப்பட்ட உற்பத்திகளுடன் இவை தமது உதவிகளை விரிவுபடுத்தின. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, எற்றுமதி செய்முறைப் படுத்தல் கம்பனிகளின் உற்பத்திச் செயற் பாடுகளை முன்னேற்றுவதற்குத் தொடர்ந்து உதவுவதுடன், இது தனியார் துறையினரையும் (ஏற்றுமதி வர்த்தகப்படுத்தல் நிறுவனங்கள்), அரச துறையினர் மற்றும் ஏற்றுமதிகளுக்கான உற்பத்திகளின் கிராமிய உற்பத்தியாளர்கள் ஆகியோரையும் ஒன்றிணைக் கின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 5,700 உற்பத்தியாளர்களைக் கொண்ட 9 செயற்றிட்டங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

2003 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு அரசாங்கத்தினால் இதுவரையிலும் செயற்படுத்தப்பட்டு வந்த தேயிலைக் கைத்தொழில்துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளை தனியார் துறையினரின் பங்குபற்றலுடன் கையேற்பதற்காக இலங்கைத் தேயிலைச் சங்கம் உருவாக்கப்பட்டது. ஏனைய தேயிலைகளிலிருந்து இலங்கைத் தேயிலையை வேறுபடுத்து முகமாக "இலங்கைத் தராதரத்தினை" அபிவிருத்தி செய்வதே இச்சங்கத்தின் முக்கியமானதொரு குறிக்கோளாக இருந்தது. நீல நிற மாணிக்கக் கற்களுக்கான முதன்மை உற்பத்தி நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு 2003 இல் சிலோன் சபையர் கவுன்சில் லிமிட்டெட் உருவாக்கப்பட்டது. சந்தையில் உயர் பெறுமானம் கொண்ட தொகுதியினரை இலக்காகக் கொண்டு சிலோன் சபையர் வியாபார இலச்சனை உபாயத்தை ஊக்குவிக்குமுகமாக உலகப் பிரசித்தி பெற்ற ஆபரண வடிவமைப்பாளருடன் சிலோன் சபையர் கவுன்சில் லிமிட்டெட் கூட்டமைப்பினை ஏற்படுத்திக் கொண்டது. இவ்வாண்டில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உலகளாவிய ரீதியில் 54 வர்த்தகச் சந்தைகளில் 333 ஏற்றுமதியாளர்கள் பங்கு கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் ஏழு உள்வரும் வெளிச் செல்லும் தூதுக் குழுக்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன.

சந்தைப்படுத்தலை மேம்பாடடையச் செய்வதற்காக, இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்கத்தக்கதான அதிகாரிக்கப்பட்ட சலுகைகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் 2003இல், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் , இந்தியாவின் சென்னை நகரத்தில் இலங்கை நிலையம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. சந்தைப்படுத்தலையும் முதலீட்டையும் மேலும் மேம்படுத்துவதற்காக இந்தியச் சந்தையிலுள்ள மத்திய மற்றும் உயர்தர பிரிவினர்களை இலக்காகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட பலதரப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2003இல் இலங்கை முதலீட்டுச்சபை பல ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டது. இது உயர்மட்ட வெளி நோக்கிய முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக் குழுக்களை சீனா, மலேசியா, ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா, யப்பான், தாய்லாந்து மற்றும் பார்றெயின் ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் சென்றது. மேலும், இந்தியா, தாய்லாந்து, சீனா, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளிலிருந்து பல உயர்மட்ட உள் நோக்கிய வியாபார தூதுக்குழுக்கள் இலங்கைக்கு வருகை தந்தன.

2004இல் பல்நூலிழை உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவதால் எற்படக்கூடிய அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காகவும் ஆடைகள் துறையில் இலங்கையின் தோற்றப்பாட்டை மேம்படச் செய்வதற்காகவும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. பயிற்சியளித்தல் மற்றும் உற்பத்திச் சமநிலைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. வியாபார உற்பத்திகளின் இலச்சனையுடனான பிரபல்யம் பெற்ற வாங்குனர்களை இலக்காகக் கொண்டு, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளில் இரு சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

ஏற்றுமதியாளர்களுக்கான காப்புறுதி வசதிகள் இலங்கைக்கு ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ஊக்குவிக்கப்பட்டன. வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கான உத்தர வாதங்கள், வெளிநாட்டு வாங்குனர்களுக்கான உத்தர வாதங்கள், ஏற்றுமதிகளை விரிவுபடுத்தவதற்காக வழங்கப்பட்ட கடன்களுக்காக கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடல் என்பனவற்றை உள்ளடக்கிய பலதரப்பட்ட ஏனைய வசதிகளையும் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கியது. பிரபல்யமான நிறுவனத்தின் மூலமான மறுகாப்புறுதி மூலம் இதனது பொறுப்புக்களை ஈடுசெய்ய அதனது இடர்நேர்வு வெளிப்பாடுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. இது இடர்நேர்வினை பொறுப்பேற்கும் அதன் ஆற்றலை அதிகரித்துள்ளது. இது அதனது செயற்பாட்டுப் பரப்பெல்லையையும் உள்ளடக்கத்தினையும் வியாபார

செயற்பாடுகளின் பரந்ததுறைகளுக்கும் விரிவு படுத்துவதனை இயலச் செய்யும். இதனது வியாபாரி பரப்பும் வெளிநாட்டு வாங்குனரின் நிலை குறித்த அறிக்கைகளை வழங்குதல், கப்பலேற்றலுக்குப் பின்னர் நேரடி நிதி வசதிகளை வழங்கல் மற்றும் குடிபெயர்ந்து செல்லும் தொழிலாளர்களுக்கு வெளிச் செல்வதற்கு முன்பு கடன்களை வழங்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு உத்தரவாதங்களை வழங்குதல் ஆகிய புதிய துறை களையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது.

மரக் கைத்தொழிலின் நீண்டகால உறுதிப்பாடு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு 2003 இல் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால்வன செயல்முகாமைப்பணிச் சபைச் சான்றிதழ்த் திட்டமொன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. வன செயல்முகாமைப் பணிச் சபைச் சான்றிதழ்த் திட்டமானது, மர உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் சிறந்த முறையில் முகாமைப் படுத்தப்பட்ட காடுகளிலிருந்து பெறப்பட்டதென்பதை உறுதிப்படுத்துகிறது.

தரம் மற்றும் நியமங்களைப் பேணுதல் பன்னாட்டு சந்தையில் போட்டிகரமாக விளங்குவததற்கு அவசியமானதாகும். இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் பொருத்தமான இலங்கை நியமங்களுக்கு அமைவாக வேளாண்மை உற்பத்திகளுக்குத் தரச் சான்றிதழ்களை வழங்குகின்றது. மரமுந்திரிகை, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றிற்கான ஏற்றுமதிக்கு முந்திய பரிசோதனை சுயவிருப்பின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டது. இலங்கைக் கட்டளைகள் நிறுவனமானது ஏற்றுமதி நோக்கத்திற்கான பத்தொன்பது மீன் பதனிடல் உற பத்தி நிறுவனங்களை கிரமமாக பரிசோதனை செய்து கண்காணித்தது. பன்னாட்டு நியமங்கள் மற்றும் தொழில்நுட்ப ஒழுங்கு விதிகள் தொடர்பாக ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் ஆலோசனைப் பணிகளையும் வழங்கியது.

தொழிற்பாட்டுப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், ஏற்கனவேயுள்ள நிறுவனங்களை விரிவுபடுத்தவும், வசதிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குமுகமாக முதலீட்டுச் சபையில் முதலீட்டாளர் தொடர்பு அலகொன்று நிறுவப்பட்டுள்ளது. பல விதமான வரி மற்றும் தீர்வைக் குறைப்புக்கள் மற்றும் வர்த்தக உடன்படிக்கை போன்றவற்றின் கீழான நன்மைகள், பன்னாட்டு நிகழ்வுகள் என்பன தொடர்பன தகவல் மற்றும் ஆலோசனைப் பணிகளையும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை வழங்கியது. அதேவேளை வியாபார சமூகத்திற்கு பரந்தளவான பணிகளுடன் வெற்றிகரமான முறையில் மின் வர்த்தக பணிகளையும் ஆரம்பித்தது.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு விடயங்களையும் உள்ளடக்குவதற்காக, ஏற்றுமதியாளர்கள் மன்றம் விரிவாக்கம் செய்யப்பட்டது. ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், மற்றும் முதலீட்டாளர்களுடன் அர சாங்கத்தின் உரிய அமைச்சர்கள், தொடர்பான அலுவலர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பன வற்றின் நேரடியான பங்குபற்றலுடன் அவர்களது இடர்பாடுகளையும் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு இம்மன்றம் உதவுகிறது.

## கப்பல் கட்டண வீதங்கள்

2003 ஆம் ஆண்டு காலத்தில், பல சேரிடங் களுக்கான சராசரிக் கப்பற் கட்டண வீதங்கள் கலப்பான மாற்றங்களைக் காட்டின. பிரதான ஏற்றுமதி சேரி டங்களான ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் என்பனவற்றிற்கான அடிப்படைக் கப்பற் கட்டண வீதங்கள் யுத்த இடர் நேர்வுக்கான மேலதிக கட்டணம் நீக்கப்பட்டதற்கு மத்தியிலும் அதிகரிப்புக்களைக் காட்டின. நமது பிரதான இறக்குமதிகளுக்கான கப்பல் கட்டண வீதமும் அதிகரிப்பைக் காட்டியது. இவ்வாண்டில் ஐக்கிய இராச்சியம், வட கண்டம், ஸ்கண்டி நேவியன் நாடுகள், பால்டிக் மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, கனடா, மெச்சிக்கோ என்பனவற்றின் துறை முகங்களுக்கான பொதுக் கப்பற் கட்டண வீதங்கள் அதிகரித்தன. ஐக்கிய இராச்சியம், வட கண்டம், ஸ்கண்டிநேவியன், பால்டிக் மற்றும் மத்தியதரைக்கடல் துறைமுகங்களுக்கான வீதங்கள் இருபது அடிக்குச் சமமான அலகுகொன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 525 - 750 ஆக தளம்பலுற்றுக் காணப்பட்டன. ஐக்கிய அமெரிக்க கிழக்குக்கரை/ பிராந்தியத்திற்கான பொதுவான வீதங்கள் இருபது அடிக்குச் சமனான அலகு ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 3000 இலிருந்து நாற்பது அடிக்குச் சமனான அலகு ஒன் றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 4,000 இற்கும் இடையில் வேறுபட்டுக் காணப்பட்டன. அதேவேளை ஐக்கிய அமெரிக்க பசுபிக்கரைக்கான (மேற்குக்கரை) இருபது அடிக்குச் சமமான அலகு ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 2,000 ஆகவும் மற்றும் 40 அடிக்குச் சமனான அலகு ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 2,775 ஆகவும் இருந்தன. எனினும் கப்பற் கட்டணங்கள் முக்கிய ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் பரவலான வீச்சில் மாறுபட்டுக் காணப்பட்டன. ஆடைகள், தேயிலை, இறப்பர், இறப்பர்க் கையுறைகள், கம்பளங்கள் மற்றும் பயணப்பைகள் என்பனவற்றிற்கான ஐக்கிய அமெரிக்காவிற்கான கப்பற்கட்டண வீதங்கள் அதிகரித்த அதேவேளை திண்ம இறப்பர் ரயர்கள் மற்றும் சில பொருட்களுக்கான கப்பற் கட்டண வீதங்கள் வீழ்ச்சியடைந்தன. 2002இன் இறுதிப்பகுதியில், யுத்த

இடர் நேர்வுக்கான உயர் மேலதிகக் கட்டணம் அகற்றப்பட்டதால் செங்கடல், அரேபியக் குடா மற்றும் யப்பான் என்பவற்றிற்கான தேயிலைக் கப்பற் கட்டண வீதங்கள் குறைவடைந்தன. வட கண்டத்திற்கான பருத்தி நூல், இறப்பர், இறப்பர் கையுறைகள், தேயிலை, விளக்குமாறுகள் மற்றும் தூரிகைகள் என்பவற்றிற்கான கப்பற் கட்டண வீதங்கள் அதிகரித்த அதேவேளை ஆடைகள், மென்மையான விளையாட்டுப் பொருட்கள், திண்ம இறப்பர் ரயர்கள் என்பனவற்றிற்கான வீதங்கள் குறைவடைந்தன.

துறைமுக கையாளல் கட்டணம், எரிபொருள் சீராக்கல் காரணி, சுயஸ் கால்வாய் இடமாற்றல் கட்டணம், ஏற்றுமதிக்கான தரையிறங்கல் கட்டணம் மற றும் உச்ச கால மேலதிகக் கட்டணம் போன்ற ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மேலதிக கட்டணங்களை கப்பற் கட்டண வீதம் உள்ளடக்கியிருந்தது. செத்தெம்பர் 11 இன் விளைவாக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தால் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கப்பற் சரக்கு வெளிப்படுத்தல் தரவுக் கட்டணம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. தொடர்பான விதிமுறைகளை ஒத்துப்போகச் செய்ய ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், ஐக்கிய அமெரிக்கச் சுங்கத்திற்கு 24 மணித்தியாலத்திற்கு முன்னராக கப்பலில் கொண்டு செல்லப்படும் சரக்குப் பட்டியலை அறிவிக்கும் விதியை அறிமுகப்படுத்தியது. இவ்விதிக்கு இணங்கி ஒழுகத் தவறினால் பட்டியலொன்றிற்கு ஐ.அ.டொலர் 25 தண்டப்பணமாக அறவிடப்படும்.

## 9.12 வர்த்தக உறவுகள், வர்த்தகப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு ஒழுங்குகள்

2003 இல் இலங்கை பிராந்திய, இருபுடை மற்றும் பல்புடை உறவுகளைப் பலப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு உலக வர்த்தக அமைப்புடனான உறவை உறுதிப்படுத்தியது.

வங்கித்தொழில் மற்றும் காப்புறுதி பணிகள், தொலைத்தொடர்பூட்டல், சுற்றுலா மற்றும் பயணம் தொடர்பான பணிகள் என்பன தொடர்பில் வர்த்தகம் மற்றும் பணிகள் மீதான பொது உடன்படிக்கையின் கீழ், 2003 இல் உலக வர்த்தக அமைப்புக்கு இலங்கை தொடரான புதிய கடப்பாடுகளை வழங்கியது இக்கடப்பாடுகள் நாட்டின் தற்போதுள்ள தார ளமயமாக்கல் நிலையை விளக்கமாக விபரிக்கின்றது. வர்த்தகம் தொடர்பான புலமைச் சொத்து உரிமையை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் புலமைச் சொத்து உரிமை மீதான வரைவு அறிமுகப் படுத்தப்பட்டதுடன், இது 2003 மே இல் பாராளுமன்ற த்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2003 இல் உலக வர்த்தக அமைப்பின் இர ண்டாவது வர்த்தகக் கொள்கை மீளாய்வு ஆரம்பிக்கப்பட்டு 2004 மார்ச்சில் பூர்த்தியடைந்தது. வர்த்தகக் கொள்கை மீளாய்வானது இலங்கையின் பிரதான பேரண்டப் பொருளாதாரம் மற்றும் வர்த்தகக் கொள்கைகள் மீது கவனம் செலுத்தி இலங்கையின் தாராளமயமாக்கல் முயற்சிகளை பாராட்டிய அதேநேர ம் முன்னெதிர்வு கூறல் மற்றும் ஒளிவுமறைவற்ற தன்மை குறிப்பாக வேளாண்மை உற்பத்திகளுக்கான உயர்மட்ட தீர்வை விதிப்பு, குறைந்த வீதாசாரமான மட்டுப்படுத்தப்பட்ட தீர்வை வீதங்கள் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் பிரயோகிக்கப்பட்ட வீதங்களுக்கிடையிலான பாரிய இடைவெளி, உயர்ந்தளவான தீர்வை அதிகரிப்பு, உயர் பயன்தரு பாதுகாப்பு மற்றும் ஏனைய இறக்குமதிக் கட்டணங்கள் போன்ற சில விடயங்கள் தொடர்பில் விசனத்தை தெரிவித்தது.

2003 மார்ச் 5 இலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கியதன் மூலம் மூன்று ஆண்டுகால நடைமுறைப்படுத்தலை அடைந்த இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றியுள்ளது. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், 2003 மார்ச் 18 இலிருந்து இந்திய அரசாங்கம் இலங்கைக்கு 2,799 தீர்வைகளற்ற தீர்வைத் தொடர்களை வழங்கியது. இந்தத் திருத்தத்துடன், இந்திய தீர்வைப் பட்டியலிலுள்ள 4,150 தீர்வைத் தொடர்கள் (மொத்தத் தீர்வைத் தொடரில் 81 சதவீதம்) இலங்கையிலிருந்து செல்லும் ஏற்றுமதிகளுக்கு தீர்வையிலிருந்து விலக்களிக்கின்றன. இலங்கையிலிருந்து கப்பலேற்றப்பட்ட ஆடைகளுக்கு மூன்று மேலதிக நுழைவு துறைமுகங்களை உள்ளடக்குவதற்கு இந்தியா உடன்பட்ட அதேவேளை, முன்னைய பேச்சுவார்த்தைக்கமைய தேயிலை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் என்பன வற்றிற்கு வழங்கப்பட்ட நுழைவு மையங்களுக்கான கடல் மற்றும் வானூர்தி நிலைய நுழைவுகளை வழங்க இணங்கியுள்ளது. மேலும், புடவைகள் மீதான தற்போதைய தீர்வைச் சலுகைகளை அதிகரிப்பதற்கு இந்தியா இணங்கியுள்ளது. இலங்கை வர்த்தகர்களுக்கு தனிப்பட்ட நேர்முகப் பரீட்சிப்பு தேவைகளின்றி, வர்த்தக சம்மேளனங்களினால் அல்லது இலங்கை அர சாங்கத்தினால் வழங்கப்படும் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு நுழைவுச் சீட்டுக்களை வழங்குவதற்கு இந்தியா ஒழுங்குகளை மேற்கொள்ளும். 2002 இன் ஐ. அ. டொலர்கள் 853 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகள் 2003 இல் ஐ.அ. டொலர்கள் 1,073 மில்லியன்களுக்கு 26 சதவீதத்தினால் அதிகரித்தன.

சிறப்புக்குறிப்பு 17

## உலக வர்த்தக அமைப்பில் காணப்பட்ட முன்னேற்றங்கள்

1948 இலிருந்து கற் என அழைக்கப்படும் வர்த்தகம் மற்றும் தீர்வை மீதான பொது உடன்படிக்கை பன்னாட்டு வர்த்தக முறைமைக்கான விதிகளை வழங்கியது. 1 சனவரி 1995 அன்று இது தன்னை ஒரு முழுமைப்படுத்தப்பட்ட பன்னாட்டு அமைப்பான உலக வர்த்தக அமைப்பாக சீரமைத்துக் கொண்டது. ஏதேனும் உடன்படிக்கையொன்று செயற்படுத்தப்பட முன்னர் உலக வர்த்தக அமைப்பின் அங்கத்துவ நாடுகளிடையே அது தொடர்பான இணக்கப்பாடு ஏற்படல் வேண்டும் என்பது இவ் அமைப்பின் குறிப்பிடத்தக்கதோர் பண்பாக இருந்தது.

பாரபட்சமின்மை, வர்த்தகத் தடைக்குறைப்பு கொள்கை முன்னறியப்படக்கூடிய கொள்கை, ஒளிவு மறைவற்ற தன்மை, போட்டித்தன்மை, குறைவிருத்தி நாடுகளுக்கான விசேட பரிகாரம் என்பன இவ் உலக வர்த்தக அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளாக அமைந்துள்ளன. உலக வர்த்தக அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்டவாறான சுதந்திர வர்த்தகம் அனைத்து நாடுகளுக்கும் குறிப்பாக போதியளவு உள்ளூர் சந்தைகளைக் கொண்டிராத சிறிய நாடுகளுக்கும் பயனளிக்கும் எனப்பலரும் நம்புகின்றனர். இதனால், வர்த்தகத்தை மேம்படுத்தும் தாராளமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு இணங்கத் தவறுதலானது சகல நாடுகளையும் குறிப்பாக இலங்கை போன்ற சிறிய அபிவிருத்தியடையும் நாடுகளை பாதிக்கும்.

அமைச்சர்கள் மட்ட மாநாடே உலக வர்த்தக அமைப்பின் அதிஉயர் / கொள்கை வகுக்கும் சபையாகவுள்ளது. அமைச்சர்கள் மட்ட மாநாடு ஆகக்குறைந்தது இரண்டு வருடங்கட்கு ஒருமுறையாவது இடம்பெறல் வேண்டும். 1995இல் உலக வர்த்தக அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, சிங்கப்பூர் (திசெம்பர் 1996), ஜெனீவா (மே 1998), சியட்டில் (நவெம்பர்-திசெம்பர் 1999), டோகா (நவெம்பர் 2001), கன்கூன் (செத்தெம்பர் 2003) ஆகிய இடங்களில் ஐந்து அமைச்சர்கள் மட்ட மாநாடுகள் இடம்பெற்றுள்ளன.

சிங்கப்பூரில் நடைபெற்ற முதலாவது அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் வர்த்தக தாராளமயமாக்கல் தவிர்ந்த சில விடயங்கள் கலந்தாலோசனைக்கு எடுக்கப்பட்டன. 'சிங்கப்பூர் விடயங்கள்' என அழைக்கப்படுவனவாகும்.[1] இவ்விடயங்கள் வர்த்தகம் தொடர்பான முதலீட்டு விடயங்கள், வர்த்தகம் சம்பந்தப்பட்ட போட்டிக்கொள்கை, வர்த்தக வசதியாக்கம், அரச கொள்வனவுகளில் வெளிப்படையான தன்மை என்பனவற்றுடன் தொடர்புடைய வரியாக இருந்தன. ஜெனீவாவில் இடம்பெற்ற இரண்டாவது மாநாட்டில் பல்புடை விதிகள் விதி அடிப்படையிலான வர்த்தக முறைமையின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டதுடன் சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள், என்பனவும் மீள உறுதிப் படுத்தப்பட்டன.

சியாட்டில் இடம்பெற்ற மூன்றாவது அமைச்சர்கள் மட்ட மாநாடு புதிய விடயங்கள் மீதான உடன்பாடு வேளாண்மை உதவுதொகை தொடர்பில் ஐக்கிய அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகள் போன்ற காரணங்களினால் தோல்வியில் முடிந்தது. நான்காவது மாநாடு ஐக்கிய அமெரிக்கா மீதான செத்தெம்பர் 11 ஆந் திகதிய தாக்குதலின் பின்னர் டோகாவில் இடம் பெற்றதாகும். நன்கு பிரபல்யமான டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பெறுபேறாக உலக வர்த்தக அமைப்பின் கோட்பாடுகளை முன்னெடுத்தல், அத்துடன் வர்த்தகத்தை திரிபுபடுத்தும் பண்ணை உதவுதொகைகளைக் குறைத்தல், பண்ணைப் பொருட்கள் மீதான தீர்வைகளைக் குறைத்தல், வேளாண்மை ஏற்றுமதி உதவுதொகைகளை நீக்குதல், புடவைகள் மீதான தீர்வைகளைக் குறைத்தல், பணிகளில் சுதந்திரமான வர்த்தகம் என்னும் பல விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் போன்றவை தீர்மானிக்கப்பட்டன.

கன்கூன் அமைச்சர்கள் மட்டக்கூட்டத்தின் வரைவுப் பிரகடனமானது வேளாண்மை, வேளாண்மையல்லா சந்தைகளில் நுழைதல், சிங்கப்பூர் விடயங்கள் போன்ற துறைகள் சார்ந்த முக்கிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது. வேளாண்மை

1. அமைச்சர்கள் மட்டப் பிரகடனங்கள் உலக வர்த்தக அமைப்பின் வெப் தளமான டபிள்யூ.டபிள்யூ.டபிள்யூ.டபிள்யூ.ரிஓ.ஓ.ஆர்ஜி யில் பெறப்படலாம்.

*சிறப்புக்குறிப்பு* 17(தொடர்ச்சி)

தொடர்பாக, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் இடையேயும் ஏன் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கிடையேயும் வெளிப்படையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருப்பினும், பேச்சுவர்த்தைகளை முன்னெடுப்பதற்காக, ஐரோப்பிய யூனியனும் ஐக்கிய அமெரிக்காவும் தமக்கிடையேயான கருத்து வேறுபாடுகளைக் குறைக்க இணங்கிக் கொண்டன. எவ்வாறாயினும், பிறேசில், இந்தியா, சீனா, தென்ஆபிரிக்கா என்பவற்றின் தலைமையில் 21 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் ஐரோப்பிய சமூகமும் ஐக்கிய அமெரிக்காவும் கூட்டு அறிக்கையில் அல்லது அமைச்சர்களின் கூட்டு அறிக்கையில் வேளாண்மை[2] தொடர்பாகன ஜி21 நாடுகளின் கரிசனை உள்ளடக்கப்பட வேண்டும் என வாதிட்டனர்.இதனால், வேளாண்மை தொடர்பாக அமைச்சர்கள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரத் தவறிவிட்டனர். யப்பான், கொரியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்து சிங்கப்பூர் விடயங்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வலியுறுத்தின. ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் சிங்கப்பூர் விடயங்களுள் கடைசி இரண்டு விடயங்கள் மீதான அதாவது வர்த்தக வசதியாக்கம், அரச கொள்வனவுகளில் வெளிப்படையான தன்மை என்பன தொடர்பாக மட்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதை ஆதரித்தன. எவ்வாறாயினும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பலவும் எந்தவொரு சிங்கப்பூர் விடயம் ஏதேனும் ஒன்று தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்த மறுப்புத் தெரிவித்தன. இறுதியாக, எந்தவித உடன்பாட்டுக்கும் வரமுடியாத நிலையில் கூட்டம் திடீரென முடிவுற்றது.

இலங்கை ஜீ. 21 நாடுகள் குழுவில் சேரவில்லை. எவ்வாறாயினும் இலங்கையின் பேச்சுவார்த்தைகள் தேசிய நலன்களைப் பாதுகாப்பது தொடர்பாக குறிப்பாக வேளாண்மை, வேளாண்மையல்லா சந்தைப் பிரவேசம், சேவைகள், சிங்கப்பூர் விடயங்கள் என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

பெரும்பாலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கே பயன்தரக்கூடிய பன்னாட்டு சுதந்திர வர்த்தக முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் கன்கூன் மாநாட்டுத் தோல்வியானது பெரும் பாதிப்பாக அமைந்தது. உலக வங்கியின்படி, டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்படியான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடியுமிடத்து, 2015ஆம் ஆண்டளவில் வருடத்துக்கு 500 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தொகையாக உலக வருமானத்தை அதிகரிக்க முடியும். இவ்வருமானத்தில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொகை வறிய நாடுகளையே சென்றடைவதுடன் 144 மில்லியன் மக்களை வறுமைப்பிடியினின்றம் விடுவிக்கவும் உதவும். பெரும்பாலான இலாபம் அவர்களுக்கிடையேயான சுதந்திர வர்த்தகத்தின் மூலம் கிடைக்கும் அதேவேளை அபிவிருத்தியடைந்த நாடுகளின் தீர்வையிலும், ஏனைய உதவு தொகைகளிலும் செய்யப்படும் குறைப்பும் கணிசமானளவிற்கு உதவும்.

கன்கூன் கூட்டம் தோல்வியில் முடிவுற்றதைத் தொடர்ந்து பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பல அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் இருபுடை உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தன. இத்தகைய உடன்படிக்கைகள் தந்திரோபாய முக்கியத்தவத்தைக் கொண்டிருந்த போதிலும், பல்புடை சுதந்திர வர்த்தக நலன்களை குறைத்து மதிப்பிடுவதாயும் ஏனைய வறிய நாடுகளிலிருந்து வர்த்தகத்தினை திசைதிருப்புவன வாகவும் உலக வள ஒதுக்கீட்டில் பாதகமான சமச்சீரின்மைக்கு காரண மாகவும் அமைந்தன. எனவே, உலக வர்த்தக அமைப்பினதும் அதன் 146 அங்கத்துவ நாடுகளினதும் கூட்டுப்பொறுப்பானது உலக வர்த்தக அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளில் கவனம் செலுத்துவதும் அநாவசியமான சிக்கல்களுடன் கூடிய ஏனைய விடயங்களைக் கொணர்ந்து தமது முக்கியத் துவத்தினைக் குறைக்காது, முக்கிய விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைளை மீள ஆரம்பித்தலுமாகும்.

2. ஜீ.21 நாடுகளாவன:ஆர்ஜன்டீனா, பொலிவியா, பிறேசில், சிலி, சீனா, கொலம்பியா, கோத்தா றிக்கா, கியூபா, ஈகுவடோர், எகிப்து, கௌதமாலா, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிக்கோ, நைஜீரியா, பாகித்தான், பரகுவே, பேரு, பிலிப்பைன்ஸ், தென்ஆபிரிக்கா, தாய்லாந்து, வெனிசியூலா.

*சிறப்புக்குறிப்பு 18*

## உலக வர்த்தக அமைப்பினால் இலங்கையின் இரண்டாவது வர்த்தகக் கொள்கை மீளாய்வு

ஒழுங்கான கால இடைவெளியில் வர்த்தகக் கொள்கைகளை மீளாய்வு செய்வது, செய்யப்படுதல் உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கைகளில் சட்டரீதியான கடப்பாடாக்கப்பட்டுள்ளது. அம் மீளாய்வுகளில் அங்கத்துவ நாடுகளின் வர்த்தகம் மற்றும் அது தொடர்பான கொள்கைகள் கிரமமான கால இடைவெளிகளில் பரீட்சிக்கப்பட்டு மதிப்பிடப்படுவதுடன் வர்த்தக தாராள மயமாக்கலில் உலக வர்த்தக அமைப்புக்கான அவற்றின் கடப்பாடுகள் பற்றியும் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகத்தின் அளவு அடிப்படையில் மதிப்பிடப்படும். ஒவ்வொரு மீளாய்வு தொடர்பாகவும் இரண்டு ஆவணங்கள் தயாரிக்கப்படும். (அ) மீளாய்வுக்குட்பட்ட அங்கத்துவ நாட்டின் அரசினால் ஆக்கப்படும் கொள்கைக்கூற்று. (ஆ) உலக வர்த்தக அமைப்பின் செயலகத்தினால் தன்னிச்சையாக எழுதப்பட்ட விரிவான அறிக்கை. இவ்விரண்டு ஆவணங்கள் பற்றியும் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தகக் கொள்கை மீளாய்வு அமைப்பினால் முழு நிறைவான கூட்டத்தொடரின்போது கலந்துரையாடப் பட்டது.

ஒவ்வொரு நாடுகளினதும் மீளாய்வுக் கால இடைவெளி உலக வர்த்தகத்தில் அவை கொண்டுள்ள பங்குகளின் அடிப்படையில் வேறுபடும். உலக வர்த்தகத்தில் பெருமளவு பங்கினை வகிக்கும் நான்கு அங்கத்துவ நாடுகளின் (இப்பொழுது ஐரோப்பிய யூனியன், ஐக்கிய அமெரிக்கா, யப்பான், கனடா) மீளாய்வு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும். அடுத்து இடம்பெறும் 16 பெரிய நாடுகளின் மீளாய்வு நான்கு வருடங்களுக்கு ஒரு முறையும் மீதி நாடுகளினது ஆறு வருடங்களுக்கு ஒரு முறையுமென இடம்பெறும். குறைவிருத்தி அங்கத்துவ நாடுகள் தொடர்பாக நீண்ட கால இடைவெளிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடான இலங்கை ஆறு வருடங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப் படுகிறது. அத்தகைய முதலாவது மீளாய்வு 1995 இல் இடம்பெற்றது. இரண்டாவது மீளாய்வு 2001 இல் இடம்பெறுவதற்கு அட்டவணையிடப்பட்டிருந்தபோதும் 2004 மாச்சு மாதம் பூர்த்தியாக்கப்பட்டது.

2004 இல் செய்து முடிக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது வர்த்தகக் கொள்கை ஆவணத்தின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

1. அரசாங்கம் 'மீண்டெழும் இலங்கை' எனும் கொள்கை ஆவணத்தில் விவரிக்கப்பட்ட புனர்நிர்மாணம் மற்றும் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதில் கணிசமானளவு முயற்சிகளை மேற்கொண்டது. தனியார் மயப்படுத்துகை, கட்டுப்பாடுகளை அகற்றல் என்பவற்றில் இலங்கை கணிசமானளவு முன்னேற்றங்களை அடைந்துள்ளது.
2. இலங்கை தனது உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்வதில் பிராந்திய, இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளை செய்வதனைத் தொடர்ந்தபோதும் பல்புடை வர்த்தக முறைமைக்கு முக்கியத்துவம் வழங்குவதில் இலங்கை ஈடுபடுத்தியுள்ளது.
3. இலங்கை புதிய புலமைச் சொத்துச் சட்டவாக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் காத்திரமான நடைமுறைப்படுத்தல் மூலமும் செயற்படுத்தல் மூலமும் இதனைத் தொடர்ந்தும் பின்பற்றும்.
4. இலங்கை சுங்க நடைமுறைகளை இலகுபடுத்தியுள்ளதுடன் குறிப்பாக சுங்கத் தீர்ப்பனவுகட்கு கணனி மயப்படுத்தப்பட்ட முறையையும் அறிமுகப்படுத்தியுள்ளது.
5. இலங்கை நிதியியல் பணிகளில், அரச தலையீடுகளைக் குறைப்பதற்கும் வெளிநாட்டு பங்குக் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் தொலைத்தொடர்புகள் சந்தையை தாராள மயப்படுத்துவதற்குமான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.
6. புடவைகள் மற்றும், தைத்த ஆடைகள் போன்ற ஒரு சில ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைகளில் இலங்கை பெரிதும் தங்கியிருத்தலானது கடுமையான கரிசனைகளை தோற்றுவித்துள்ளது.
7. இலங்கை தீர்வையமைப்பானது குறைவான ஊகத்தன்மைகளையும் மற்றும் ஒழிவுமறைவற்ற தன்மைகளையும் கொண்டிருப்பதனை எடுத்துக் காட்டின. இவற்றுள் முக்கிய அறிகுறிகளாக அதிகளவு விருப்பத்துக்குரிய நாட்டின் தீர்வை

களில், குறிப்பாக, வேளாண்மை உற்பத்திப் பொருட்கள், குறைந்த வீதத்திலான பெறப்படுகின்ற வீதங்கள், பெறப்பட்ட, பிரயோகிக்கப்பட்ட வீதங்களிடையே காணப்படும் பாரிய இடைவெளி அதியுயர் தீர்வை விரிவாக்கமும் இதன் விளைவாக சில உற்பத்திப் பொருட்களுக்கு அதிகளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை தற்போதுள்ள ஏனைய இறக்குமதிக் கட்டணங்கள், (முக்கியமாக மேலதிகக் கட்டணங்கள் அத்துடன் துறைமுகங்கள், விமானத் தளங்கள் அபிவிருத்தி தீர்வை, இறைச்சி உற்பத்திப் பொருட்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், இனவிருத்தி அடிப்படையில் உருமாற்றிய உற்பத்திப் பொருட்களின் மீதான இறக்குமதித் தடைகள், நியமங்கள், எதிர்பாரா செயற்பாடுகள், பொருளாதார காரணிகளுக்கான அனுமதிப் பத்திர தேவைப்பாடுகள் மற்றும் வரி விதிவிலக்குகள்.

8. இலங்கையில் அரசாங்கத்தின் கொள்வனவு நடைமுறைகள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மூலப் பொருட்களுக்கான விலைகளுக்கும் உள்ளூர் வேலை ஒப்பந்தங்களுக்கும் முன்னுரிமையளிக்க வேண்டுமென்பதனை எடுத்துக்காட்டுகின்ற அதேவேளையில் இது கேள்விப்பத்திர நடைமுறைகளின் வெளிப்பாடற்ற தன்மையினாலும் பாதிக்கப் படுகின்றது. எனினும், இலங்கை கொள்வனவு முறைகளை சீர்திருத்துவதற்கான கடப்பாட்டினை கொண்டிருக்கிறது.

**சிறப்புக்குறிப்பு** 18 (தொடர்ச்சி)

மீளாய்வு பொறிமுறையானது ஒரு நாடு தனது கொள்கைகளையும் உலக வர்த்தக அமைப்பின் கொள்கைகளையும் ஒத்துப் பார்த்துப் பரிசீலனை செய்வதற்கான சந்தர்ப்பத்தை அந்நாட்டுக்கு வழங்கு கிறது. இது மேலும், அங்கத்துவ நாடொன்று இன்னொரு அங்கத்துவ நாடொன்றின் வர்த்தக அமைப்பைப் பரிசீலனை செய்து அதில் ஏதேனும் வர்த்தக ஊக்குவிப்பின்மை அல்லது பாரபட்சமான நடவடிக்கைகள் காணப்படின் அவை பற்றி உலக வர்த்தக அமைப்பின் சகல அங்கத்துவ நாடுகளுக்கும் அறிவிப்பதற்குமான நல்ல சந்தர்ப்பத்தையும் அவ் அங்கத்துவ நாட்டுக்கு வழங்குகின்றது. இப்பரிசீலனை மேற்கொள்ளப்படக்கூடியதுடன் அங்கத்துவ நாட்டின் வர்த்தக அமைப்புக்குச் சாதகமான மாற்றங்கள் தொடர்பாக ஜெனிவாவிலுள்ள நிரந்தர பிரதிநிதி தொடர்பான அரச அமைப்புக்கள், தனியார்துறை மற்றும் இவற்றுடன் இணைந்த அமைப்புக்கள் என நாட்டின் சகல துறையினரையும் ஒருமுகப்படுத்தி அதற்கான ஆலோசனை வழங்கலாம்.

உலக வர்த்தக அமைப்பினது அங்கத்தவர்களின் மீளாய்வுகள் பற்றிய நாட்காட்டியொன்றை வைத்திருப்பது, நாடொன்று உலக வர்த்தக அமைபபினது அங்கத்துவ நாடுகளின் சந்தைகளில் பிர வேசிப்பதற்குபெரிதும் உதவக்கூடிய பரிசீலனையைத் தயாரிப்பதற்கும் பல்புடை வர்த்தக ஒழுங்குகளின் அங்கத்துவ நாடென்றவகையில் பெறக்கூடிய முழுப்பயன்களை அனுபவிப்பதற்கும் பெரிதும் உதவியாக அமையும்.

வர்த்தகத்திற்கு அப்பால் பாரிய ஒருங் கிணைவினை நோக்கி இரு பொருளாதாரங்களையும் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பது தொடர்பாக விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்காக 2003 ஏப்பிறலில் இலங்கைக்கும், இந்தியாவிற்குமிடையில் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார நட்புறவு உடன்படிக்கை மீதான இணை ஆய்வுக்குழுவொன்று அமைக்கப்பட்டது. இணை ஆய்வுக்குழு 2003 ஆம் ஆண்டில் ஆய்வினை நிறைவுசெய்து அனைத்தையும் உள்ளடக்கிய நட்புறவு உடன்படிக்கையினை மேற் கொள்ளுமாறு விதந்துரைத்தது. அனைத்துப் பணிகள் துறைகள் மற்றும் பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கைக் கட்டமைப்பு குறிப்பாக, வர்த்தக சமூகம் மற்றும் தொழில்சார் நிபுணர்களின் இடப்பெயர்வுகள், தொழில் தராதரங்கள் மீதான உடன்படிக்கைகளின் பரஸ்பர அங்கீகாரம், போக்குவரத்து மற்றும் துணைப்பணிகள் என்பனவற்றிற்கான சிறப்பு ஏற்பாடுகள், வானூர்திகளின் எண்ணிக்கை மற்றும் சேரிடங்களை அதிகரிப்பதற்கான இருபுடை வான் பணிகளுக்கான உடன்படிக்கையை தாராளமயமாக்கல், ஒவ்வொரு நாடுகளிலும் முதலீட்டை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு கல்வி, சுற்றுலா மற்றும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் என்பவற் றிலான பொருளாதாரக் கூட்டுறவை ஊக்குவித்தல் ஆகிய தீர்வையற்ற தடைகளை அகற்றி வர்த்தகத்திற்கு வசதியளிப்பதனூடாக சந்தை நுழைவுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை விரிவாக்கப்பட்டு ஆழமாக்கப்பட வேண்டுமென இணை ஆய்வுக்குழு விதந்துரைத்துள்ளது.

2002 யூலையில் கைச்சாத்திடப்பட்ட ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கையின் இரண்டாவது இணைச்சபைக் கூட்டம் 2003 மார்ச்சில் ஐக்கிய

அமெரிக்காவின் வாசிங்டன் டி.சி இல் நடைபெற்றது. வர்த்தக தூதுக்குழுக்களை வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்காக வெளிநோக்கிய மற்றும் உள்நோக்கிய ஒழுங்கை அமைப்பதற்கான சாத்தியப்பாட்டைப் பரிசீலிக்க ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் இணங்கியுள்ளன. ஐக்கிய அமெரிக்க கொள்கலன் பாதுகாப்பு முயற்சியில் பங்குகொள்ளல், புலமைச் சொத்துரிமைகள் சட்டவாக்கங்களை திறமையான முறையில் அமுலாக்குவதற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி என்பனவற்றை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம், உலக வர்த்தக அமைப்பின் டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினை நோக்கி இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் முன்னோக்கிச் செல்லல் ஆகிய ஏனைய முக்கிய விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. வர்த்தகத்தைதிரிபுபடுத்தும் பண்ணை உதவு தொகைகளை குறைத்தல், பண்ணைப் பொருட்கள் மீதான தீர்வைக் குறைப்புக்கள், வேளாண்மை ஏற்று மதிக்கான உதவுதொகைகளை நீக்குதல், புடவைகள் மீதான தீர்வையைக் குறைத்தல் மற்றும் பணிகளிலான வர்த்தகத்தை தாராளமயப்படுத்தல் ஆகியவை தொடர்பான விடயங்களை டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் உள்ளடக்குகிறது.

வங்காளதேசம், சீனா, எகிப்து, மலேசியா, பாகித்தான், தாய்லாந்து, சவூதி அரேபியா மற்றும் சிங்கப்பூர் போன்ற ஏனைய நாடுகள் சிலவற்றுடன் பொருளாதாரம் அத்துடன் அல்லது வர்த்தக உடன்படிக்கைக்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சார்க் என அழைக்கப்படும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பு, பாங்கொக் உடன்படிக்கை, பிம்ஸ்ரெக் என அழைக்கப்படும் வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர வலையமைப்பு ஆகியவற்றுடனான தொடர்ச்சியான கலந்தாலோசனைகள் மூலம் 2003இல் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு மேலும் வளர்க்கப்பட்டது.

2004 சனவரியில் இஸ்லாமாபாத்தில் நடாத்தப்பட்ட 12 ஆவது உச்சி மாநாட்டில் சார்க் தலைவர்கள் சப்தா என அழைக்கப்படும் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. சப்தா உடன்படிக்கை 2006 சனவரி அளவில் தொழிற்பாட்டிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. சப்தா உடன்படிக்கை இறுதியாக்கப்பட்டுள்ளமையினால் மேலும் எந்தவொரு சப்தா சுற்றுக் கலந்துரையாடலும் நடாத்தப்படமாட்டாது. 2006ஆம் ஆண்டு அளவில் இவ் உடன்படிக்கையினை உரிய நேரத்தில் அமுலாக்குவதனை உறுதிப்படுத்தும் வகையில், பிரச்சினைக்குரிய பட்டியல், குறைந்தளவில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான (நேபாளம், பூட்டான், மாலைதீவு, வங்காளதேசம்) தொழில் நுட்ப உதவி, குறைந்தளவில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வருமான இழப்பீட்டின் காப்பீட்டிற்கான பொறிமுறை மற்றும் உற்பத்தி செய்யப்படும் மூல நாடு பற்றிய விதிகளின் இறுதிப்படுத்தல் போன்ற உடன்படிக்கையின் முக்கிய கூறுகளை இறுதிப்படுத்துவதற்கு அமைச்சர்கள் குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் குழு கலந்துரையாடல்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

அமைச்சர்களின் மட்டத்திலான நான்காவது பிம்ஸ்ரெக் வர்த்தக /பொருளாதார கூட்டம் கொழும்பில் 2003 மாச்சில் நடாத்தப்பட்டது. பிம்ஸ்ரெக் இன் கீழான பொருளாதார ஒத்துழைப்பானது வர்த்தகமும் முதலீடும், தொழில்நுட்பம், போக்குவரத்தும் தொடர்பூட்டலும், வலு, சுற்றுலா மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. வர்த்தக மற்றும் முதலீட்டுத்துறையின் பரந்தளவிலான வாய்ப்புக்கள் காரணமாக, இது புடவையும் ஆடைகளும், மருந்துகளும் மருந்தாக்கற் பொருட்களும், இரத்தினக் கல்லும் ஆபரணமும், வீட்டுத்தோட்டமும் பூந்தோட்டமும், பதப்படுத்தப்பட்ட உணவு, மோட்டார் வாகனக் கைத்தொழிலும் உதிரிப்பாகமும், இறப்பர், தேயிலை மற்றும் கோப்பி, தெங்கு மற்றும் வாசனைத் திரவியங்கள் போன்ற எட்டு துணைத்துறைகளுக்கு மேலும் பிரிக்கப்பட்டது. இலங்கை தொழில்நுட்பத்துறையின் முன்னணி நாடாகவும் பதப்படுத்தப்பட்ட உணவுகள், இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் துணைத்துறைகளுக்கான தலைமை நாடாகவும் 2004 இறுதி வரை விளங்கும். முதலாவது பிம்ஸ்ரெக் வியாபார மாநாடு 2003 திசெம்பர் 1 இல் கொழும்பில் நடாத்தப்பட்டது. பிம்ஸ்ரெக் பிராந்தியத்திற்கான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை விரைவுபடுத்துவதற்காகவும் ஒவ்வொரு துணைத்துறையின் கீழும் விரிவான நடவடிக்கைகளை இனங்கண்டு கொள்வதற்கு இம் முன் முயற்சிகளை நடைமுறைப் படுத்துவதனை வசதிப்படுத்தவதற்காக இன்னுமொரு மாநாட்டை நடாத்துவதற்கும் பிரதிநிதிகள் இணங்கினர். பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தகப் பிரதேசத்துக்கான கட்டமைப்பு உடன்படிக்கையை வரைவதில் நிபுணர் குழு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனை 2004இல் பிம்ஸ்ரெக் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இணக்கம் காணப்பட்ட பொருட்கள் தொடர்பில் ஏற்கனவே இருக்கும் தீர்வைகளுக்கு ஆகக்கூடிய அளவான 50 சதவீத முன்னுரிமை அளவை வழங்குவதை நோக்காகக் கொண்ட பாங்கொக் உடன்படிக்கையின் கீழான மூன்றாம் கட்ட கலந்துரையாடல்கள் தாய்லாந்தில் 2004 பெப்புருவரியில் நடாத்தப்பட்ட பாங்கொக்

உடன்படிக்கையின் துணைநில் குழுவின் 21 ஆவது கூட்டத் தொடரில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. வங்காள தேசம், சீனா மற்றும் தென் கொறியாவுடனும் இலங்கை அளிப்பு பட்டியல்களை பரிமாறிக் கொண்டது. இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே ஏற்கனவேயிருக்கும் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைக் கருத்திற் கொண்டு சலுகைகளை பரிமாறிக் கொள்வதில்லையென இவ் இரு நாடுகளுமே தீர்மானித்துவிட்டன. பாங்கொக் உடன்படிக்கையின் திருத்தப்பட்ட வாசகமென அழைக்கப்படும் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை தொடர்பான வேலையானது, முழுமையாக உற்பத்தி செய்யப்படாத அல்லது பெற்றுக் கொள்ளப்படாத உற்பத்திகள் தொடர்பிலான உள்நாட்டுப் பெறுமதி கூட்டல் பிரமாணங்களுடன் சம்பந்தப்பட்ட தீர்க்கப்படாத பிரச்சினை ஒன்றைத் தவிர திருப்திகரமாக முன்னேறியுள்ளது.

2003 ஒத்தோபரில் கொழும்பில் நடைபெற்ற பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர வலையமைப்பின் (பிஓஇசவ) நான்காவது அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் 2003 - 2005 இற்கான (பிஓஇசவ) தலைமைப் பதவியை இலங்கை பொறுப்பேற்றது. உயர் மட்ட செயலணிக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையைப் பின்பற்றி பிஓஇசவ இன் எதிர்காலப் போக்கைத் தீர்மானிப்பதில் குழுக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. பிஓஇசவ இன் அடுத்த அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் இலங்கையில் 2004 இல் நடாத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிஓஇசவ இன் முக்கிய கவனம் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடுகள் என்பவற்றிலான முக்கிய வலியுறுத்தல்களுடன் பிராந்திய ஒத்தழைப்பில் செலுத்தப்படுகிறது. இலங்கைக்கான விசேட நலவுரித்துக் கொண்ட தற்போது இடம்பெறும் பிராந்திய ஒத்துழைப்புச் செயற்றிட்டங்கள் சுற்றுலா மேம்பாடு, மீன்பிடி மற்றும் கப்பற்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை 2002 யூனில் தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் ஆசிய ஒத்துழைப்புக் கருத்துப்பரிமாறலின் (ஆஒக) உறுப்பினராக வந்துள்ளது. ஆஒக இன் முதலாவது உறுப்பினர்கள் கூட்டத்தில் இணங்கப்பட்டவாறு ஆசிய முறி நிதியம் 2003 யூன் 2 இல் ஏற்படுத்தப்பட்டது. ஆசிய நாடுகள் ஆசிய முறிகளை வழங்கல் செய்து ஆசிய முறிகளில் முதலீடு செய்யும் வகையில் கேள்வி மற்றும் வழங்கல் ஆகிய இரு பக்கத்திலான இணைந்த அபிவிருத்தி மூலம் ஆசிய முறிச் சந்தையின் உருவாக்கத்தை ஊக்கப்படுத்துதல் ஆசிய முறி நிதியத்தின் நோக்காகக் காணப்பட்டது. ஆசிய முறி நிதியம் ஐ. அ. டொலரில் குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன், பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி ஊடாக ஐக்கிய அமெரிக்க மற்றும் ஐரோப்பிய முதலீடுகளுக்காக திறந்து விடப்பட்டுள்ளது. ஐ. அ. டொலர் ஒரு பில்லியன் ஆரம்ப மூலதனத்துடன் நிதியத்தில் இணைந்து கொள்ளச் சம்மதித்த 11 உறுப்பினர் நாடுகளின் பங்கேற்புடன் ஆசிய முறிகளின் (ஏபீஎவ்1) முதற் தொகுதி 2003 யூனில் அறிமுகப்படுத்தப்பட்டது.

முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட அமைப்பில் பங்கேற்பதன் மூலம் வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழு என்பவற்றின் கீழ் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான தீர்வைச் சலுகைகளைத் தொடர்ந்து பெறுகிறது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பால் வரைவிலக்கணம் செய்யப்பட்ட முக்கிய தொழிலாளர் நியமங்களுடன் இசைந்து செல்லும் வகையில் இலங்கையின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாக இருந்ததால் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட அமைப்பின் கீழ் இலங்கைக்கு மேலதிக நன்மைகளை வழங்க ஐரோப்பிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இவ் ஏற்பாட்டின் கீழ் இலங்கை 2004 சனவரி 1 இலிருந்து 2005 திசெம்பர் 31 வரை நன்மையடையும்.

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் 2003 இல் சிறப்பாகச் செயலாற்றியது. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப் பொறிமுறை ஊடாக 2003 இல் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2002 உடன் ஒப்பிடுகையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியம் மற்றும் கோதுமை என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் மற்றும் ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிகரித்த பெற்றோலியத்தினாலும் 29 சதவீதத்தால் ஐ.அ. டொலர் 1,309 மில்லியனுக்கு அதிகரித்தது. இலங்கையிலிருந்து ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதி தொடர்பில் பெறப்பட்ட நிதியங்களின் மொத்தப் பெறுகைகள் 2003 இல் 11.6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. ஆசியத் தீர்ப்பனவு பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 2003இல் ரூ.89.7 பில்லியனாக விளங்கி 2002இனை விட 33 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. பொருட்களை நாட்டின் உள்ளூர் விலையை விட குறைந்த விலையில் ஏற்றுமதி செய்தல், உதவுதொகையளிக்கப்பட்ட இறக்குமதிகளுக்கு வரி விதித்தல் மற்றும் பாதுகாப்பு வழிமுறை ஆகியவை தொடர்பான சட்டவாக்கங்கள் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், உதவியளிக்கப்பட்ட இறக்குமதிகள் மற்றும் சடுதியான அதிகரிப்பு என்பவற்றிலிருந்து உள்நாட்டுக் கைத்தொழிலைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட 2003 இல் அமைச்சரவை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்டவாக்கம் பொருட்களை உள்ளூர் விலையிலும் குறைந்த விலையில் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கு எதிரான நடவடிக்கை, உதவு தொகையளிக்கப்பட்ட இறக்குமதிகள் மற்றும் இலங்கையில் பாதுகாப்பளித்தல் ஆகிய முன்மொழியப்பட்டுள்ள சட்டவாக்கங்களின் சட்ட மியற்றலானது நியாயமற்ற வர்த்தகம், உள்நாட்டு கைத்தொழிலுக்கு கடுமையான தீங்கை செய்தல் அல்லது செய்வதாகப் பயமுறுத்தல் என்பனவற்றிலிருந்து உலக வர்த்தக அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாப்பது மற்றும் ஊக்குவிப்பது தொடர்பான உலக வர்த்தக அமைப்பினால் விதந்துரைக்கப்பட்ட பல்புடை வர்த்தக நிவாரணங்களை உள்ளடக்கியுள்ளது.

## 9.13 உள்நாட்டு வர்த்தகமும் நிறுவன ரீதியான ஒழுங்குகளும்

வர்த்தக நடவடிக்கைகளிலான அரசின் பிரசன்னம் கடந்த பல ஆண்டுகளாக படிப்படியாகக் குறைந்துள்ளது. இதன் காரணமாக முக்கிய கட்டுப்பாடுகள் மற்றும் தலையீடுகள் என்பன வர்த்தக ஒழுங்கு விதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் விலையைத் தீர்மானிப்பதிலான அரசின் தலையீடு சில அத்தியாவசியப் பொருட்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. பொருளாதார மீட்சி, வடக்கு மற்றும் கிழக்கில் வர்த்தக வாய்ப்புக்கள் திறந்து விடப்பட்டமை என்பனவற்றால் நன்மையடைந்து உள்நாட்டு வர்த்தகம் 2003இல் மேலும் மேம்பட்டது. மொ. உ. உற்பத்தியில் 10 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்யும் உள்நாட்டு வர்த்தகத்துறை 2002 இன் 3.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2003 இல் 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, வர்த்தக நடவடிக்கைகளிலான அரசின் தலையீடு 2003 இல் மேலும் கட்டுப்படுத்தப்பட்டதுடன் ஒரு சில அரச துறை நிறுவனங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருட்களின் வழங்கலுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் (கூ. மொ. வி.) தொழிற்பாடுகள், அதன் மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2003 இல் மேலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன. கூ. மொ. வி. நிறுவனம் ஒரு சில அத்தியவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் தொடர்ந்து ஈடுபட்டதுடன் சில உள்நாட்டு வேளாண்மைப் பொருட்களைக் கொள்வனவு செய்து மொத்த விற்பனையாளராகவும் சில்லறை விற்பனையாளராகவும் தொழிற்படுகிறது. 2003இல் கூ. மொ. வி. நிறுவனம் உள்நாட்டில் நெல்லையும் (1,784 மெற்றிக் தொன்கள்) பயறையும் (263 மெற்றிக்தொன்) கொள்வனவு செய்தது. தனியார் துறைக்கு சதொச றிடெயில் லிமிட்டெட்டின் 40 சதவீதப் பங்கை விற்பதற்கும் சிறப்பு அங்காடிகளுக்கு சமமாக அதன் கிளைகளைத் தரமுயர்த்துவதன் மூலம் பணிகளின் தரத்தை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் (இ.பெ.கூ.) அனுபவிக்கபட்ட தனி உரிமையை இல்லாமற்செய்து இந்தியன் ஒயில் கம்பனி (இஒக) 2003 மாச்சில் உள்நாட்டுச் சந்தையில் நுழைந்தது. சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்ததாலும் இஒக ஆலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட போதிலும் மசகெண்ணெயின் இறக்குமதி இ. பெ. கூ. ஆல் மட்டுமே கையாளப்பட்டது. 2003இல் இ. பெ. கூ. உள்நாட்டுச் சந்தைக்கு முக்கிய பெற்றோலிய உற்பத்தி வழங்குநராகச் செயற்பட்டு சந்தையின் 85 சதவீதமளவிற்கு வகை கூறியது. நாடு முழுவதும், இ. பெ. கூ. 948 பெற்றோல் நிரப்பு நிலையங்களைத் தொழிற்படுத்துவதுடன், இவற்றில் 691 வணிகர்களுக்கும் 257 இ. பெ. கூ இற்கும் சொந்தமானதாகும். 2002 சனவரியில் இ. பெ. கூ ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் முறை 2003 இலும் தொடர்ந்தது.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தபனம் அரசின் நலக்கவனிப்பு நிறுவனங்களுக்கான மருந்தாக்கற் பொருட்களின் ஏக வழங்குநராகவும் 42 சதவீத சந்தைப் பங்குகளுடன் உள்நாட்டுச் சந்தைக்கான முக்கிய வழங்குநராகவும் விளங்குகின்றது. இலங்கை அரசாங்க மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 48 விநியோகத்தர்கள் 17 ராஜ்ய ஒசுசல விற்பனை நிலையங்கள், 37 அங்கீகாரமளிக்கப்பட்ட ஒசுசல விற்பனை நிலையங்கள் மற்றும் 17 அங்கீகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர் ஆகியோரைக்கொண்ட நாடு தளுவிய விற்பனை வலையமைப்பினைக் கொண்டிருக்கின்றது. பிரதானமாக இரசாயனப் பொருட்கள், ரயர்கள் மற்றும் உந்து ஈருருளிகள் என்பனவற்றின் விற்பனையில் ஈடுபடும் எஸ் ரி சி ஜெனரல் றிரேடிங் கம்பனி லிமிட்டெட் 2002 இல் அமைப்பு ரீதியிலான மாற்றத்துக்குள்ளானது. லங்கா சலூசல லிமிட்டெட் 24 விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் விற்பனை நிலையங்கள் மூலம் பிரதானமாக புடவைகள் மற்றும் தைத்த ஆடைகளை இறக்குமதி செய்து விநியோகிக்கின்றது. 2003 இல் இலவச பாடசாலைச் சீருடைத் துணிகளின் விநியோகமும் சலுசல மூலமே தொழிற்படுத்தப்பட்டது. சிலோன் பேற்றிலைஸர் கம்பனி லிமிற்றெட் நாடு முழுவதிற்குமான முக்கிய விநியோகத்தராக விளங்கி 26 சதவீத சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது. இக் கம்பனி நெல், பெருந்தோட்டம் மற்றும் ஏனைய வேளாண்மைத் துறைகளுக்கு தரமான வளமாக்கியை விநியோகிப்பதற்காக நாடு முழுவதும் 30 மாவட்ட வளமாக்கிக் களஞ்சியங்களைப் பேணுகிறது. சமாதான முன்னெடுப்புக்களின் நன்மைகளுடன் சிலோன் பேற்றி லைசர் கம்பனி லிமிற்றெட் 2003 இல் கிழக்கு

மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சியிலும் வளமாக்கிச் சந்தையில் நுழையக் கூடியதாக இருந்தது.

2003இல் கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை மற்றும் மொத்த விற்பனை ஆகிய வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. தனியார் துறையின் வலுவான பங்கேற்புக்கு மத்தியிலும் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்தப் புரள்வு 2002 இன் ரூ. 36.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 45.5 மில்லியனுக்கு 26 சதவீதத்தால் அதிகரித்தது. இப் பணிகள் 311 கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் 121 புதிய விற்பனைக் நிலையங்களை உள்ளடக்கியிருக்கும் 8,132 சில்லறை விற்பனை நிலையங்களின் ஊடாக அளிக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் அதன் ஏனைய வியாபார செயற்பாடுகளுடன் சமூர்த்தி நன்மை பெறுவோருக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் உலர் உணவுகளைப் பங்கீடு செய்வதற்கும் பொறுப்பாக இருந்தன. 2003இல் இவை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுகளை விநியோகித்தன. இச் சங்கங்கள் கிராமியப் பகுதிகளிலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து நெல், மரக்கறிகள் மற்றும் பால் என்பனவற்றையும் கொள்வனவு செய்தன.

விலைக் கட்டுப்பாட்டில் அரசின் நேரடித் தலையீட்டைக் குறைக்கும் அதே வேளையில், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் ஆகிய இரு பகுதியினருக்கும் நியாயமான விலைகளை உறுதிப் படுத்துவதற்காக சந்தையை அடிப்படையாகக் கொண்ட விலைப் பொறிமுறைகளை வசதிப்படுத்தவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1999 இல் மத்திய வங்கியினால் தொடக்கி வைக்கப்பட்ட முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழ் முன்னோடிச் செயற்றிட்டமொன்று 2002 ஏப்பிரலுக்கும் 2003 யூனுக்குமிடையே நடைமுறைப்படுத்தப்பட்டது. இச் செயற நிட்டத்தின் கீழ், நாட்டின் அனைத்துப் பிரதான வேளாண்மைப் பகுதிகளிலும் பெருமளவும் பங்கேற்புடன் பல விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப் பட்டன. முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழ், ஒரு குறிப்பிட்ட பயிரின் அறுவடைக்காலத்தின்போது இணங்கிய விலை மற்றும் அளவு என்பனவற்றில் வேளாண்மையாளர்களும் வாங்குநர்களும் உடன் படிக்கைகளில் நுழையுமாறு ஊக்கப்படுத்தப் படுவதன் மூலம் வேளாண்மையாளரின் உற்பத்திக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துகிறது. 2003 இல் சோளம், நெல், திணை, சோயா அவரை, பயறு மற்றும் ஏனைய பயிர்கள் போன்ற பல வகையான பயிர்களுக்கான 38,007 முன்நோக்கிய விற்பனை உடன்படிக்கை கைச்சாத்திட்டப் பட்டதன் மூலம் 42,374 வேளாண்மை யாளர்கள் பயனடைந்தனர். முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையானது வேளாண்மை யாளர்களால் பெறப்படும் விலைகளில் தளம்பல்களைக் குறைக்கும்.

வர்த்தக மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சின் புதிய ஒழுங்கு முறைப்படுத்தல் பிரிவான இலங்கை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2003 இன் 9ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் கீழ் 2003 மாச்சில் நிறுவப்பட்டது. இது நியாய வர்த்தக ஆணைக்குழுவையும், உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தையும் இணைத்ததன் மூலம் ஏற்படுத்தப்பட்டது. நுகர்வோரைப் பாதுகாத்தல், வினைத்திறன் மிக்க போட்டியை ஊக்குவித்தல், நுகர்வோர் போட்டி விலைகளில் பொருட்கள் மற்றும் பணிகளை பெறக் கூடிய போதுமான வழிகளை உறுதிப்படுத்துவதற்காக உள்நாட்டு வர்த்தகத்தை ஒழுங்கு விதிமுறைப்படுத்தல் என்பனவே இவ் அதிகார சபையின் முக்கிய நோக்கங்களாகும். 2003இல் ஐந்து பொருட்கள் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதன்படி, சீமெந்து, திரவப் பெற்றோலிய வாயு, பால்மா, நுளம்புச் சுருள்கள் மற்றும் தீப்பெட்டிகள் என்பவற்றின் விலை அதிகரிப்புக்களுக்கு இதன் ஒப்புதல் தேவைப்படுகிறது. இத்துடன், பல மாவட்டங்களிலுள்ள மாணவர்கள், வியாபாரச் சமூகம் மற்றும் ஆசிரியர்கள் என்போருக்காக பல எண்ணிக்கையான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக 2003 இறுதியில் 5 சிறப்பு வாய்ந்த பொருளாதார நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன. மேலும் 7 சிறப்புவாய்ந்தபொருளாதார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் 13 சிறப்புவாய்ந்த பொருளாதார நிலையங்களை 2003 இல் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையங்கள் பொருட்களுக்கான நியாய விலையைப் பெற்றுக் கொடுப்பதற்காக வேளாண்மையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் ஆகிய இரு பகுதியினருக்கும் வசதியளிக்கும்.

### 9.14 சுற்றுலா

சமாதானத்துக்கான மிகச் சிறந்த வாய்ப்புக் களுடன், இலங்கை நீடித்து நிலைத்திருக்கக் கூடிய பொழுதுபோக்குத்துறை ஒன்றை நிறுவுவதற்கும், இதன் மூலம் பெறப்படும் நன்மைகள் பெரும்பாலான மக்களைச் சென்றடையும் வகையில் விரிவாக்குவதையும் நோக்காகக் கொண்டுள்ளது. இத்திட்டமானது கூடியளவில் செலவு செய்யும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை முன்னேற்றுவதன் மூலம் வருவாய்களை அதிகரிக்கச்

செய்வதாகும். இதைச் செய்வதற்கு வான் பயணம், தங்குமிட வசதி, சந்தைப்படுத்தல் மற்றும் மனிதவளங்கள் போன்ற உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமாகும். வான் பயணத்தில் இருக்கையின் இயலளவை அதிகரிப்பதற்காக இலங்கை பல நாடுகளுடன் இருபுடை உடன்படிக்கைகளில் நுழைந்தது. சுற்றுலா விடுதிகள் மற்றும் ஏனைய வகை இருப்பிடங்களின் கட்டுமானத்தை மேம்படுத்துவதன் மூலம் தங்குமிட இயலளவு அதிகரிக்கப்பட்டது. மனித வளங்களை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். எனினும், வீதிகள், மின் மற்றும் தொடர்பூட்டல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகளில் தடைகள் காணப் படுகின்றன.

2003 இல் இலங்கை அதன் இலக்கான 500,000 சுற்றுலா வருகைகளை விஞ்சி 500,642இனை அடைந்தது. இதுவே, இதுவரையில் இலங்கைக்கு வந்த சுற்றுலா வருகைகளின் அதிகூடிய எண்ணிக்கையாகும்.

வரைபடம் 9.10
மாதாந்தச் சுற்றுலாப் பயணிகள் வருகை




வரைபடம் 9.11
சுற்றுலாப் புள்ளி விபரங்கள் (1997 = 100)




சுற்றுலா வருகைகள் 27.3 சதவீதத்தால் அதிகரித்தன. யுத்தநிறுத்தம் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் நன்மைகள் சுற்றுலாத்துறையில் தீவிரமாக உணரப் பட்டன. உலகப் பொருளாதாரத்தின் குறிப்பாக

அட்டவணை 9.13
சுற்றுலாப் புள்ளி விபரங்கள்

| விடயம் | 2001 | 2002 | 2003 (அ) | சதவீத மாற்றம் 2002 | சதவீத மாற்றம் 2003 |
|---|---|---|---|---|---|
| 1. சுற்றுலா வருகைகள் | 336,794 | 393,171 | 500,642 | 16.7 | 27.3 |
| 2. சுற்றுலா இரவுகள் ('000) | 3,342 | 3,989 | 4,700 | 19.4 | 17.8 |
| 3. தங்கும் அறை விகிதம் (%) | 42.1 | 43.1 | 53.2 | 2.4 | 23.4 |
| 4. மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.மில்.) | 19,034 | 23,724 | 31,209 | 24.6 | 31.5 |
| 5. தலைக்குரிய சுற்றுலாப் பயணச்செலவு (ரூபா) | 56,515 | 60,340 | 62,338 | 6.8 | 3.3 |
| 6. மொத்தத் தொழில் நிலை | 80,904 | 87,600 | 115,000 | 8.3 | 31.3 |
| நேரடி | 33,710 | 36,500 | 50,000 | 8.3 | 37.0 |
| மறைமுக | 47,194 | 51,100 | 65,000 | 8.3 | 27.2 |

(அ) தற்காலிகமானவை. மூலங்கள்: சுற்றுலாச் சபை. இலங்கை மத்திய வங்கி.

மேற்கு ஐரோப்பாவின் மீட்சியும் உச்ச வருகைகளுக்குப் பங்களிப்புச் செய்தது. 2003 இல் சுற்றுலாக் கைத்தொழிலிலிருந்தான மொத்த வருவாய் 2002 இன் ஐ. அ. டொலர் 248 மில்லியனிலிருந்து 2003 இல் ஐ. அ. டொலர் 324 மில்லியனுக்கு 39 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கை சுற்றுலாச் சபை 2004 இல் 650,000 சுற்றுலா வருகைகள் கொண்ட இலக்கை அடைவதற்கு எதிர்பார்க்கின்றது. இது விசேடமாக உச்ச பருவகாலங்களில் ஏற்கனவே இருக்கும் அறை இயலளவு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் முழுமையான பயன்பாட்டிற்கு வழிவகுக்கும். 2003 திசெம்பரில் அறையில் தங்கும் வீதம் கொழும்பு நகரத்தில் 77 சதவீதத்திற்கும், புராதன நகரங்கள் மற்றும் தெற்குக் கரையில் 64 சதவீதத்திற்கும் அதிகரித்தது. போதுமானதற்ற பறப்புக்களின் எண்ணிக்கை மற்றும் இருக்கை இயலளவு என்பன சுற்றுலாக் கைத்தொழிலின் விரிவாக்கத்துக்கான முக்கிய தடைகளாக விளங்குகின்றன.

தங்குமிட வசதியை அதிகரிக்கும் பொருட்டு சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்வதற்காகப் பல அமைவிடங்கள் இலங்கை சுற்றுலாச் சபையால் இனங்காணப்பட்டுள்ளன. பன்னாட்டு ஒத்துழைப்புக்கான யப்பானிய வங்கியால் நிதியிடப்பட்ட தென் மேற்குக் கரைச் சுற்றுலா மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தென்மேற்குக் கரையில் எட்டு வலயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. டெடுவ மற்றும் மாறவிலப் பகுதிகளில் உள்நாட்டு நீர்நிலைகளைக் கொண்ட இரண்டாயிரம் ஏக்கரைக் கொண்ட சதுப்பு நிலத்தை முக்கிய சூழல் சுற்றுலா அமைவிடமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்காக இனங்காணப் பட்டுள்ளது. பழைய மாளிகைகளையும் அரச பங்களாக்களையும் சுற்றுலாப் பிரயாணிகளின் தங்குமிட வசதிக்காக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட முதலீட்டுச் சபையின் செயற்றிட்டம் நடைமுறையில் இருக்கிறது.

சுற்றுலா வருகைகளில் பருவகால மாறுபாடுகள் காணப்படுவதால் உச்சப் பருவகாலமல்லாத காலத்தில் ஏற்கனவே இருக்கும் இயலளவைப் பயன்படுத்தும் வகையில் ஆசியச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவிப்பதற்கு இலங்கை சுற்றுலாச்சபை மற்றும் தனியார்துறை ஏற்பாட்டாளர்களால் ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. முக்கிய இலக்கிடப்பட்ட சந்தைகளாக இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், தாய்லாந்து, மலேசியா மற்றும் சீனா என்பன விளங்குகின்றன. 2002 இல் இலங்கை அலுவல்சார் சுற்றுலா சேரிடமாக சீனாவினால் இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்து 2003 இல் ஊக்குவிப்புப் பிரசாரங்களை ஆரம்பித்ததன் மூலம் தனியார்துறை இதற்கு சாதகமாக பதிலிறுத்தது. இது பெரிய அளவிலானதும் விரைவாக வளர்ச்சி அடைந்துவருவதுமான சந்தையை அடையக் கூடிய வாய்ப்பை வழங்குகிறது. சீனாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் 2002 இன் 4,338 இலிருந்து 2003 இல் 7,251 இற்கு 67 சதவீதத்தால் அதிகரித்தன.

பறப்புக்களின் எண்ணிக்கையில் காணப்படும் தடைகளை அகற்றுவதற்காக சிறீலங்கன் எயர்லைன்சு சேரிடங்களுக்கான பறப்புக்களின் எண்ணிக்கையையும் சேரிடங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தது. சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சானது மாலை தீவுக்கும் இலங்கைக்குமிடையே சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மாலை தீவுடன் இருபுடை உடன்படிக்கையொன்றில் மேயில் கைச்சாத்திட்டது. இதே மாதிரியான கூட்டு உடன்படிக்கையொன்று 2003 ஒகத்தில் பாகிஸ்தானுடன் கைச்சாத்திடப்பட்டது. மேலும் இருபுடை வான்பணிகளை வழங்குவதற்காக ஓமான், சிங்கப்பூர், கட்டார், எகிப்து, சுவிற்சர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், பிரான்சு, மற்றும் இந்தோனேசியா ஆகிய மேலும் எட்டு நாடுகளுடன் இலங்கை ஒழுங்கு முறைகள் குறித்து கலந்துரையாடியது. ஏனைய பல வானூர்தி நிறுவனங்களும் பறப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்தன.

சிறீலங்கன் எயர்லைன்சு 21 நாடுகளின் 33 சேரிடங்களுக்கு பறப்புக்களை தொழிற்படுத்துகின்றது. இந்தியா மற்றும் பாகிஸ்தானிலிருந்தான சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புடன் சிறீலங்கன் எயர்லைன்சு 2003 மேயில் கொச்சினுக்கும் 2003 யூனில் கராச்சிக்கும் மேலதிக பறப்புக்களை அறிமுகப்படுத்தியது. மலேசியன் எயர்லைன்சு மற்றும் கட்டார், ஓமான், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து தொழிற்படும் வானூர்தி நிறுவனங்கள் அவற்றின் வாராந்தப் பறப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கையில் சைப்பிரஸ் எயார்வேஸ், ஏறோபுளொட் மற்றும் மாட்டின் எயர் என்பன இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் பறப்புக்களை 2003 இல் ஆரம்பித்தன. இதன் விளைவால், அட்டவணையிடப்பட்ட பயணிகள் வானூர்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 2002 இன் 20 இலிருந்து 2003 இல் 23 இற்கு அதிகரித்தது. 2003 இல் ஒப்பந்த அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்ட பறப்புக்களின் எண்ணிக்கை 2002 இன் 4 பறப்புக்களுடன் ஒப்பிடுகையில் 7 ஆக விளங்கியது. எயர் மொனாச்சும், விம் எயர்லைன்சும் முறையே இங்கிலாந்து கிறிக்கெட் சுற்றுப்பயணம், கண்டி பெரகரா நடைபெற்ற உச்சக் காலப்பகுதியில் மட்டும் தொழிற்பட்டன. மேலும், இந்தியாவிலிருந்து அதிகரித்து வரும் கேள்வியை எதிர்கொள்வதற்கு இரு நாடுகளிடையேயான பறப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கான கப்பற் பணியை தொடங்குவதற்குமான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப்பயணிகளில் பெரும்பாலானோர் (81 சதவீதம்) விடுமுறைக்காகவும் கிட்டத்தட்ட 19 சதவீதமானோர் வியாபாரம், நண்பர்கள் மற்றும் உறவினர்களைப் பார்க்க வருதல், சமய மற்றும் கலாச்சார நோக்கங்கள் போன்ற ஏனைய நோக்கங்களுக்காக வந்தனர். மொத்த வருகைகளில், 78 சதவீதமானோர் பிரதேசங்களுக்கிடையேயான வழமையான பறப்புக்கள் மூலமும் 19 சதவீதமானோர் பிரதேசங்களுக்கான வழமையான பறப்புக்கள் மூலமும், 3 சதவீதமானோர் ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்கள் மூலமும் பயணம் செய்தனர். சிறீலங்கன் எயர்லைன்ஸ், 2002 இன் 52 சதவீதத்துடன் ஒப்பிடுகையில்

**அட்டவணை 9.14**
**பிரதேச அடிப்படையில் சுற்றுலா வருகைகள்**

| பிரதேச அடிப்படையில் | 2002 | 2003 (அ) | மாற்றம் 2003/02 |
|---|---|---|---|
| மேற்கு ஐரோப்பா | 200,295 | 255,169 | 27.4 |
| இதில்; ஐக்கிய இராச்சியம் | 67,533 | 93,278 | 38.1 |
| சேர்மனி | 55,170 | 58,908 | 6.8 |
| பிரான்ஸ் | 19,989 | 28,585 | 43.0 |
| இத்தாலி | 12,177 | 15,654 | 28.6 |
| ஆசியா | 143,064 | 177,351 | 24.0 |
| இதில்; கொங்கொங் | 3,759 | 3,075 | -18.2 |
| இந்தியா | 69,960 | 90,603 | 29.5 |
| யப்பான் | 13,602 | 17,115 | 25.8 |
| வட அமெரிக்கா | 19,866 | 25,110 | 26.4 |
| அவுத்திரலாசியா | 13,209 | 22,965 | 73.9 |
| கிழக்கு ஐரோப்பா | 8,079 | 10,633 | 31.6 |
| ஏனையவை | 8,658 | 9,414 | 8.7 |
| மொத்தம் | 393,171 | 500,642 | 27.3 |

(அ) தற்காலிகமானவை. மூலங்கள்: சுற்றுலாச் சபை. இலங்கை மத்திய வங்கி.

2003 இல் 51 சதவீத சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வந்தது.

உள்நாட்டு மற்றும் பிராந்தியம் ஆகிய இரண்டிலுமான தேவைகளைத் திருப்தி செய்யும் பொருட்டு பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலாச் சபை பிராந்திய பயிற்சி நிலையமொன்றை நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ளது. பணிகளின் திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான சுற்றுலா அபிவிருத்திச்சபை, வெளிநாடுகளில் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தலை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தைப்படுத்தல் பணியகம், ஆளணியைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சி நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களாக இலங்கை சுற்றுலாச் சபையைப் பிரிப்பதன் மூலம் புதிய சுற்றுலாச் சட்டத்தின்கீழ் இலங்கை சுற்றுலாச்சபை மீளமைக்கப்படவிருக்கின்றது.

முன்மொழியப்பட்ட மூன்று நிறுவனங்களையும் நிதியிடுவதற்கான நிதியங்களை உருவாக்குவதற்காக புதிய தீர்வைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. வானூர்தி நிலைய வெளிச் செல்லல் கட்டணம் 2003 செத்தெம்பர் 1 இலிருந்து ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 5 ஆல் அதிகரிக்கப் பட்டது. இத்திருத்தத்துடன், வானூர்தி நிலைய வெளிச்செல்லல் கட்டணத்திலிருந்தான வருவாய்கள் 2002 இன் ரூ. 393 மில்லியனிலிருந்து 2003 இல் ரூபா 600 மில்லியனுக்கு 53 சதவீதத்தால் அதிகரித்தன. 2003 செத்தெம்பரில் இலங்கைச் சுற்றுலாச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்களின் புரள்வின் மீது 1 சதவீத தீர்வை விதிக்கப்பட்டது.

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூலமாக மேற்கு ஐரோப்பா தொடர்ந்து விளங்கி, மொத்த வருகைகளின் 51 சதவீதத்திற்கு வகைகூறி 2002 ஆம் ஆண்டை விட 27 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இந்தியாவால் (30 சதவீதம்) முன்னணி வகிக்கப்படும் ஆசியாவிலிருந்தான வருகைகள் 24 சதவீதத்தால் அதிகரித்து 2002 இன் 36 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருகைகளில் 35 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் பாரிய மூலமான ஐக்கிய இராச்சியத்திலிருந்தான வருகைகள், திசெம்பரில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி இலங்கைக்கு விஜயம் செய்தமை மற்றும் பயண ஏற்பாட்டாளர்களால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புப் பொதிகள் காரணமாக 2003 இல் கணிசமானளவில் அதிகரித்திருக்கையில் இந்தியாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் 2003 இல் தொடர்ந்தும் அதிகரித்தன. 2002 இல் சிறீலங்கன் எயர்லைன்சால் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்புப் பிரசாரத்தின் பெருமளவு காரணமாக, இந்தியா சுற்றுலாப் பயணிகளின் இரண்டாவது மிகப்பெரிய மூலமாக மாற்றமடைந்துள்ளது. வடஅமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கிலிருந்தான சுற்றுலா வருகைகள் 2003 இல் முறையே 26 சதவீதம், 32 சதவீதம், 74 சதவீதம் மற்றும் 5 சதவீதத்தால் அதிகரித்தன.

சுற்றுலா விடுதிகளில் வெளிநாட்டு விருந்தினர் தங்கும் இரவுகள், 2002 இன் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2003 இல் 15 சதவீதத்தால் அதிகரித்தன. அறைகளில் தங்கும் ஆண்டு வீதம் 2002 இன் 43 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2003 இல் 53 சதவீதத்திற்கு அதிகரித்தது. அறைகளில் தங்கும் அதிகூடிய வீதம் கொழும்பு நகரத்திலும் (69 சதவீதம்), இதைத் தொடர்ந்து புராதன நகரங்கள் (54 சதவீதம்) மற்றும் கிழக்குக் கரையோரம் (51 சதவீதம்) என்பன காணப்பட்டன. உச்ச பருவகாலங்களில் அதாவது யூலையிலிருந்து ஓகத்து மற்றும் ஒத்தோபரிலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் அறையில் தங்கும் வீதங்கள் குறிப்பிடத்தக்களவில் உயர்ந்து காணப்பட்டன. தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை 2002 இன் 222 இலிருந்து 2003 இல் 233 இற்கு அதிகரித்தது. இவ் அதிகரிப்பு ஆறு பிராந்தியங்களிலும் பரந்து காணப்பட்டது. அவையாவன கொழும்பு பெரும்பாகம் (5), தெற்குக் கரை (3), புராதன நகரங்கள் (-1), கிழக்குக் கரை (2) மற்றும் மலை நாடு (2).

இத்துறையின் நேரடித் தொழில்வாய்ப்பு மற்றும் மறைமுகத் தொழில்வாய்ப்பு ஆகிய இரண்டும் 2003 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளன. சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள், பயண முகவர்கள், சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்கள், வானூர்தி நிறுவனங்கள், களியாட்ட வசதிகளை வழங்கும் முகவர்கள் மற்றும் சுற்றுலாக்கடைகள் என்பவற்றிலான தொழில்கள் நேரடி தொழில்வாய்ப்புக்களாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளீட்டு வழங்குனர்கள், கைவேலைப் பொருட்களின் தயாரிப்பாளர்கள் மற்றும் வழங்குனர்கள் என்போர் மறைமுக தொழிவாய்ப்பை உருவாக்குகின்றார்கள்.

சூழல் சுற்றுலா மற்றும் கலாச்சாரச் சுற்றுலா போன்ற புதிய சுற்றுலாப் பணிகளை அபிவிருத்தி செய்வதற்கான இலங்கையின் உள்ளார்ந்த வளத்தை நிரூபிக்கும் விதத்தில் வனவிலங்குப் பூங்கா, தாவரப் பூந்தோட்டங்கள், மிருகக்காட்சிச்சாலை மற்றும் கலாச்சார முக்கோணப் பிரதேசங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மூலம் பெறப்படும் வருமானம் 2003 இல் அதிகரித்தது. நாட்டின் கவர்ச்சிகரமான இடங்களுக்கு விஜயம் செய்வதற்கு சுற்றுலாப் பயணிகளுக்கு கூடியளவு வாய்ப்புக்களை வழங்குவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் உள்நாட்டு வான்போக்குவரத்து துறையை மேம்படுத்துவதற்காக சிவில் வான்போக்கு

வரத்து அதிகாரசபை நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. டனிடா கலப்பு கொடுகடன் திட்டத்தின் கீழ் டென்மார்க் அரசால் அனுசரணை அளிக்கப்பட்ட நிபுணத்துவக் குழுவுடன் சிவில் வான்போக்குவரத்து அதிகாரசபை செயற் பட்டுக்கொண்டிருக்கிறது. உள்நாட்டு பயணிகள் போக்குவரத்தில் எக்ஸ்போ அவியேசன், லயன் எயார், செறென்டிப் எக்ஸ்பிரஸ் லிமிட்டெட் ஆகிய மூன்று வானூர்தி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. 2003 இல் இவை கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே 100,000 இற்கும் அதிகமான பயணிகளை ஏற்றி இறக்கின.

இலங்கை மாநாட்டுப் பணியகம் கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் சுற்றுலாவை 2003 இல் தொடர்ந்து ஊக்குவித்தது. இலங்கை, விசேடமாக தெற்காசியப் பிராந்தியத்தில் மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்கான பிரபல்யமான இடமாக விளங்குகின்றது. 2003 இல், இச் சுற்றுலாவின் கீழ் பெரும்பாலானோர் இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிலிருந்து வந்தனர். இச்சுற்றுலாவுக்கான மிக முக்கிய மூலமாக இந்தியா விளங்குவதால், இந்தியாவுக்கான பறப்புக்களின் எண்ணிக்கையை சிறீலங்கன் எயர்லைன்ஸ் அதிகரித்தது. பல பன்னாட்டுக் கம்பனிகள் 30 – 350 வரையிலான ஆட்களைக் கொண்ட தொகுதியினருக்கான அவற்றின் கம்பனிக் கூட்டங்களை இலங்கையில் நடாத்தின.

உலக சுற்றுலா நிறுவனத்திடமிருந்து பெற்ற தொழில்நுட்ப உதவியுடன் சுற்றுலா செய்மதிக் கணக்கு முறைமையை[1] 2004 இல் நடைமுறைப்படுத்துவதற்குத் இலங்கைச் சுற்றுலாச்சபை தீர்மானித்தது. உலக சுற்றுலா நிறுவனம், சுற்றுலாக் கைத்தொழிலுக்காக உலகளாவிய ரீதியிலான ஒருங்கிணைந்ததும் துல்லியமானதுமான தரவுத்ததளமொன்றை அபிவிருத்தி செய்வதற்காக சுற்றுலா செய்மதி கணக்கொன்றை 1995 இல் அறிமுகப்படுத்தியது. சுற்றுலாச் சபை சுற்றுலா செய்மதிக் கணக்கு முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருப்பதுடன் இது கொள்கை வகுப்போர் மற்றும் இத்தொழில் துறையில் உள்ளவர்களுக்காக பயன்தரும் தகவலை வழங்கும்.

இருபுடை மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான முக்கிய துறைகளில் ஒன்றாக 2003 இல் நடைபெற்ற பல மாநாடுகளில் சுற்றுலா இனங்காணப்பட்டுள்ளது. "பிம்ஸ்ரெக்" (வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பு) இன் பன்னாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்களின் கூட்டம் 2003 இல் இலங்கையில் நடைபெற்றது. "பிம்ஸ்ரெக்" நாடுகளுக்கான சுற்றுலாப் போக்குவரத்தை ஊக்குவித்தல், பிராந்தியங்களுக்குள்ளேயான பௌத்த யாத்திரைக்கான பயணம் என்பன இக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப் பட்டன. சுற்றுலாவை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன 2004 இல் இலங்கையில் நடைபெற வுள்ள பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர வலய அமைப்பின் அடுத்த அமைச்சர் மட்டத்திலான கூட்டத்தில் கலந்துரையாடலுக்கான விசேட பிரச்சினை களில் ஒன்றாக விளங்குகின்றது. ஜோர்டானுடனான சுற்றுலாவின் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமைச்சரவை அங்கீகரித்தது.

1. உலக சுற்றுலா நிறுவனம், சுற்றுலாக் கைத்தொழிலுக்காக உலகளாவிய ரீதியிலான ஒருங்கிணைந்ததும் துல்லியமானதுமான தரவுத்தளமொன்றை அபிவிருத்தி செய்வதற்காக சுற்றுலா செய்மதி கணக்கு முறைமையொன்றை 1995 இல் அறிமுகப்படுத்தியது. இம் முறைமையில் சேர விரும்பும் நாடுகள் உலக சுற்றுலா நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டல்களின் படி அவற்றின் சுற்றுலா தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.